விலை : 20.00
பக்கங்கள்:இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 தை 11 செவ்வாய்க்கிழமை (24.01.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 036

## போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறை இன்றி

# காலம் கடத்துவதற்காகவே நல்லிணக்க ஆணைக்குழு!

## சிவில் சமூக அமைப்புக்கள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றம் தொடர்பான விசாரணைப் பொறிமுறையை நிறுவுவதற்கான காலத்தை கடத்துவதற்காகவே இலங்கை அரசாங்கம் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவுவதற்கு உத்தேசித்துள்ளதென சிவில் சமூக அமைப்புகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

23 ஆம் பக்கம் பார்க்க...


கலவரமாக மாறிய ஜல்லிக்கட்டு போராட்டம்

## படகில் கோளாறு
## 53 மாணவர்கள் கடலில் தத்தளிப்பு

(யாழ்ப்பாணம்)

நயினாதீவிலிருந்து வேலணை நோக்கி படகில் (லோஞ்) பிரயாணம் மேற்கொண்ட 53 பாடசாலை மாணவர்கள் 2 மணி நேரம் கடலில் தத்தளித்த அச்சமூட்டும் சம்பவமொன்று நேற்றுக்காலை இடம்பெறறுள்ளது.

23 ஆம் பக்கம் பார்க்க...

### லசந்த படுகொலை
## பொன்சேகாவிடம் மீள விசாரணை

(கொழும்பு)

சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை தொடர்பாக முன்னாள் இராணுவத்தளபதியும், அமைச்சருமான பீல்ட் மாரஷல் சரத்பொன்சேகாவிடம் மீண்டும்இன்று விசாரணை நடத்தப்படவுள்ளது.

பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா

24 ஆம் பக்கம் பார்க்க...

# எதிர்ப்புக்கள் ஏற்படுமிடத்து பறிபோகும் வீட்டுத்திட்டம்

## நாவற்குழி மேற்கு பகுதியிலுள்ள மக்கள் அந்தரிப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய வீடமைப்பு அதிகாரசபையால் நாவற்குழி மேற்கு பகுதியில் உள்ள மக்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுத்திட்டத்திற்கு எதிர்ப்புகள் ஏற்படுமிடத்து குறித்த வீட்டுத்திட்டம் முற்றுமுழுதாக பறிபோகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாவற்குழி மேற்கு பகுதியில் தேசிய வீடமைப்பு அதிகாரசபைக்கு சொந்தமான காணியில் கடந்த 2010ஆம் ஆண்டில் இருந்து சில குடும்பங்கள் அத்துமீறி குடியேறியிருந்தன. அதனை தொடர்ந்து யாழ்.மாவட்டத்தில் உள்ள வெவ்வேறு பகுதிகளிலும் அத்துமீறி குடியேறிருந்த குடும்பங்கள் கடந்த கால அரசாங்க

23 ஆம் பக்கம் பார்க்க...

## பரராஜசிங்கம் கொலை;
## பிள்ளையானுக்கு மீளவும் மறியல்

(மட்டக்களப்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப்பரராஜசிங்கம் படுகொலை தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ள கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் எனப்படும் சிவனேசத்துரை சந்திரகாந்தன் உள்ளிட்ட நால்வரின் விளக்கமறியல் தொடர்ந்தும் நீடிக்கப்பட்டு

24 ஆம் பக்கம் பார்க்க...

### முகவரூடாக சுவிஸ் செல்ல முயற்சித்த
## வடமராட்சி இளைஞரொருவர் ஆபிரிக்காவில் அடித்துக்கொலை



24 ஆம் பக்கம் பார்க்க...

## ஜல்லிக்கட்டை நடத்த அனுமதி நிறைவேறியது நிரந்தர சட்டம்

### போராட்டம் முழு வெற்றி என அறிவிப்பு

(சென்னை)

• தமிழக சட்டசபையில் நேற்று தாக்கல் செய்யப்பட்ட புதிய நிரந்தர சட்டத்திற்கான சட்ட முன்வரைவு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

ஜல்லிக்கட்டு நடத்த தற்காலிகமாக இயற்றப்பட்ட அவசர சட்டத்திற்கு பதிலாக புதிய நிரந்தர சட்டத்தை இயற்றுவதற்கான சட்ட முன்வரைவை தமிழ்நாடு சட்டசபையில் முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் தாக்கல்

23 ஆம் பக்கம் பார்க்க...

## கிணற்றில் வீழ்ந்த முதியவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

கிணற்றில் விழுந்த முதியவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று காலை 3 மணியளவில்சுதுமலை வடக்கு மானிப்பாய் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தினை சேர்ந்த

23 ஆம் பக்கம் பார்க்க...

## ஜெனிவாக்கூட்டத் தொடருக்கான கண் துடைப்பே மத்தியஸ்தர் சபை

### சமூக ஆர்வலர்கள் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

நீதி அமைச்சின் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவினால் காணிப்பிணக்குகளை தீர்பதற்கென அமைக்கப்பட்ட விசேட மத்தியஸ்த சபை (காணி) ஜெனிவா கூட்டத்தொடருக்கான கண்துடைப்பே அன்றி மக்களின் பிணக்குகளை தீர்ப்பதற்காக அமைக்கப்படவில்லை என சமூக ஆர்வலர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

நீதி அமைச்சின் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவினால் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் புதிதாக அமைக்கப்பட்ட விசேட மத்தியஸ்த சபைகளின் (காணி) மத்தியஸ்தர்களுக்கான

23 ஆம் பக்கம் பார்க்க...

### ஆட்சியை கவிழ்ப்பதற்கு
## ஜனாதிபதி முன்வந்தால் உதவ தயார்-கம்மன்பில

(கொழும்பு)



பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனான உயிர் அச்சுறுத்தலான தேசிய அரசாங்கத்தை கலைத்து விட்டு புதிய அரசாங்கமொன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி மைத்

24 ஆம் பக்கம் பார்க்க...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## தேவை

திருநெல்வேலியில் உள்ள எமது நிறுவனத்தின் சிறிய விடுதிக்கு சமையல் வேலை தெரிந்த இரவு/பகல் நேர ஆண் தொழிலாளி தேவை.

**தொடர்பு :**
**0779530496, 0212222478**

(7596)

## தேவை

திருநெல்வேலியிலுள்ள எமது பட்டய கணக்காளர் நிறுவனத்திற்கு கணக்கியல் பயிலுநர்கள் தேவை.
A/L வர்த்தகப்பிரிவில் சித்தியடைந்தோர், Chartered, CIMA, HNDA Students விண்ணப்பிக்கலாம்.

**தொடர்பு :-**
**077 9530 496**

(7598)


# நல்லாட்சி அரசாங்கத்துக்கு பைத்தியம் பிடித்துவிட்டது!

## அபேகுணவர்த்தன எம்.பி சாடல்

மைத்திரி - ரணில் தலைமையிலான நல்லாட்சி அரசாங்கத்திற்கு பைத்தியம் பிடித்திருப்பதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஒன்றிணைந்த எதிர்க் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித்த அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பு வெலிக்கடை சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விமல் வீரவன்சவை சந்தித்துவிட்டு திரும்பிய நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித்த அபேகுணவர்தன ஊடகங்களுக்கு தனது கருத்தை வெளியிட்டார்.

நாட்டிலுள்ள மக்களில் 90 வீதமான மக்கள் இந்த அரசாங்கம் தங்களுக்கு வேண்டாம் என்பதையே வலியுறுத்துகின்றனர். இன்று அரசாங்கத்திற்கு வாக்களித்த ஒருவரை தேடுவது மிகவும் சிரமமாக இருக்கின்றது.

ஊடகவியலாளர்களும் இந்த அரசாங்கத்தை வெறுப்பதாக என்னிடம் தெரிவித்துள்ளனர். இன்று தேய்காய் ஒன்று இரண்டாக விற்பனை செய்யப்படுவதில்லை. கிலோ கணக்கில் விற்பனை செய்யப்படுகின்றது. தேய்காய் கிலோ ஒன்று 75 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகிறது. தேய்காய் விற்பனை செய்யப்படுகின்ற விலையைப் பார்க்கும்போது இன்று அரசாங்கத்திற்கு விரோதமாக தேய்காய் உடைப்பதற்குக்கூட முடியாமலிருக்கிறது.

ஒருவருக்கு மற்றொருவர் இடையூறாக காணப்பட்டால் அவருக்கு குறித்த நபர் துன்பம் கொடுப்பதானது புத்திசுயாதீனமற்ற செயல் என்று விஞ்ஞான ரீதியிலான விளக்கமொன்று காணப்படுகிறது. விமல் வீரவன்ச அவ்வாறே சிறை வைக்கப்பட்டுள்ளார். இதன் ஊடாக இந்த அரசாங்கத்திற்கு இன்று பைத்தியம் பிடித்துள்ளது. அரசாங்கத்தை கவிழ்க்கும் புரட்சி நுகேகொடையிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அது முன்னெடுக்கப்படும் என்றார். (செ-11)

# க.பொ.த (சா/த) மாணவர்களுக்கு தே.அ. அட்டை அடுத்த வாரத்தில்

(கொழும்பு)

2017 கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான தேசிய அடையாள அட்டையை வழங்குவதற்கான சுற்றுநிருபம் பாடசாலை அதிபர்களுக்கு அடுத்த வாரத்தில் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

15 வயதைப் பூர்த்தி செய்துள்ள மற்றும் மார்ச் 31ஆம் திகதி 15 வயதை நிறைவு செய்யும் மாணவர்கள் இதற்காக விண்ணப்பிக்க முடியுமென்று ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட விண்ணப்பப்பத்திரங்களை பாடசாலை அதிபர்கள் மார்ச் 31ஆம் திகதிக்கு முன்னர் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு முன்கூட்டியே தேசிய அடையாள அட்டையை விநியோகிப்பதற்கு இந்த நடவடிக்கை பெரிதும் உதவும் என்பதை ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் பாடசாலை அதிபர்களின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார்.

மாணவர்கள் பாடசாலை அதிபர்கள் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (5)


## மாநகரசபை யாழ்ப்பாணம்

பொது மலசலகூடங்களை சுத்தம் செய்து பராமரிக்கும் சேவை

## பகிரங்க ஏலம்

யாழ்.நகர பொது மலசலகூடங்களின் தொகுதி குத்தகைக்கு வழங்குவதற்காகப் பகிரங்க ஏலம் கூறப்படவுள்ளது. இத்தொகுதியில் உள்ள மலசலகூடங்களாவன,

01. நவீன சந்தை மலசலகூடம் - யாழ்.நகர்
02. நல்லூர் மலசலகூடம் மற்றும் குளியலறை
03. பெரியகடை மரக்கறிச்சந்தை மலசலகூடம் - யாழ்.நகர்
04. பண்ணை சந்தைக்கு முன்பாக உள்ள மலசலகூடம்

| | |
|---|---|
| குத்தகைக் காலம் | : 01.02.2017 தொடக்கம் 31.07.2017 வரை |
| ஏலம் கூறும் திகதியும் நேரமும் | : 31.01.2017 முற்பகல் 10.00 மணி |
| ஆ.கேள்வி | : ரூபாய் 100,000 (VAT நீங்கலாக) |

அறவிடப்படும் கட்டண விபரங்கள் மாநகர சபையால் தீர்மானிக்கப்படும். மேலதிக தகவல்களையும் நிபந்தனைகளையும் நானாவித இறைவரிப்பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.

பொ.வாகீசன்
ஆணையாளர்
மாநகரசபை

(சி-7333)


## 31-ம் நாளில் துயர் பகிர்கின்றோம்



### திரு.கதிரித்தம்பி காளிதாசப்புலவர்

எமது பாடசாலையின் ஆசிரியை திருமதி அனுலா கிசோவர்மா அவர்களின் அன்புத் தந்தையார் திரு.கதிரித்தம்பி காளிதாசப் புலவர் அவர்கள் 25.12.2016 அன்று காலமாகிவிட்டார். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்.
யா/ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம்

(7584)






# மரண அறிவித்தல்



## திருமதி வள்ளிப்பிள்ளை (அன்னமுத்து) தர்மராசா

மந்துவில் கொடிகாமத்தை பிறப்பிடமாகவும் 112, விவேகானந்த நகர் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளிப்பிள்ளை (அன்னமுத்து) தர்மராசா கடந்த (19.01.2017) வியாழக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மராசா அவர்களின் அன்பு மனைவியும், குணசிங்கம் (கிராம அலுவலர், கிளி/ஊற்றுப்புலம்), புஸ்பலதா (விவேகானந்தநகர்), மனோரஞ்சன் (விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்), விஜயலதா (மருந்தாளர், யாழ். போதனா வைத்தியசாலை), சசிலதா ( ஆசிரியர், யா/ பெரியபுலம் ம.வி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கமலராணி (ஆசிரியர், கிளிநொச்சி) மகாதேவா (கிளிநொச்சி), கௌரிதேவி (மருந்தாளர், யாழ். பல்கலைக்கழகம்), ராஜ்கரன் (பிரதி அதிபர், பூம்புகார் CCTMS), ஜெயக்குமார் (தொழில்நுட்ப அலுவலர், தாவரவியற்றுறை, யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பிரியங்கன் (கிளி/ம.வி), தர்ஷிகன் (கிளி/ம.வி), திஷாஜினி (கிளி/ம.வி), நியோகிதன் (மருத்துவ பீட மாணவன், கிழக்கு பல்கலைக் கழகம்), அஜித்குமார் (கிளி/ம.வி), அஸ்விகா (யா/இந்து ஆரம்ப பாடசாலை), அஸ்மிதா (யா/இந்து ஆரம்ப பாடசாலை), அனிசா, மகீபன் (யாழ். இந்துக் கல்லூரி), வைசாலி (யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), ஜதிக்சயா (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), பாபிலன் (சென் ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற கமலா மற்றும் ஞானம்மா, நல்லபிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் கடந்த (20.01.2017) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இரணைமடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்

112, விவேகானந்தநகர்
கிழக்கு,
கிளிநொச்சி.

077 233 9206 (குணசிங்கம்), 077 314 5203 (புஸ்பலதா), 077 666 1141 (மனோரஞ்சன்), 077 260 1376 (விஜயலதா), 077 467 8776 (சசிலதா)

(சி-7331)

# மத்திய வங்கியின் கொடுக்கல் - வாங்கல் விசாரணைக்காக ஜனாதிபதி ஆணைக்குழு

(கொழும்பு)

**இலங்கை மத்திய வங்கியின் பிணை முறி கொடுக்கல் - வாங்கல் தொடர்பாக எழுந்துள்ள குற்றச்சாட்டுக்கள் பற்றி புலனாய்வு மற்றும் விசாரணை மேற்கொண்டு அதற்குரிய சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்காக ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமிப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் சட்டமா அதிபருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.**

## சட்டமா அதிபருக்கு ஆலோசனை

உயர் நீதிமன்ற நீதியரசர், மேல் நீதிமன்ற நீதிபதி மற்றும் கணக்காய்வு நிபுணர் ஆகியோரை உள்ளடக்கிய 3 பேர்அடங்கியஜனாதிபதிஆணைக் குழுவை நியமிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தல் இந்த வாரம் வெளியிடப்படவுள்ளது. குறித்த ஆணைக்குழுவின் விதந்துரைகளுடனான அறிக்கை மூன்று மாதத்தினுள் நிறைவு செய்யப்படும்.

ஆணைக்குழுவின் செயறபாடுகள் வெற்றி பெறுவதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குமாறு ஜனாதிபதி தொடர்புடைய தரப்புக்களிடம் கோரியுள்ளார்.(இ-3)

## நிதி அமைச்சின் ஆலோசகராக அர்ஜீன் மகேந்திரன்

(கொழும்பு)

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் தற்போது நிதி அமைச்சின் ஆலோசகராக பணியாற்றி வருகின்றார் என ஊழல் தடுப்பு முன்னணி குற்றம் சுமத்தியுள்ளது.

நிதி அமைச்சின் சந்திப்புக்களில் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் பங்குபற்றுவதை தடுக்கக்கோரி ஊழல் தடுப்பு முன்னணி, ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

மேலும், மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ள புதிய ஆணைக்குழு ஒன்று நியமித்தமையை தாம் வரவேற்பதாகவும் குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள அர்ஜுன் மகேந்திரன் எவ்வாறு நிதி அமைச்சின் ஆலோசகராக பணியாற்ற முடியும் எனவும் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அர்ஜுன் மகேந்திரன் தற்போதைய மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித் குமார சுவாமி உள்ளிட்ட பலருடன்



நிதி அமைச்சின் கூட்டங்களில் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமை மற்றும் வியாழக்கிழமைகளில் கலந்து கொள்கின்றார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் விரைவில் விசாரணைகள் முன்னெடுக்குமாறு ஊழல் தடுப்பு முன்னணி, ஜனாதிபதிக்கு நேற்றைய தினம் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. (இ-3)

## மகிந்தவுடன் மறுபடியும் பேசுவதா? மீண்டுமொரு முறை சிந்திக்க வேண்டும்

### தென்மாகாண முதலமைச்சர் கருத்து

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் மறுபடியும் பேச்சுவார்த்தை நடத்துவது குறித்து மீண்டுமொரு முறை சிந்திக்க வேண்டும் என தென் மாகாண முதலமைச்சர் ஷான் விஜேலால் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில்ஊடகசந்திப்பின் பொன்றில் நேற்று கலந்து கொண்டுஉரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்துள்ள அவர்,

மகிந்த ராஜபக்ஷவுடன் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று தான் நாம் எதிர்பார்த்து சென்றோம். ஆனால், அவர் வேறு தரப்பினரையும் அழைத்திருந்தார்.

அவர்களை அங்கு அழைத்தமைக்கான காரணம் என்ன என்று எனக்குத் தெரியாது.

நூற்றுக்கு நூறு வீதம் சாதகமான பிரதிபலன் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் நாம் செல்லவில்லை.

இருப்பினும் பாதகமாக சிந்திப்பவர்களும் அல்ல. இரண்டுக்கும் இடைப்பட்ட நிலைப்பாட்டுடனேயே சென்றோம்.

பொது எதிர்க்கட்சியுடன் நடத்திய பேச்சுவார்த்தை முழுமையாக தோல்வியடைந்தது.

அதனால் இரண்டாவது சுற்று பேச்சுவார்த்தைக்கு செல்வதா? என்பது தொடர்பில தான் மீண்டும் ஒருமுறை சிந்தித்துப் பார்க்க வேண்டும் என தென் மாகாண முதலமைச்சர் ஷான் விஜேலால் சில்வா தெரிவித்தார். (இ-3)

## அனைத்துப் பிள்ளைகளுக்கும் இலவச கல்வி உறுதிப்படுத்தப்படும்-ஜனாதிபதி

நாட்டின் அனைத்துபிள்ளைகளுக்கும் இலவசக் கல்வியை உறுதிசெய்து கற்ற பரம்பரையொன்றைக் கொண்ட சமூகத்தைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பு விசாகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவில் நேற்று முன்தினம் முற்பகல் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

வித்தியாலயத்துக்குச்சென்ற ஜனாதிபதி, மாணவிகள் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

விழாவில் உரையாற்றிய ஜனாதிபதி விசாகா கல்லூரியின் நூறு வருட சிறந்த பயணத்தைப் பாராட்டினார்.


புதிய தொழில்நுட்பம், வர்த்தக மயமாதல், போட்டித் தன்மை போன்ற அம்சங்கள் பல்வேறு சவால்களை ஏற்படுத்தியிருக்கின்ற நிலையில் எமது கலாசாரத்தைப் பாதுகாத்து முன்னேறிச்செல்வதற்கு எமது பிள்ளைகள் தயாராக இருக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

1917ஆம் ஆண்டு ஜெரமியஸ் டயஸ் அம்மையாரினால் ஆரம்பிக்கப்பட்ட கொழும்பு விசாகா வித்தியாலயம் இலங்கையில் உள்ள பழைமை வாய்ந்த பௌத்த மகளிர் கல்லூரியாகும்.

கல்லூரியின்நூற்றாண்டை முன்னிட்டு வெளியிடப்பட்ட நினைவு நாணயத்தை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி ஜனாதிபதியிடம் கையளித்தார்.

அமைச்சர்களான ரவி கருணாநாயக்க, கயந்தகருணாதிலக, கல்வி அமைச்சின் செயலாளர்சுனில்ஹெட்டியாராச்சி, கல்லூரியின் அதிபர் சந்தமாலி அவிருப்பொல, ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பழைய மாணவியர் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-3)

## பௌசிக்கு எதிரான வழக்கை விசாரணை செய்ய முடிவு



முன்னாள் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர்ஏ.எச்.எம். பௌசிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை விசாரணை செய்ய நேற்று நீதிமன்றம் நாட்களை தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் ஏபரல் மாதம 5, 6 ஆகிய இரு தினங்களில வ்சாரணைக்கு எடுத்து கொள்வதற்கு கொழும்பு பிரதான நீதவான் லால் பண்டார நேற்று உத்தரவிட்டுள்ளார்.

கடந்த அரசாங்கத்தின்போது வாகனங்களை முறைகேடாக பயன்படுத்தியதால் 10 இலட்சம் ரூபாய் அரசாங்கத்திற்கு நட்டம ஏற்படுத்தியதாக இவர் மீது வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

எனினும்அவர்சட்டத்தரணி ஊடாக மருத்துவ அறிக்கை ஒன்றை முன்வைத்து சுகயீனம் காரணமாக தான் தற்போது கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. (இ-3)

## விமலுக்கு செய்யும் கைமாறு என்ன?

### கம்மன்பில கூறுகிறார்

அரசாங்கத்தை கவிழ்த்து வீட்டுக்கு அனுப்புவதே சிறையில் அடைக்கப்பட்டுள்ள விமல் வீரவன்சவுக்கு செய்யக்கூடிய கைமாறாகும் என நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேசிய சுதந்திர முன்னணியின் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே கம்மன்பில இதனைத் தெரிவித்துள்ளார்.

சமஷ்டி அரசியல் அமைப்பொன்றை உருவாக்குவதற்கு பெரும தடையாக இருந்த காரணத்தினாலேயே விமல்வீரவன்ச சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாகவும்அவர்தெரிவித்தார்.

இந்த அசாங்கம் மேற்குலகிற்கு அடிமைப்பட்டுள்ளது எனவே, இந்த அரசாங்கத்தை கவிழ்த்து வீட்டுக்கு அனுப்புவதே சிறையில் அடைக்கப்பட்டுள்ள விமல் வீரவன்சவுக்கு செய்யக்கூடிய கைமாறாகும். இதற்காக மூன்றாவது விடுதலைப்போராட்டத்தை நடத்த வேண்டி வரும் என உதய கம்மன்பில மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)

## ஜனாதிபதி ஆணைக்குழுவால் விவாதம் வலுவற்றதாகிவிடும்

### கூட்டு எதிரணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் பிணை முறிப்பத்திர மோசடி தொடர்பில் விசாரணை நடத்த விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமிப்பதன் மூலம் நாடாளுமன்றத்தில் நடைபெறும் மோசடி தொடர்பான விவாதம் வலுவற்றதாகிவிடும் என கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

டியூ.குணசேகரவின் கோப் அறிக்கை வெளியிடப்படுவதற்கு முன்னர் நாடாளுமன்றத்தை கலைத்தது போல், ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் விவாதம் நடைபெறவுள்ள நிலையில் விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மத்திய வங்கியின் பிணை முறிப்பத்திர விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்த ஜனாதிபதி விசேட ஆணைக்குழுவை நியமித்துள்ளமை தொடர்பாக கருத்து வெளியிடும் போதே பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்தார்.

இதனிடையே பிணை முறிப்பத்திர விவகாரம் தொடர்பில் கோப் குழு அறிக்கை வெளியிட்டுள்ள நிலையில், ஜனாதிபதி ஆணைக்குழு அவசியமற்றது என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் ஜயதிஸ்ஸ தெரிவித்தார். (இ-3)

# தொடரை வென்றது நியூசிலாந்து

பங்களாதேஷ் அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி, தொடரை கைப்பற்றி கோப்பையை வென்றுள்ளது.

நியூசிலாந்து சென்ற பங்களாதேஷ் அணி இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றது. முதல் போட்டியில் நியூசிலாந்து வென்றது. இரண்டாவது டெஸ்ட் கிறைஸ்ட்சர்ச் நகரில் நடந்தது. முதல் இன்னிங்சில் பங்களாதேஷ் 289 ஓட்டங்கள் எடுத்தது. இரண்டாம் நாள் முடிவில் முதல் இன்னிங்சில் நியூசிலாந்து அணி 7 விக்கெட்டுக்கு 200 ஓட்டங்கள் எடுத்திருந்தது மூன்றாம் நாள் ஆட்டம் மழையால் கைவிடப்பட்டது.

நான்காம் நாள் ஆட்டத்தில் முதல் இன்னிங்சை தொடர்ந்த நியூசிலாந்து அணி 354 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டையும் இழந்தது.

பின் இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய பங்களாதேஷ் அணி 173 ஓட்டங்களுக்கு சுருண்டது.

பின் 109 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற சுலப இலக்குடன் 2வது இன்னிங்சை தொடங்கிய நியூசிலாந்து அணிக்கு ஜீத் ரவால் (33) கைகொடுத்தார். பின் இணைந்த டாம் லதாம் 41 ஓட்டங்களுடனும், கிராண்ட்ஹோம் 33 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றனர்.

இரண்டாவது இன்னிங்சில் நியூசிலாந்து அணி ஒரு விக்கெட்டுக்கு 111 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. (க)



பாராட்டி வாழ்த்துகின்றோம்


திருமதி
**பரமேஸ்வரி சோதிலிங்கம்**
(அதிபர்,
கிளி/சிவபாதகலையகம்
அ.த.க.பாடசாலை)

எமது வித்தியாலய முதல்வர்
திருமதி
**சோதிலிங்கம் பரமேஸ்வரி**
அவர்கள்
முதுகல்விமாணி பட்டம்
பெற்றுள்ளமையை
பாராட்டுவதோடு
மேலும் பல விருதுகள்
பெற்று நீடூழி காலம்
வாழ வாழ்த்துகின்றோம்

**ஆசிரியர் நலன்புரிச்சங்கம்**
**கிளி/சிவபாதகலையகம் அ.த.க**

(C-7336)

# மரண அறிவித்தல்



## வேலுப்பிள்ளை கிருஸ்ணபிள்ளை

முகமாலை எழுதுமட்டுவாளை நிரந்தர முகவரியும், பளை முல்லையடியை வசிப்பிடமாகவும் கொண்ட **வேலுப்பிள்ளை கிருஸ்ணபிள்ளை** காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தெய்வானைப்பிள்ளையின் அன்பு மகனும், மணியம் - செல்லம்மாவின் மருமகனும், சந்திராதேவியின் அன்புக் கணவரும், புஸ்பமாலா (கனடா), கௌசியா (பளை) ஆகியோரின் தந்தையும், வாவு (கனடா), திலகறாஜா ஆகியோரின் மாமனாரும், பெநிற்ரோ (கனடா), ஜெரிக்கா (கனடா), கரோசினி (பளை மத்திய கல்லூரி, மாணவி), திலக்ஸ்சி (பளை மத்திய கல்லூரி, மாணவி), அங்கஜன் ஆகியோரின் பேரனும் ஆவார். சிவபாக்கியம் (கனடா), சின்ராசு (மாங்குளம்), ராசாத்தி (எழுதுமட்டுவாள்), ஆறுமுகம் (எழுதுமட்டுவாள்), கந்தசாமி (பிரான்ஸ்), சிறி (சுவிஸ்), விக்னேஸ்வரி (கொழும்பு), சித்திரா (கனடா) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.01.2017) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று கறடிப்பள்ளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்

(C-7340)

# மரண அறிவித்தல்



## பாலசுப்ரமணியம் சத்தியபாமா

இணுவில் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட **பாலசுப்ரமணியம் சத்தியபாமா** 23.01.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுப்ரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சீனிவாசம், சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இராசதுரை, மனோன்மணி தம்பதிகளின் அன்பு மருமகளும் சத்தியசீலன், சத்தியகலா, சத்தியகாந்தன் மற்றும் காலஞ்சென்ற பாலச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் அருந்ததி, மௌலீஸ்வரன், கதிவாணி ஆகியோரின் மாமியாரும் வைஷ்ணவி, கஜராம், லட்சாயினி, சங்கீர்த், விதுர்ஜிகன், ஹரிணி, ஹரிசா, ஹம்சத் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் செல்வராசா, சாவித்திரிதேவி, யோகம்மா, இராஜவரோதயம், சச்சிதானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கிரிசாளினி, சிவபாதசுந்தரம், மகேந்திரலிங்கம், ரஞ்சிதபூபதி, சத்தியவதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.01.2017) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
பா.சத்தியசீலன்
பா.சத்தியகாந்தன் (மகன்மார்)
(யுனிக் வீடியோ கொம்பிளக்ஷ்)

0776523229,0779479150

(7597)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

### வெளிவாரிப் பரீட்சைகள்
### கலைமாணித் தேர்வு பகுதி-II-2012 (வெளிவாரி)

மேற்படி பரீட்சையை 06.02.2017 (திங்கட்கிழமை) தொடக்கம் 20.02.2017 (திங்கட்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளையும் 01.02.2017 (புதன்கிழமை) தொடக்கம் 03.02.2017 (வெள்ளிக்கிழமை) வரை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளவும்.

பதிவாளர்
23.01.2017

(சி-7330)

### பாதுகாப்பு ஆய்வுக்கான மத்திய நிலையத்தின் புதிய விடுதி திறப்பு

(கொழும்பு)

ஆய்வு மற்றும் அபிவிருத்திக்குமான மத்திய நிலைய அதிகாரிகளின் வசதியினை கருத்திற்கொண்டு புதிய விடுதி ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புச் செயலாளர் பொறியியலாளர கருணாசேன ஹெட்டியாராச்சியினால் ஹோமாகம பிடிபான பகுதியில் இந்த புதிய விடுதி உத்தியோக பூர்வமாக நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

(இ-3)

## பிரார்த்திக்கின்றோம்

### அமரர் கதிரித்தம்பி காளிதாசப்புலவர்



எமது சக ஆசிரியையான திருமதி அ.கஜேஸ்வரா அவர்களின் தந்தையான

**அமரர். கதிரித்தம்பி காளிதாசப்புலவர்**

25.12.2016 அன்று சிவபதமடைந்தார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

(7592)


விசேட கல்வி ஆசிரிய ஆலோசகர்,
விசேட கல்வி ஆசிரியர்கள், யாழ்ப்பாண கல்வி வலயம்.

## 24 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 26.04.1926 — விண்ணில் 19.01.1993

அன்புடன் எம்மை அரவணைத்து
ஆர்வமுடன் எம்மைக் காத்து
இன்னமுதாய் இனிய அறிவுரைகள் கூறி
ஈடேற வணிகத்தில் வழிகள் பலகாட்டி
உன்னதமான வாழ்வை எமக்களிக்க
ஊக்கமுடன் உழைத்து வந்தீர்
எண்ணரிய சேவைகள் பல செய்து
ஏற்றமுற வைத்தீர் எம்மையெல்லாம்
ஐயுறவு ஏதுமின்றி எம் வாழ்வு மலர்ந்திட
ஒற்றுமையாய் எம்மை அணைத்து
ஓதற்கரிய கலைகள் யாவும் புகட்டி
ஔவையின் அருளுரையும்
இனிதே தந்து
வையத்துள் வாழ்வாங்கு
வாழ வழிசமைத்த
தெய்வமே எங்கள்
அன்புத் தந்தையே
எம்மைவிட்டு
விண்ணுலகம் சென்று
ஆண்டுகள் இருபத்து
நான்கு வந்து போனாலும்
மறக்குமா? எம் நெஞ்சம்

(சி-7324)



### அமரர் இ.ச. பேரம்பலம் (E.S.P) (வாரிவளவு காரைநகர்)

என்றென்றும் உம் நினைவில் வாழும்
E.S.P. நாகரத்தினம்
சக நிறுவனம்,
52.54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மணி ஓசை
383, கோயில் வீதி,
நல்லூர்.

## மரண அறிவித்தல்

### அமரர் கந்தையா நாகமணி

**(ஓய்வுபெற்ற உடற்பயிற்சி உதவி கல்விப் பணிப்பாளர், முன்னாள் விரிவுரையாளர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, பலாலி)**



பெரியவிளானைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நாகமணி அவர்கள் 21.01.2017 அன்று சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற முத்துமாணிக்கம் சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் சர்வேஸ்வரியின் அன்புக் கணவரும் அமரர் வாசுதேவன் (கனடா), ஜெயந்தி (கனடா), ஸ்ரீபாஸ்கரன் (இந்தியா), இராஜ்குமார் (ஜேர்மனி), சுகந்தி (ஆசிரியை, யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), அமரர் நவக்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், யோகாம்பிகை, பாலசுந்தரம், உமா, சூரியகலா, அனுஜெயன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சனஜன், யாழினி, ஜெயந்திரா, ஷர்மி, ஸ்ரீலேகாஷாளினி, விசால், தனுஷன், தீர்த்தனன், ஆர்த்திகன், அபிநயா ஆகியோரின் அன்புப் பேரனும் அமரர்களான கணபதிப்பிள்ளை, ஆறுமுகம், கதிரித்தம்பி, செல்லம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராஜசிங்கம், தயாபரசிங்கம், பராபரசிங்கம், பரயோகசிங்கம், துரைசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நாளை 25.01.2017 புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'ஈஸ்வரி வாசம்'
சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய். (7585)

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**021 224 0058**

## இராசி பலன்

24.01.2017
(தை 11, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.36 மணிக்கு
துவாதசி பின்னிரவு 3.24 மணிவரை
கேட்டை மாலை 5.37 மணிவரை
சுபநேரம் 11.06-12.36மணிவரை
இராகுகாலம் 3.36-5.06மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| செவ் | | | |
| சுக் கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் பரணி, கார்த்திகை. மாலை 5.01 மணிக்கு தனுசு - சந் | | |
| சூரி | | | ராகு |
| புத | சனி சந் | குரு | |

**மீனம்:** பித்த சம்பந்தமான ரோகபயமுண்டு, பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, தடைகள் விலகி தனவரவுகள் ஏற்படலாம், தித்திக்கும் பயணங்கள் கைகூடும்.

**மேடம்:** வேலையில் மன உளைச்சல் ஏற்படலாம், பயணங்களால் தேக நலன்கள் பாதிக்கப்படலாம், தடைப்பட்ட காரியங்களில் மாலை நேரம் முன்னேற்றம் ஏற்பட்லாம்.

**இடபம்:** குடும்பத்தினரிடையே மகிழ்ச்சி கூடும் நாள், புதிய முயற்சிகளை காலைப் பொழுதே நிறைவேற்றுவது நல்லது, புதிய பொருட்சேர்க்கையுண்டு.

**மிதுனம்:** வியாபார விருத்தி ஏற்படும் நாள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கும்பம்:** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவ முன்வரலாம், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**கடகம்:** பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், பிள்ளைகளின் கல்வி நலனில் அக்கறை காட்டுவீர்கள், தொழிலில் புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் உருவாகும்.

**மகரம்:** உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**சிம்மம்:** மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், நண்பர்கள், நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**தனுசு:** பயணத்தால் புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கலாம், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், சயனக் குறைவான நாள்.

**விருச்சிகம்:** ஆழ்ந்த சிந்தனையுண்டு, உறவினர் பகை அகலும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**துலாம்:** எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தொழில் வளர்ச்சி கூடும் நாள்.

**கன்னி:** கொள்கைப் பிடிப்புடன் செயற்படுவீர்கள், உறவினர்கள் உங்களின் நலனில் அக்கறை காட்டுவர், செய்தொழில் மேன்மையுண்டு, தனவரவு திருப்தி தரும்.










வடக்கு மாகாண விவசாய அமைச்சின் 2016ஆம் ஆண்டுக்குரிய சாதனை விவசாயிகளைக் கௌரவிக்கும் உழவர் பெருவிழா நேற்றுமுன்தினம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருந்தார். மேலும் தமிழ்நாட்டைச்சேர்ந்த ரேவதி மாரிமுத்து உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்:-உ.சாளின்)

# இடமாற்றம் வழங்கக்கோரி ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்






(யாழ்ப்பாணம்)

இடமாற்றக் கொள்கைக்கு புறம்பாக வழங்கப்பட்டுள்ள இடமாற்றத்தை இரத்து செய்யக் கோரியும், ஆசிரியர்கள் சிலருக்கு வழங்கப்பட்டுள்ள பணித் தடையை நீக்கக் கோரியும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரனின் அலுவலகத்துக்கு முன்னால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் போராட்டம் ஒன்றை நேற்றைய தினம் முன்னெடுத்தனர்.

காலை 9 மணியளவில் கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகம் முன்பாக கூடிய வெளி மாவட்டங்களில் 5 வருடங்கள் கடமையாற்றியும் சொந்த இடத்திற்கு இடமாற்றம் கிடைக்காத ஆசிரியர்கள். பணித்தடை செய்யப்பட்ட ஆசிரியர்கள் மற்-----றும் இலங்கை ஆசிரியர் சங்க உறுப்பினர்கள் ஆகியோர் பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டம் நேற்று பிற்பகல் வரை தொடர்ந்திருந்தது.

அண்மையில் வடக்கு மாகாண கல்வியமைச்சுக்கு முன்னர் போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்களுக்கு விசாரணைக்கான பணித்தடை உத்தரவு வடமாகாண கல்விப் பணிப்பாளரால் அனுப்பப்பட்டுள்ளது. இது ஜனநாயக உரிமையை நசுக்கும் செயற்பாடாகவே நாம்கருதுகின்றோம். வடமாகாண கல்வித்திணைக்களம் மேற்கொள்ளும் பாரபட்சங்களின் உச்சத்தில் தாம் இழைக்கும் அநீதிகளைநியாயப்படுத்தியும் ஜனநாயக உரிமையை நசுக்கியும் செயற்படமுன் வந்தமையை ஏற்றுக்கொள்ள முடியாது.

தமது இடமாற்றங்களைக் கோரி கவனயீர்ப்பு செய்தமை ஆசிரியர்களின் ஜனநாயக ரீதியான உரிமையாகும். இதனை சிறுமைப்படுத்த முயற்சித்த வேளையிலேயே அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டதாக கருதுகின்றோம் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார். இந்த பிரச்சினைக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் தலையிட்டு பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு நீதியை வழங்க வேண்டும். அத்துடன் இந்தக் கோரிக்கைகளுக்கு சாதகமான பதில் முதலமைச்சர் ஊடாக கிடைக்கும் வரை ஜனநாயக ரீதியான இப்போராட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும்என போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர். (இ-4)

## இலவச கண்சிகிச்சை முகாம்

கரணவாய் மேற்கு மற்றும் அயற் கிராம மக்களின் நலன் கருதி வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இலவச கண்சிகிச்சை முகாமும் பொதுமருத்துவ முகாமும் எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை கரணவாய் மகா வித்தியாலயத்தில் நடைபெறும் என வடமராட்சி லயன்ஸ் கழக செயலாளர் பா.இர்குநாதன் அறிவித்துள்ளார். (இ-60)

## போலி நாணயத்தாள் விவகாரம் 6வது சந்தேக நபரும் மறியலில்

வடமராட்சிப் பகுதியில் போலி நாணயத்தாள்களை அச்சிட்டு புழக்கத்தில் விட்டதாக குற்றம்சாட்டி நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஆறாவது சந்தேக நபரையும் எதிர்வரும் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை பதில் நீதிபதி பா.சுப்பிரமணியம் உத்தரவிட்டார். கடந்த வெள்ளிக்கிழமை (20.01.2017) கைது செய்யப்பட்ட ஐவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுடன் ஆறாவது சந்தேக நபரையும் 03.02.2017 வரை விளக்க மறியலில் வைக்குமாறு பதில் நீதிபதி உத்தரவிட்டார். (இ-60)



யாழ். மத்தியில் உ/த 1996 இல் கல்வி கற்ற புலம் பெயர் வாழ் ஈழத்தமிழர்கள் ஒன்றிணைந்து யாழ்.எயிட் ஊடாக எவ்வித வருமானமும் அற்ற நிலையில் வாழ்வியலை மேற்கொண்டிருந்த முன்னாள் போராளிகள் மற்றும் பொதுமக்கள் என மூன்று குடும்பங்களைச் சார்ந்தவர்களுக்கு நான்கு ஆடுகளும் இரண்டு குட்டிகளும் என இரண்டு குடும்பங்களுக்கும், ஒரு குடும்பத்திற்கு 100 கோழிகளும் வழங்கப்பட்டதுடன் அவற்றிற்கான நிரந்தர பராமரிப்பிடங்களும் அமைத்து பொங்கல் தினத்தன்று வாழ்வாதார உதவியாக வழங்கப்பட்டன.

# அதிசொகுசு காரில் மறைத்து வைத்த கடத்தப்பட்ட கஞ்சாப் பொதிகள் மீட்பு

## மன்னார், தலைமன்னார் பிரதான வீதியில் சம்பவம்





தலைமன்னாரிலிருந்து மன்னார் ஊடாக கொழும்பிற்கு அதி சொகுசு கார் ஒன்றில் மறைத்துவைத்துகொண்டு செல்லப்பட்ட சுமார் 35 கிலோ கிராம் கேரள கஞ்சாப் பொதிகளுடன் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக மன்னார் மன்னார் பொலிஸ் நிலைய தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 10 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மன்னார் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து மன்னார், தலைமன்னார் பிரதான வீதி 2 ஆம் கட்டை பகுதியில் திடீர் வீதிப் பரிசோதனையில் ஈடுபட்டனர்.

இதன்போது காரில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் சுமார் 35 கிலோ கிராம் கேரள கஞ்சாப் பொதிகளை மீட்டுள்ளதாகவும் சந்தேக நபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் மன்னார் பொலிஸ் நிலைய தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# பாடசாலை பரீட்சைகள் நாட்காட்டி-2017

2017ஆம் ஆண்டு நடத்துவதற்கு உத்தேசித்துள்ள பாடசாலைப் பரீட்சைகள் கீழே தரப்பட்டுள்ள காலப்பகுதியில் நடைபெறும்.

| பரீட்சையின் பெயர் | பரீட்சை நடைபெறும் திகதி / திகதிகள் |
|---|---|
| க.பொ.த.உயர்தரப் பரீட்சை | ஓகஸ்ட் 08 ஆம் திகதி தொடக்கம் செப்டெம்பர் 02ஆம் திகதி வரை (ஞாயிறு, அரச விடுமுறை நாட்கள் தவிர்ந்து) செய்முறைப் பரீட்சைகள் ஒக்டோபர் மாதம் 20ஆம் திகதி முதல் நவம்பர் 05 ஆம் திகதி வரை |
| தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை | ஓகஸ்ட் மாதம் 20ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை |
| பொதுத் தகவல் தொழில்நுட்பப் பரீட்சை | ஒக்டோபர் மாதம்15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை |
| க.பொ.த சாதாரண தரப் பரீட்சை | டிசெம்பர் 12 ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் 21 ஆம் திகதிவரை ஞாயிறு, அரச விடுமுறைகள் தவிர்ந்த செயன்முறைப் பரீட்சைகள் 2018 பெப்ரவரி 27ஆம் திகதி தொடக்கம் மார்ச் 09 ஆம் திகதி வரை ஞாயிறு தவிர்ந்த |

# பேராயர் தலைமையில் டெங்கு ஒழிப்பு திட்டம்





கொட்டாஞ்சேனை புனித லூஸியாள் தேவாலய வளாகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற டெங்கு ஒழிப்பு திட்டத்தில் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கலந்துகொண்டார்.

பொது மக்களின் ஒத்துழைப்புடன் ஆலய வளாகத்தில் இந்த டெங்கு ஒழிப்பு திட்டம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## திசைமுகப்படுத்தும் நிகழ்வு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் வணிகமாணி (புதிய மற்றும் பழைய பாடத் திட்டம்) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நன்மை கருதி திசைமுகப்படுத்தும் நிகழ்வு (Orientation Programme) ஒவ்வொரு சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இதற்கான நேர அட்டவணையினை www.jfn.ac.lk/codl இணையத்தள முகவரியில் பார்வையிடலாம் என யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலைய பணிப்பாளர் பேராசிரியர் பா. நிமலதாசன் அறிவித்துள்ளார். (இ

## கோட்டையில் மோதல்; சீனப் பிரஜை கைது!

(கொழும்பு)

கொழும்புக் கோட்டை பகுதி யில் உள்ள உணவகம் ஒன் றில் ஏற்பட்ட தகராறு தொடர்பாக சீனப் பிரஜை ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து இந்த சீனப்பிரஜை கைது செய்யப்பட்டதாக கோட்டை பொலிஸார் தெரிவித்துள்ள னர்.

தகராறில் ஏற்பட்ட மோதல் காரணமாக காயமடைந்த சிலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-3)

# க.பொ.த.உயர்தரப் பரீட்சை-2017

## பாடசாலையில் கற்றுக்கொண்டு தனிப்பட்ட முறையில் விண்ணப்பிப்பது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது

இலங்கைபரீட்சைத்திணைக்களத்தினால் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு 2017 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் தனிப்பட்ட முறையில் தோற்றுவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பாடசாலையில் இருந்து பாடசாலை விடுகைப் பத்திரத்தைப் பெற்றவர்கள் மட்டுமே தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக தோற்றமுடியும். பாடசா லையில் கற்றுக்கொண்டுதனிப்பட்ட முறையில் விண்ணப்பிப் பது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் 2005 ஆம் வருடத்திலிருந்து அமுலாக்கப்படும் கல்வி அமைச்சு செயலாளரின் 2005/03 இலக்கமும், 2005.01.27 ஆம் திகதியும் கொண்ட சுற்று நிருபத்தில் குறிப்பிட்டுள்ளவாறு பாடசாலை மட்டக் கணிப்பீட்டு வேலைத் திட்டத்திற்குரிய தேர்ச்சி விருத்தி செயற்றிட்டம், செய்முறைச் சோதனை, பாடச் செயற்றிட்டம் என்பவற்றை முழுமையாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். இதற்கு முன் பாடசாலைப் பரீட்சார்த்தியாக பரீட்சைக்குத் தோற்றியிராத 2017.01.01 ஆம் திகதியில் 21 வயதிற்குக் குறைந்த முதல் முறையாகத் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளும் இதற்கு முன் தாம் தோற்றிய ஒரு பாடத்தையாவது மாற்றி தனிப்பட்ட வகையில் தோற்றும் பரீட்சார்த்திகளும் மேற்கூறிய வேலைத்திட்டத்தின் கீழ் தமக்குரிய மாகாணக் கல்வித் திணைக்களத்தில் தம்மை பதிவு செய்திருத்தல் வேண்டும். தனிப்பிட்ட பரீட்சார்த்தி இதற்கு முன் பாடசாலை பரீட்சார்த்தியாக விண்ணப்பித்து அனுமதி அட்டை பெற்றபின் பரீட்சைக்குத் தோற்றாத 21 வயதிற்குட்பட்டவர்கள் மாகாண கல்வித் திணைக்களத்தில் தம்மைப் பதிவு செய்து கொள்ளத் தேவையில்லை. இவ்விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்துடன் தம் வசமுள்ள அனுமதி அட்டையின் நிழற்பிரதி ஒன்றை இணைத்து அனுப்ப வேண்டும்.

மேலும் தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் பாடசாலை மட்டக் கணிப்பீட்டு வேலைத்திட்டத்திற்காகத் தம்மைப் பதிவு செய்த போது தமக்கு வழங்கப்பட்ட பதிவு இலக்கத்தை குறிப்பிட்டதுடன் பாடசாலையில் குறித்த செயற்றிட்டங்களையும் செய்முறைகளையும் பூர்த்தி செய்த பின் அதிபரினால் வழங்கப்படும் சான்றிதழின் நிழற்பிரதி ஒன்றை பரீட்சை ஆரம்ப தினத்திற்கு முன் பரீட்சைத் திணைக்களத்திற்கும் ஏனைய பிரதிகளை உரிய மாகாண கல்வித் திணைக்களத்திற்கும் அனுப்பவும்.

2016 ஆம் ஆண்டிலோ அல்லது அதற்கு முன்னரோ பாடசாலைப் பரீட்சார்த் தியாகவோ தனிப்பட்ட பரீட்சார்த்தியாகவோ ஏதேனும் ஒரு பாடசாலையில் தம் செயற்றிட்டம், செய்முறைச் சோதனைகள் என்பவற்றைப் பூர்த்தி செய்து தோற்றியிருப்பின் அல்லது விண்ணப்பித்து தோற்றா விடினும் அச்சுட்டெண்ணையும் வருடத்தையும் விண்ணப்பத்தில் குறிப்பிடவேண்டும்.

மூன்று பிரதான பாடங்களுடன் பொதுச் சாதாரண பரீட்சைக்கும் மேலதிகமாகப் பொது ஆங்கில பாடத்திற்கும் விண்ணப்பிக்க முடியும். இவற்றுக்கான தரங்கள் பல்கலைக்கழப் பிரவேசத்திற்கு பயன்படுத்தப்பட மாட்டாது. இப்பாடத்திற்காகப் பெறும் தரம் க.பொ.த. (உ.தர) ப் பரீட்சைப் பெறுபேற்று சான்றிதழில் குறிப்பிட நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

மேலும் இப்பாடத்தை ஒரு பாடமாக மட்டும் தோற்ற இடமளிக்கப்படும். எவராயினும் ஒரு விண்ணப்பதாரி இலங்கையின்பல்கலைக்கழகமொன்றுக்கு அனுமதி பெறும் எண்ணத்துடன் இருப்பவராயின் பொதுச் சாதாரண பரீட்சையில் கட்டாயமாகச் சித்தியடைய வேண்டும்.

இவ் விண்ணப்பப்படிவம் 2017.02.15 ஆம்திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் த.பெ. 1503, கொழும்பு எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு பரீட்சை ஆணையாளர்நாயகம்பிள்யூ. எம். என்.ஜே. புஸ்பகுமார அறிவித்துள்ளார். (இ-3)

## வாகன விபத்தில் முதியவர் மரணம்

மாத்தறை-திஹகொட பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் 67 வயது முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

டிப்பர் வாகனம் ஒன்றும் மோட்டார் வாகனம் ஒன்றும் மோதியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ் விபத்தை தொடர்ந்து டிப்பர் வாகன சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட நபர் மாத்தறை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார். (3-5)


## பொதுச்சேவை பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை

வடக்கு மாகாண பொதுச் சேவையின் காணி வெளிக்களப் போதனாசிரியர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையானது இம் மாதம் 2017.01.28ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்காக விண்ணப்பித்த தகைமையுடைய விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரால் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் தாங்கள் பரீட்சைக்கு விண்ணப்பித்தமைக்கான சான்றுகளுடன் செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல:393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கோ அல்லது 021 221 9939 என்னும்தொலைபேசி இலக்கத்துடனோ 2017.01.26ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளவும். எவ்வாறாயினும் அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்ட பின்னரே பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்பவர் என செயலாளர் ரூ.வரதலிங்கம் அறிவித்துள்ளார்.(இ

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நேற்று முதல் உணவு தவிர்ப்பு போராட்டம்

## வவுனியாவில் ஆரம்பிப்பு











தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடிக்கண்டறியும் குடும்பங்களின் சங்கததின் ஏற்பாட்டில் காணாமல் போனோரின் உறவுகள் நேற்று முதல் சாகும் வரையிலான உணவு தவிர்ப்பு போராட்டம் ஒன்றினை ஆரம்பித்துள்ளன.

வவுனியா கந்தசாமி ஆலயம் முன் ஒன்றுகூடிய காணாமல் போனோரின் உறவுகள் அங்கு விசேட வழிபாட்டை மேற்கொண்டதுடன் அங்கிருந்து ஊர்வலமாகச் சென்று வவுனியா தபால்நிலையம் அருகில் உணவு தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளன.

உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள், அரச படைகள் மற்றும் அரச துணை ஆயுத குழுக்களால் எமது உறவுகள் கடத்திச் செல்லப்பட்டமையை கண் கண்ட சாட்சிகளாக நாம் உள்ளோம். அரசினால் நியமிக்கப்பட்ட பலதரப்பட்ட ஆணைக்குழுக்கள், உள்ளூர் மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புகள், ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், தமிழ மக்களின் அரசியல் அதிகாரம் பெற்றுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பு, சர்வதேச சமுகம் என்று சகல தரப்புகளிடமும் முறையிட்டும், வருடங்கள் பல கடந்த நிலையிலும் எமது உறவினர்கள் விடுவிக்கப்படவில்லை.

இந்தநிலையில், சாத்வீக ரீதியாக சகல கவனயீர்ப்பு மற்றும் அழுத்த போராட்டங்களை நடத்தியும், எமது உறவினர்கள் தொடர்பில் உரிய தீர்வு எமக்கு வழங்கப்படவில்லை. இதன்காரணமாகவே உரிய பதிலை வழங்குமாறு கோரி சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம் எனத் தெரிவித்தனர்.

இதன்போது உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்காக பந்தல் அமைக்கப்பட்ட போது உண்ணாவிரதம் மேற்கொள்ள முடியும், வீதி ஓரத்தில் பந்தல் அமைக்க முடியாது. அது போக்குவரத்திற்கு இடைஞ்சலாக அமையும எனக் கூறி தடுத்து நிறுத்தினர். இதன்போது அவ்விடத்திற்கு வந்த வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்குமாகாண சபை உறுப்பினர் செ.மயூரன் ஆகியோர் பொலிஸாருடன் பேசி பந்தல் அமைக்க அனுமதி கோரியிருந்தனர். இந்நிலையில் நகரசபை அனுமதி வழங்கினால் அமைக்க முடியும் என பொலிஸார் தெரிவித்தையடுத்து அவ்விடத்திற்கு வந்த நகரசபைச் செயலாளரிடம் பந்தல் அமைக்க அனுமதி கோரப்பட்டிருந்தது. போக்குவரத்திற்கு இடையூறு இல்லாது பந்தல் அமைக்குமாறு அவர் அனுமதி வழங்கியதையடுத்து பந்தல் அமைக்கப்பட்டு உண்ணாவிரதம் தொடர்ந்து நடைபெறுகிறது.

இவ் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆட்டோ உரிமையாளர்கள், சிவில் அமைப்புக்கள், பொது மக்கள் எனப்பலரும் தமது ஆதரவைவழங்கியுள்ளனர. (2-250)




## குளவிக்கொட்டுக்கு இலக்கான 39 மாணவர்கள், 7 ஆசிரியர்கள் வைத்தியசாலையில் அனுமதி

முல்லைத்தீவு பாடசாலையொன்றில் குளவிக் கொட்டுக்கு இலக்கான 39 மாணவர்கள், 7 ஆசிரியர்கள் ஆகியோர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஆரம்பப் பிரிவைச் சேர்ந்த இரண்டு மாணவர்கள் அவசர நோயாளர் காவு வண்டி மூலம் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவம் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் பாடசாலை வளாகத்தில் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் தெரியவருவதாவது,



முல்லைத்தீவு விசுவமடு மகா வித்தியாலயத்திற்கும் விசுவநாதர் ஆரம்ப வித்தியாலயத்திற்கும் இடையில் நின்ற மரத்தில் காணப்பட்ட குளவிக் கூடு கலைந்ததன் காரணமாக விசுவநாதர் ஆரமப வித்தியாலய , மாணவர்கள் 30 பேரும் ஆசிரியர்கள் 5 பேரும் விஸ்வமடு மகா வித்தியாலய மாணவர்கள் 9 பேரும் ஆசிரியர்கள் 2 பேருமாக மொத்தம் 46 பேர் குளவிக்கொட்டுக்கு இலக்காகி அவசர நோயாளர் காவு வண்டிகள் மூலம் தர்மபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, இதில் இரண்டு ஆரம்பப்பிரிவு மாணவர்களை அவசர நோயாளர் காவு வண்டி மூலம் கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்

இதனால குறித்த இரண்டு குறித்த பாடசாலைகளும் அவசர நிலையை கருத்திற்கொண்டு மூடப்பட்டது. (2-312)

## முல்லைத்தீவு கடற்பரப்பில் மீண்டும் இந்திய றோலர்கள் படையெடுப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு கடற்பரப்பில் நேற்று அதிகாலை இந்திய றோலர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் அந்தோனிப்பிள்ளை மரியராசா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இரவு கடற்றொழிலுக்குச் சென்ற முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் மீன்பிடி படகுகளை அவதானித்ததாகவும் நேற்று அதிகாலையே அவை இந்திய றோலர்கள் என முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் உறுதிப்படுத்திய நிலையில் இத்தகவலை உடனடியாக முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை உதவிப்பணிப்பாளருக்குத் தெரியப்படுத்தி இருப்பதாகவும் இதே வேளை மாவட்டச்செயலர், நாடாளுமன்ற உறுப்பினர் கள், மாகாண சபை உறுப் பினர்களுக்கு இத்தகவலை அறிவிக்க உள்ளதாகவும் தெரிவித்தார்.

முல்லைத் தீவிலே 2009 ஆம் ஆண்டின் பின்னர் இந்திய றோலர்கள் மற்றும் பிற மாவட்டங்களைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களினால் முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் தொழில் பாதி ப்பை எதிர்கொண்டுள்ளனர்.

கடந்த அரசிடமும் தற்போதைய அரசிடமும் மனு மூலமும் நேரடியாகவும் முறைப்பாடுகள் செய்யப்பட்டும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தியும் எந்த விதமான பயன்களும் கிடைக்காத நிலையில் சற்று இடைவெளிக்குப் பின்னர் இந்திய றோலர்கள் மீண்டும் முல்லைத்தீவு கடற்கரையில் இருந்து ஆறு கடல் மைல் தூரத்தில் மீன்பிடியில் தற்போது ஈடுபட்டுக் கொண்டிருப்பதன் காரணமாக முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர்.

இந்திய றோலர்களைக் கட்டுப்படுத்தி முல்லைத்தீவு கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தினைப் பாதுகாக்குமாறு வடமாகாண சபை மற்றும் மத்திய அரசு என்பவற்றிற்கு முல்லைத்தீவு கடற்றொழிலாளர்களின் சங்கங்களின் சமாசம் அவசரத் தகவலை அனுப்பியுள்ளது. (2-281)

## 8 கமநல சேவை நிலையங்களின் கீழ்

# 30 ஆயிரத்து 25 ஏக்கர் நெற்பயிர்கள் அழிவடையும் நிலையை எட்டியுள்ளது

### கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

**கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள பிரிவுக்குட்பட்ட எட்டு கமநல சேவை நிலையங்களின் கீழ் 2016-2017 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற்செய்கையாக 64 ஆயிரத்து 835 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட வரட்சியினால் 30 ஆயிரத்து 25 ஏக்கர் நெற்பயிர்கள் அழிவடையும் இறுதி நிலையை எட்டியுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் வே.ஆயகுலன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், கிளிநொச்சி கமநல சேவை நிலையத்தின் கீழ் 17 ஆயிரத்து 522.50 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் 10 ஆயிரத்து 687.50 ஏக்கர் நெற்செய்கை அழிவடையும் இறுதி நிலையை எட்டியுள்ளது.

உருத்திரபுரம் கமநல சேவை நிலையத்தின் கீழ் 07 ஆயிரத்து 627.50 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் ஆயிரத்து 34 ஏக்கர் நெற்செய்கை அழிவடையும் இறுதி நிலையை எட்டியுள்ளது.

இராமநாதபுரம் கமநல சேவை நிலையத்தின் கீழ் 4 ஆயிரத்து 185 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் 4 ஆயிரத்து 142.50 ஏக்கர் நெற்செய்கை அழிவடையும் இறுதி நிலையை எட்டியுள்ளது.

அக்கராயன் குளம் கமநல சேவை நிலையத்தின் கீழ் 4 ஆயிரத்து 830 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் 4 ஆயிரத்து 730 ஏக்கர் நெற்செய்கை அழிவடையும் இறுதியை நிலையில் உள்ளது.

புளியம் பொக்கணை கமநல சேவை நிலையத்தின் கீழ் 13 ஆயிரத்து 465 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் 12 ஆயிரத்து 920 ஏக்கர் நெற்செய்கை அழி வடையும் இறுதி நிலையை எட்டியுள்ளது.

முழங்காவில் கமநல சேவை நிலையத்தின் கீழ் 2 ஆயிரத்து 787.50 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் 2 ஆயிரத்து 692. 50 ஏக்கர் நெற் செய்கை அழிவடையும் இறுதி நிலையை எட்டியுள்ளது.

பூநகரி கமநல சேவை நிலையத்தின் கீழ் 12 ஆயிரத்து 752.5 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில், 12, ஆயிரத்து 600 ஏக்கர் நெற்செய்கை அழிவடையும் இறுதி நிலையை எட்டியுள்ளது.

பளை கமநல சேவை நிலையத்தின் கீழ் 2 ஆயிரத்து 355 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில், ஆயிரத்து 600 ஏக்கர் நெற்ச் செய்கை அழிவடையும் இறுதி நிலையை எட்டியுள்ளது.

ஒட்டுமொத்தமாக 64, ஆயிரத்து 835 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட வரட்சியினால் 30 ஆயிரத்து 25.50 ஏக்கர் நெற்செய்கை அழிவடையும் இறுதி நிலையை எட்டியுள்ளதால் விவசாயிகள் பாரியளவிலான பொரு



ளாதார ரீதியாக பின்தங்கிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார். (2-15)




## பாடசாலைக்கு மேலைத்தேய வாத்திய இசைக்கருவிகள் கையளிப்பு





பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் 2016 ஆம் ஆண்டின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியூடாக கொள்வனவு செய்யப்பட்ட மேலைத்தேய வாத்திய இசைக் கருவிகள் கையளிக்கும் நிகழ்வும் கன்னி இசை அணிவகுப்பு நிகழ்வும் கிளிநொச்சி ஊற்றுப்புலம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் அண்மையில் காலை 9.30 மணியளவில் பாடசாலை அதிபர் மகேசன் உமாசங்கர் தலைமையில் நடைபெற்றது.

பாடசாலையின் முன்னால் அமைந்திருக்கும் ஆலயத்தில் விசேட வழிபாடுகள் இடம் பெற்று குறித்த இசைக்கருவிகள் இசை அணி மாணவர்களிடம் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனினால் வழங்கி வைக்கப்பட்டதுடன் பாடசாலை முன்றலில் இருந்து இசை அணி வகுப்பு மாணவர்கள் கன்னி இசை அணி வகுப்புடன் விருந்தினர்கள் பாடசாலை வளாகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந் நிகழ்வில் கட்சியின் ஊற்றுப்புல அமைப்பாளர் சுரேன், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் , ஊற்றுப்புல கிராம அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப்பலர் கலந்து சிறப்பித்தனர். (2-281)

## முல்லைத்தீவு மாவட்டத்தில்

# புலிகளின் காலத்தில் முன்னேற்றமடைந்த கல்வி தற்போது வீழ்ச்சி நிலை கண்டுள்ளது

முல்லைத்தீவு மாவட்டம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த காலப்பகுதியில் கல்வி நிலையில் உயர்வடைந்து காணப்பட்டது. 2009 ஆம் ஆண்டின் பின்னரான காலப்பகுதியில் மிகவும் வீழ்ச்சியடைந்துள்ளது என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவப்பிரகாசம் சிவமோகன் தெரிவித்துள்ளார்.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் இடம்பெற்ற கல்விசார் அமைப்புக்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட கல்வி நிலை தொடர்பிலும், பெண் தலைமைத்துவ குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும்நோக்கில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவப்பிரகாசம் சிவமோகன் தலைமையில் சந்திப்பொன்று ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் இடம்பெற்றது.

இந்த சந்திப்பில் கலந்துகொண்ட சில பாடசாலைகளின் அதிபர்கள் சிலர் தரம் 9 மற்றும் 10 இல் கல்வி கற்கும் மாணவர்கள் கூட எழுத வாசிக்க தெரியாத நிலையில் காணப்படுவதாக குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கல்வி நிலை வீழ்ச்சி அடைவதற்கு ஆசிரியர் பற்றாக்குறை மிக முக்கிய காரணியாக காணப்படுவதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவப்பிரகாசம் சிவமோகன் இதன் போது தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் முல்லைத்தீவு மாவட்டம் இருந்த காலப்பகுதியில் எழுத, வாசிக்க தெரியாதவர்கள் என மாணவர்கள் இருக்கவில்லை. குறித்த பகுதியில் உருவாகி வரும் புதிய பிரச்சினையாக இது இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை பெண்தலைமைத்துவ குடும்பங்களும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் ,வன்னிக்குறோஸ் கலாசார பேரவை, பேரவையின் முல்லைத்தீவு மாவட்டத்தின் தலைவர் சி.நாகேந்திர ராசா, செயலாளர் சி.வேதவனம் ஆகியோர் கலந்துகொண்டனர். (2-281)

## அறுவடை செய்யும் நெல்லை

# உச்ச விலை நிர்ணயத்தில் விற்பனை செய்ய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## விவசாயிகள் கோரிக்கை

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் நெற் செய்கையை மேற்கொண்ட விவசாயிகள் மழை வீழ்ச்சி போதாமையால் நெற்பயிருக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள் மூலமாக நீர்இறைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த இரண்டு நாட்களாக ஓரளவு மழை பெய்துள்ள போதிலும் மழை வீழ்ச்சி நெற்பயிருக்குப் போதுமானதாக இல்லை.

இதனால் கனகாம்பிகைக் குளத்து நீரிலிருந்து கிளிநொச்சிக்குளத்தினூடாக ஒருபகுதி விவசாயிகளுக்கும் புதுமுறிப்புக்குளத்திலுள்ள நீரை உருத்திரபுரம் விவசாயிகள் பயன் பெறும் வகையிலும் திறந்து விடப்பட்டுள்ளது.

இருப்பினும் காலந்தாழ்த்திய தான தற்போதைய மழையினால் ஓரளவு நன்மையே ஏற்பட்டுள்ளதாகவும், தொடர்ந்தும் கூடியளவு மழைவீழ்ச்சி கிடைக்கப்பெற்றால் மட்டுமே தமது நெல் விளைச்சலில் சிறந்த பலனை பெறக்கூடியதாக இருக்குமெனவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை புதுமுறிப்பு, அக்கராயன், வன்னேரிக்குளம் ஆகியவற்றின் ஊடாக நெற் செய்கையை மேற்கொண்டுள்ள விவசாயிகள் நெல் அறுவடை செய்ய ஆயத்தமாகியுள்ள நிலையில் இந்த நெல்லை விதை நெல் தேவைக்குப் பயன்பெறும் வகையிலும் உச்ச விலைநிர்ணயத்துடன் விற்கக்கூடிய வகையிலும் உரிய அதிகாரிகள் முற்கூட்டியே நடவடிக்கையை மேற்கொண்டு விவசாயிகள் நன்மையடைய ஏற்பாடுகள் செய்யப்படவேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.

தனியார் நெற்கொள்வனவை குறைந்த விலையில் கொள்வனவு செய்வதை தடைசெய்யும் நடவடிக்கைகள் காலதாமதமின்றி எடுக்கப்படவேண்டுமெனவும் விவசாயிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (2-254)

# தேசத்துரோகச் சட்டங்கள் மூலம் ஆட்சி நடத்த ஐ.தே.க. நினைக்கிறது

## கூட்டு எதிர்க்கட்சி பாரிய குற்றச்சாட்டு

(கொழும்பு)

**நீதிக்கு புறம்பான தேசத்துரோகமான சட்டங்களை கொண்டு இந்த நாட்டை ஆட்சி செய்ய ஐக்கிய தேசியக் கட்சி நினைக்கின்றது.நாம் இருக்கும் வரை அது ஒருபோதும் நடக்காது என கூட்டு எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**



தேசிய சுதந்திர முன்னணியின் வருடாந்த மாநாடு நேற்று முன்தினம் கொழும்பில் சுகததாச மாநாட்டு மண்டபத்தில் இடம பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நாட்டை கூறு போடுவதற்கும் புதிய அரசியலமைப்பினூடாக சமஷ்டியை கொண்டு வந்து சர்வதேசத்துக்கு சார்பாக இந்த நாட்டை மாற்றியமைப்பதற்கும் கூட்டு எதிர்க்கட்சி ஒரு போதும் இடமளிக்காது எனவும் தெரிவித்துள்ளார்.

நாட்டில் வேலைவாய்ப்பு இன்மை தலைவிரித்தாடுகின்றது. படை வீரர்களை தண்டிக்க இந்த அரசு முனைப்பாக உள்ளது. நாட்டுக்கு சொந்தமான எல்லா வளங்களையும் தாரைவார்க்கின்றது. இதை தடுத்து நிறுத்தவும், கொடுங்கோண்மையான ரணில் ஆட்சிக்கு முடிவு கட்டுவதற்கும் விமல் வீரவன்ச ஒருவரால் மட்டுமே முடியும்.

நாட்டின் சுயாதீனத்தையும் நீதித்துறையையும் குழிதோண்டி புதைத்துவிட்டு ரணில் விக்கிரமசிங்க வேடிக்கை காட்டுவதாகவும் இதன போது கூட்டு எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன குற்றமசாட்டினார்.

மேலும் இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து இந்த வருட இறுதிக்குள் ஆட்சி மாற்றத்தினை ஏற்படுத்துவோம் எனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு முன்னிலையில் தினேஸ் குணவர்தன கூ஌ரைத்தார். (இ-3)

# அரசாங்கத்தால் மட்டும் தனியாக பிரச்சினையைத் தீர்க்க முடியாது

## அமைச்சர் கிரியெல்ல தெரிவிப்பு



நாட்டில் நிலவும் வேலையில்லா பிரச்சினையை அரசாங்க தரப்பிலுள்ள தொழில வாய்ப்புக்களால் மாத்திரம் தீர்க்க முடியாது என உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் இதனைத் தெரி வித்தார்.

மேலும் இந்த வேலையில்லா பிரச்சினையை நிவர்த்தி செய்ய புதிய பல தொழிற்சாலைகளை நிறுவ அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும், அரசாங்கம் வெளிநாட்டு உதவிகளை பெற்றுவருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை நிறுத்துவதற்கு தற்போதைய அரசாங்கம் எண்ணவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-3)

# 2020க்கு முன் நல்லாட்சியை கவிழ்ப்போம்

## ஜே.வி.பி.எச்சரிக்கை

"2020ஆம் ஆண்டுக்கு முன்னர், சரியான வாய்ப்பொன்று கிடைக்குமாயின், தற்போது ஆட்சியிலுள்ள அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்குத் தயாராக உள்ளோம் என, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

மஹரகமையில் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட ஊக்குவிப்புச் சங்கத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-3)

# எச்.ஐ.வி; பாதிக்கப்பட்டவரை நீக்கியது ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம்

## உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல்

எச்.ஐ.வி.நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட ஒருவரை பணி நீக்கம் செய்ய முடியுமா என கேள்வி எழுப்பி ஸ்ரீலங்கன்விமான சேவை நிறுவனப் பணியாளர் ஒருவர் உச்ச நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணை செய்ய உச்ச நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

எச்.ஐ.வி.நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்ட காரணத்தின் அடிப்படையில் ஸ்ரீலங்கன் விமான சேவை பணியாளர் ஒருவர் பணி நீக்கப்பட்டுள்ளார்.

பிரதம நீதியரசர் கே.சிறிபவன் மற்றும் நீதியரசர் பிரியந்த ஜயவர்தன ஆகியோர் எதிரில் இந்த மனு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த அடிப்படை உரிமை மீறல்மனு எதிர்வரும்மே மாதம 30ம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

மனுதாரர் சார்பில் கமனி ஜினதாச என்றசட்டத்தரணிஇந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

ஸ்ரீலங்கன்விமான சேவை நிறுவனம், நிறுவனத்தின் வைத்திய அதிகாரி அனோமா ஜயசிங்க, போக்குவரத்து விமான சேவைகள் அமைச்சின செயலாளர்நிஹால்சமரவீர, சட்டமா அதிபர் உள்ளிட்டவர்களுக்கு எதிராக மனுத் தாக்கல் செய்யபபட்டுள்ளது.

மிஹின் லங்கா விமான சேவை நிறுவனத்தில் பணியாற்றி வந்த நபர் ஒருவர் ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தில் பணியாற்றுவதற்காக விண்ணப்பம் செய்துள்ளார்.

உரிய முறையில்நேர்முகத் தேர்வு நடத்தி கடந்த ஒக்டோபர் மாதம் 28ம் திகதி நியமனக் கடிதம் குறித்த நபருக்கு வழங்கப்பட்டுள்ளது.

மருத்துவ பரிசோதனை ஒன்றுக்கு உட்படுமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்ட போதிலும், மருத்துவ பரிசோதனை அறிக்கை கிடைக்கப் பெற முன் னதாக இவருக்கு நியமனம் வழங்கபபட்டுள்ளது.

எனினும், கடந்த நவம்பர் மாதம் 8ம் திகதி ஸ்ரீலங்கன் விமான சேவை நிர்வாகம், குறித்த நபரை பிரபல ஹோட்டல ஒன்றுக்கு அழைத்து பணி நீக்குவதாக அறிவித்துள்ளது.

மருத்துவ பரிசோதனையில் சித்தியடையாத காரணத்தினால் பணி நீக்குவதாக அறிவித்துள்ளது.எச்.ஐ.வி.நோய்த்தொற்று தாக்கப்பட்ட ஒருவருக்கு பணிவழங்கக்கூடாது என எந்தவொரு சட்டத்திலும் குறிப்பிடப்படவில்லை என்ற அடிப்படையில்மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (இ-3)

# மோசடிக்காரர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்

## அநுர எம்.பி.அட்வைஸ்

(கொழும்பு)

ஊழல் மோசடிகளில் ஈடுபடுவோருக்கு எதிராக மக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில்,

பத்து ரூபா லஞ்சம் பெற்றுக கொண்டாலும்சட்டத்தின் அடிப்படையில் வழக்குத் தொடர முடியும்.

எனினும் கோடிக்கணக்கான ரூபா மக்கள் பணத்தை சூறை யாடியவர்கள் சுதந்திரமாக திரிகின்றார்கள்.

கள்வர்களுக்கு, மோசடிகாரர்களுக்கு தண்டனை வழங்குவதாக ஆட்சி பொறுப்பினை ஏற்றுக் கொண்ட அரசாங்கம், யாரை தண்டிக்க வேண்டும், யாரைத் தண்டிக்கக்கூடாது என நடுப்பகலில் தேர்வு செய்து வருகின்றது.

அரசாங்கத்தின் நடவடிக்கைகளினால் பொருளாதாரம் பாரிய பாதிப்பை எதிர்நோக்கியுள்ளது.

மக்களின் பிரச்சினைகளுக்கு எவ்வித உரிய தீர்வுகளையும் அரசாங்கம் வழங்கவில்லை.



ஊழல் மோசடிகளில் ஈடுபடுவோரை தண்டிக்காத மக் கள் பிரச்சினைக்கு தீர்வு வழங்காத இந்த அரசாங்கத்தை தொடர்ந்தும் ஆட்சியில் அமர்த்துவதா என்பதனை மக்கள் தீர்மானிக்க வேண்டுமென அவர் தெரிவித்தார். (இ-3)

# குழந்தை வளர்ப்பில் பெற்றோர்கள் கவனத்தில் கொள்ள வேண்டியவை

குழந்தை வளர்ப்பு வழிமுறைகளை மனதில் நிறுத்தி பெற்றோர்கள் செயற்பட்டால் நல்ல பண்புள்ள சிறந்த குழந்தைகளை இளம் வயதிலேயே உருவாக்கிவிடலாம்.

சிறந்த பெற்றோராகத் திகழ்வதற்கு முக்கியமான சில வழிமுறைகளைப் பற்றி இவர்கள் தெரிந்து கொள்வது நல்லது. அனுபவத்தின் அடிப்படையில் பெரியோர்களும் ஆய்வாளர்களும் பல வழிமுறைகளை தெரிவிக்கிறார்கள். அவற்றுள் சில:

1. உங்கள் பிள்ளைகள் குழந்தைப் பருவத்தில் இருக்கும் போதே அவர்களிடம் அன்பு செலுத்த போதிய நேரம் ஒதுக்குங்கள்.

2. படிப்பின் முக்கியத்துவத்தை சிறு வயது முதலே உங்கள் குழந்தைகள் உணர்ந்துகொள்ளும்படி விரிவாக எடுத்துக் கூறுங்கள்.

3. உங்கள் குழந்தைகளின் உணர்வுகளுக்கு மதிப்பு கொடுக்கும் வகையில் நடந்துகொள்ளுங்கள். அவர்களின் 'சுய மதிப்பு' பாதிக்காத வகையில் உங்கள் செயல்களைப் பார்த்துக் கொள்ளுங்கள்.

4. வாய்ப்பு கிடைக்கும் போதெலலாம் உங்கள் பிள்ளைகளைப் பாராட்டுங்கள். வாய்ப்புகள் இல்லாவிட்டாலும், பாராட்டுவதற்கான ஒரு சூழலை ஏற்படுத்தி, மனம் திறந்து அவர்களைப் பாராட்டுங்கள். ஏனெனறால், பாராட்டப்படும் குழந்தை மனநிறைவோடும் உற்சாகத்துடனும் வளர்கிறது.

5. உங்கள் பிள்ளைகளை முடிந்த அளவு நம்புங்கள். நீங்கள் நம்புவதை அவர்கள் புரிந்துகொள்ளும்படியும் நடந்துகொள்ளுங்கள். நல்ல நம்பிக்கையோடு வளர்க்கப்படும் குழந்தை தன்னம்பிக்கையோடு தங்கள் வாழ்வை தொடங்குகிறது.


6. உங்கள் குழந்தைகளின் திறமைகளை சிறுவயதிலேயே அடையாளம்கண்டு அந்தத் திறமைகளை சிறப்புத் திறமையாக மாற்றுவதற்கான பயிற்சிகளை வழங்குங்கள்.

7. பாராட்டு கிடைக்கும்போதும், 'விமர்சனத் தாக்குதல்கள்' நிகழும் போதும் ஒரே மனநிலையோடு ஏற்றுக்கொள்ளும் பண்பை உங்கள் குழந்தைகளிடம் உருவாக்குங்கள்.

8. சிறுவயதில் தங்களின் சின்னச் சின்ன செயல்களுக்கும் உங்களின் அங்கீகாரத்தை உங்கள் குழந்தைகள் எதிர்பார்ப்பார்கள். எனவே அவ்வப்போது, 'நீ செய்வது சரிதான்', 'இதை இப்படிச் செய்தால் இன்னும் சிறப்பாக இருக்கும்' என்னும் வழிகாட்டுதலுடன் கூடிய அங்கீகாரத்தை அவர்களுக்கு வழங்குங்கள்.

9. உங்கள் குழந்தைகள் தவறு செய்யும்வரை பார்த்துக்கொண்டு இருக்காதீர்கள். எப்போது தவறு நிகழ்கிற தோ, அப்போதே நாகரிகமான முறையில் சுட்டிக்காட்டவும் தயங்காதீர்கள்.

10. உங்கள் குழந்தை தவறு செய்யும்போதெல்லாம் கண்டும் காணாமல் விட்டுவிட்டு, பின்னர் ஒரு நாளில் அத்தனை தவறுகளையும் பட்டியலிட்டு ஒரே நேரத்தில் சுட்டிக் காட்டினால் அந்தக் குழந்தைக்கு உங்கள்மேல் வெறுப்பு உண்டாகிவிடும். எனவே, எப்போது தவறான பாதையில் உங்கள் குழந்தை செல்கிறதோ, அப்போதே அதனை சுட்டிக்காட்டவும், திருத்தவும் தயங்காதீர்கள்.



11. உங்கள் குழந்தைகள் உங்கள மேல் பாசம் வைப்பதைப்போலவே, நீங்கள் அவர்கள்மீது தேவையான அளவு பாசம் வையுங்கள். அளவுக்கு அதிகமான அன்பு சிலநேரங்களில் குழந்தைகளை தவறான வழியில் திசை திருப்பவும் வாய்ப்புள்ளது.

12. குழந்தைகள் கேட்பதையெல்லாம் கேட்டவுடன் வாங்கிக் கொடுக்கும் பழக்கத்தை தவிர்த்துவிடுங்கள். குழந்தைகள் கேட்கும் பொருள் அவர்களுக்குத் தேவைதானா என்பதை ஒருமுறைக்கு இருமுறை சிந்தித்து வாங்கிக் கொடுப்பது நல்லது.

13. உங்கள் குழந்தை சிறு தவறு செய்துவிட்டால் மிகப்பெரிய தண்டனையை கொடுத்து விடாதீர்கள். அந்தத் தவறை அவர்கள் உணர்ந்து திருந்துவதற்கான வாய்ப்பை வழங்குங்கள்.

14. இளம்வயதிலேயே உங்கள் பிள்ளைகளுக்கு லஞ்சம் கொடுத்து பழக்காதீர்கள். 'நீ கடைக்குப்போய் பொருள் வாங்கி வந்தால் உனக்கு சொக்லேட் வாங்கித் தருவேன்'. 'நீ அம்மாவோடு துணைக்குப் போனால உனக்கு ஒரு சுடிதார் வாங்கித் தரச் சொல்வேன்' என தேவையற்ற முறையில் பரிசுகள் வழங்கும் பழக்கத்தை தவிர்ப்பது நல்லது. சின்னச்சின்ன பரிசுகளுக்கு ஆசைப்படும் குழந்தைகளின் மனம், பரிசினைப் பெறுவதற்காகவே சில செயலகளை செய்யும். ஆனால், எப்போதும் பரிசுகளை எதிர்பார்த்து செயலகளைச் செய்ய ஆரம்பித்து விட்டால், அது மோசமான எதிர் விளைவை உருவாக்கிவிடும் அல்லவா?

15. உங்கள் குழந்தையின் கல்வியின்மீது அதிக கவனம் செலுத்துஙகள். ஒவ்வொரு நாளும் பள்ளிககுச் சென்று திரும்பியதும், பள்ளிப் பாடஙகள் பற்றிய விபரஙகளைக் கேளுங்கள். முடிந்த அளவு அவர்களுக்கு உதவி செய்யவும் நேரம் ஒதுக்குங்கள்.

இதுபோன்ற இன்னும் பல குழந்தை வளர்ப்பு வழிமுறைகளை மனதில் நிறுத்தி பெற்றோர்கள் செயற்பட்டால் நல்ல பண்புள்ள சிறந்த குழந்தைகளை இளம் வயதிலேயே உருவாக்கிவிடலாம்.

குழந்தைகள் இனிய குழந்தைகளாக மாறிவிட்டால், அவர்களின் இதயத்தில் மகிழ்ச்சி நிறையும். இனிய குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களாகும்போது அவர்கள் நல்ல மனிதர்களாக மாறுவார்கள்.

இளமையில் நலமாய் தொடங்கும் வாழ்க்கைப் பயணம்தான் ஒருவரை வயதான காலத்திலும் நிம்மதியாய் வாழ வைக்கிறது.

## Health Care மருத்துவ உலகம்

உங்கள் நலம் உங்கள் கைகளில்

# வேலைக்குச் செல்லும் கர்ப்பிணிப்பெண்களின் கவனத்திற்கு



கர்ப்ப காலத்தில் அலுவலகத்துக்குச் சென்று வரும் பெண்களுக்கு பயணக் களைப்பு, மன அழுத்தம் எனப் பல்வேறு காரணங்களால், உடல் நலம் பாதிககப்படும்.

அலுவலகத்துக்குச் சென்று வரும் பெண்களுக்கு, அதனால் ஏற்படும் பயணக் களைப்பு, வேலையை முடிக்க வேண்டுமே என்ற பரபரப்பால் ஏற்படும் மன அழுத்தம் எனப் பல்வேறு காரணங்களால், உடல் நலம் பாதிக்கப்படும். தாயைவிட, வயிற்றில் உள்ள குழந்தை அதிகப் பாதிப்புக்கு உள்ளாகலாம்.

வேலைக்குச் செல்லும் கர்ப்பிணிகளுக்கு சுகப்பிரசவம் என்பதும் சற்றுப் பிரச்சினைதான். வேலைப்பளுவால் ஏற்படும் மன அழுத்தத்தால் வயிற்றில் உள்ள குழந்தைக்குப் போதிய ஒட்சிசன், இரத்தம், சத்துக்கள் கிடைக்காமல் போகும். ஆனால், சில எளிய வழிமுறைகளைப் பின்பற்றினால், இந்தப் பிரச்சினைகளைத் தவிர்க்க முடியும்.

கர்ப்பக் காலத்தில் செரிமான மண்டலம் மெதுவாகத்தான் இயங்கும். குழந்தையின் வளர்ச்சியால் வயிறும் பெரிதாகிக் கொண்டே போகும். இதனால், ஒரே நேரத்தில் நன்றாகச் சாப்பிட முடியாது. ஆனால், இந்தத் தருணத்தில்தான் உடலுக்கு அதிக அளவு சத்துக்கள் தேவைப்படும். எனவே, மூன்று வேளை என்பதை சிறிது சிறிதாகப் பிரித்து ஆறு வேளைகளாகச் சாப்பிடுங்கள். சரியான நேரத்தில், போதிய இடைவெளியில் சத்தான உணவுகளை எடுத்துக்கொள்ள வேண்டும். இது, வயிற்றில் வளரும் குழந்தைக்கும் என்பதை மனதில்கொள்ள வேண்டும்.

வீட்டை விட்டுக் கிளம்பும்போது அப்பிள், கொய்யா, வாழைப்பழம், பேரிக்காய் போன்ற சத்துள்ள பழங்களை நறுக்காமல், எடுத்துச் செல்ல வேண்டும். பழங்களைக் கடித்துச் சாப்பிடுவது நல்லது. முடியாத பட்சத்தில் ஜூஸாகச் செய்து சாப்பிடலாம். உடல் வரட்சி நீங்குவதுடன் வயிறும் நிறையும்.

எப்போதும் காய்ச்சி ஆறவைத்த நீரை உடன் எடுத்துச்செல்ல வேணடும். ஒரு மணி நேரத்துக்கு ஒரு முறை என 12 டம்ளர் தண்ணீர் குடிப்பது நல்லது.

உடலுக்கு ஆற்றல் தரக்கூடிய உலர் பழங்களைக் கலந்து வைத்துக்கொள்ள வேண்டும். அதிக வேலைச் சுமையின்போது, வாயில் போட்டு மென்று சாப்பிடலாம்.

நீண்ட நேரம் சாப்பிடாமல் இருந்தால், இரத்தத்தில் உள்ள குளுக்கோஸின் அளவு குறைய ஆரம்பித்துவிடும்.

இதனால், சிசு வின் வளர்ச்சி பாதிக்கப்படலாம். எனவே, எப்போதும் கையில் ஒரு பிஸ்கட் பக்கெட்டை வைத்துக் கொண்டு, வயிற்றைக் காயப்போடாமல், பசிக் குமபோது சாப்பிடுவது அவசியம்.

இரவில் ஆவியில் வேகவைத்த அல்லது எளிதில் ஜீரணிக்கக்கூடிய உணவுகளைச் சாப்பிடுவது நல்லது.

நெஞ்செரிச்சல் போன்ற பிரச்சினைகள் இருந்தால், வறுத்த, பொரித்த, அதிகம் காரம், எண்ணெய் உணவுகளைச் சாப்பிடக் கூடாது.

அலுவலகத்தைச் சுற்றி நடைப் பயிற்சி செய்யுங்கள். நீண்ட நேரம் உட்கார்ந்திருப்பதால் காலில் இரத்தம் தங்குதல், வெரிகோசிஸ் வெய்ன், இரத்தம் கட்டிப்போதல் போன்ற பிரச்சினைகள் ஏற்படும். இதற்கான வாய்ப்பை நடைப்பயிற்சி தடுக்கிறது. கடினமான உடற்பயிற்சிகள், அதிக எடை கொண்ட பொருட் களைத் தூக்குவது போன்றவற் றைத் தவிர்த்துவிடுங்கள்.

அலுவலகம் முடிந்து வீடு வந்ததும், நல்ல வெளிச்சமான பகுதியில் காலாற சிறிது நேரம் நடக்கலாம். கடின வேலைகளைத் தவிர்த்து, முடிந்தவரை கர்ப்பக் காலத்தில் எடையையும் கட்டுப்பாட்டுக்குள் வைக்கலாம்.

# ஏமனில் கிளர்ச்சியாளர்கள் அரச படைகள் இடையே கடும் மோதல்; 70பேர் பலி!





(சனா)

**ஏமன் நாட்டில் கிளர்ச்சியாளர்கள் மற்றும் அரச தரப்பு படைகள் இடையே நடை பெற்ற கடுமையான மோதலில் 70 பேர் பலியாகினர்.**

ஏமனில் அரசுக்கும், ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே கடந்த 2015 ஆம் ஆண்டு மார்ச் முதல் உள்நாட்டு போர் நடந்து வருகிறது.

தலைநகர் சனா மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளையும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றி தனி அரசு நடத்தி வருகின்றனர்.

எனவே ஜனாதிபதி மன்சூர் ஹாதி ஏடனை தலைநகராக கொண்டு ஆட்சி நடத்தி வருகிறார். இவருக்கு சவுதி ஆதரவு கூட்டுப்படைகள் ஆதரவு அளித்துள்ளன.

இதனால் கிளர்ச்சியாளர்களுக்கும், சவுதி கூட்டுப்படை ஆதரவு பெற்ற இராணுவத்துக்கும் இடையே கடும் போர் நடக்கிறது. 21 மாதங்களாக நடைபெறும் உள்நாட்டு போரில இதுவரை 10 ஆயிரம் பேர் பலியாகியுள்ளனர்.

இந்நிலையில், ஏமனில் கடந்த இரண்டு நாட்களாக கிளர்ச்சியாளர்கள் மற்றும் அரச தரப்பு படைகள் இடையே நடைபெற்ற கடுமையான மோதலில் 70 பேர் பலியாகினர்.

சவுதி தலைமையிலான கூட்டுப்படை அல்-மந்தப் பகுதியில் வான்வெளி தாக்குதலை நடத்தியது. இந்த தாக்குதலில் கிளர்ச்சியாளர்கள் தரப்பில் 52 பேர் கொல்லப்பட்டனர். அதில் அரசு தரப்பு படையைச் சேர்ந்த 14 பேர் பலியாகினர். (இ-7)

# NAFTA ஒப்பந்தம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவேன்

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அறிவிப்பு

(வோஷிங்டன்)

வட அமெரிக்க சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பில் NAFTA, மெக்சிக்கோ மற்றும் கனேடிய நாட்டு தலைவர்களுடன் விரைவில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளார்.

தலைநகர் வோஷிங்டன் டி.சியில் ஊடகவியலாளர்களை சந்தித்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த டொனால்ட் ட்ரம்ப், "NAFTA ஒப்பந்தம் தொடர்பில் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தப்படும்.

குடியேற்றம் மற்றும் எல்லை பாதுகாப்பு தொடர்பிலும் குறித்த பேச்சுவார்த்தையின் போது அக்கறை செலுத்தப்படும்" என தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவதற்கு முன்பு தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்ட ட்ரம்ப், அமெரிக்காவின் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் NAFTA ஒப்பந்தம் தொடர்பில் பேச்சுவார்த்தி அமெரிக்காவுக்கு சாதகமான வகையில் NAFTA ஒப்பந்தத்தை மாற்றியமைப்பேன் எனவும் தெரிவித்திருந்தார்.

குறித்த வாக்குறுதியை நிறைவேற்றும்வகையிலேயே ட்ரம்ப் தற்போது NAFTA ஒப்பந்தம் தொடர்பில் பேச்சுவார்த்தை மேற்கொள்ள தயாராகி வருகின்றார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

NAFTA ஒப்பந்தம் அமெரிக்கா, கனடா மற்றும் மெக்சிக்கோ ஆகிய நாடுகளுக்கிடையில் சுமார் 23 வருடங்களுக்கு முன்னதாக ஏற்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க, முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, ட்ரம்புக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளமை தொடர்பிலும் ட்ரம்ப் கருத்து தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்த போது, "முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா எனக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

அது அவரது நல்லெண்ணத்தை காட்டுகின்றது. குறித்த கடிதத்தில் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை நான் ஊடகங்களுக்கு தெரிவிக்க மாட்டேன்" என தெரிவித்துள்ளார். (இ-7)

# மருமகனை ஆலோசகராக ட்ரம்ப் நியமித்தது சரியே

## அமெரிக்க சட்டத்துறை அறிவிப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்ற "டொனால்ட் ட்ரம்ப் தனது மருமகனை வெள்ளை மாளிகையின் மூத்த ஆலோசகராக நியமித்தது சரியே' என அமெரிக்க சட்டத்துறை அறிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் கடந்த 20 ஆம் திகதி பதவி ஏற்றார். அதற்கு முன்னதாக தனது அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளை நியமித்தார்.

அப்போது வெள்ளை மாளிகையின் மூத்த ஆலோசகராக ஜாரெட் குஷ்னரை நியமித்தார். அவர் ட்ரம்பின் மகள் இவாங்காவின் கணவர். அதாவது ட்ரம்பின் ம மகன ஆவார்.

இதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது. அரசு பதவிகளில் உறவினர்களை நியமிபபது அரசியல் சட்டத்துக்கு எதிரானது என விமர்சிக்கப்பட்டது. எனவே, பதவி ஏற்றவுடன் இது குறித்து புதிதான நியமிக்கப்பட்ட சட்டதுறையிடம் ஜனாதிபதி ட்ரம்ப் கருத்து கேட்டார்.

இது குறித்து அரசு துணை அட்டர்னி ஜெனரல் டேனியல் கோப்ஸ்சி 14 பக்க அறிக்கையை தாக்கல் செய்தார். அதில் 1967 ஆம் ஆண்டு சட்டப்படி அரசு பதவிகளில் உறவினர்கள் நியமிக்கப் படலாம் என உள்ளது.

பல ஆண்டுகளுக்கு முன்பு ஜோன் கென்னடி தனது சகோதரர் ராபர்ட் கென்னடியை அட்டர்னி ஜெனரல் ஆக நியமித்துள்ளார். 1978 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டத்தில் ஊழியர்களை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

எனவே, ஜனாதிபதி ட்ரம்ப தனது மருமகன் ஜாரெட் குஷ்னரை (35) வெள்ளை மாளிகையின் மூத்த ஆலோசகராக நியமித்தது சரியே என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# பொறுத்திருந்து பார்ப்போம்; ட்ரம்ப் குறித்து போப் கருத்து



(மட்ரிட்)

அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள டொனால்ட் ட்ரம்ப் குறித்து தற்போது கருத்து தெரிவிக்க முடியாது என்றும் பொறுத்து இருந்து பார்ப்போம் என்றும் போப் பிரான்சிஸ் தெரிவித்தார்.

அமெரிக்காவின் 45 ஆவது ஜனாதிபதியாக குடியரசு கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற டொனால்ட் ட்ரம்ப் ஜனவரி 20 ஆம் திகதி நடைபெற்ற விழாவில் பதவி ஏற்றார்.

துணை ஜனாதிபதியாக பென்ஸி பதவி ஏற்றார். இருவருக்கும் அந்நாட்டு உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஜான் ராபர்ட் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள டொனால்ட் ட்ரம்ப் குறித்து தற்போது கருத்து தெரிவிக்க முடியாது என்றும் பொறுத்து இருந்து பார்ப்போம் என்றும் போப் பிரான்சிஸ் தெரிவித்தார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில்,

"ட்ரம்ப் குறித்து எந்த கருத்தினையும் கூற விரும்பவில்லை. அவர் எப்படி செயற்படுகிறார், தனது கொள்கைகளை எப்படி நடைமுறைப்படுத்துகிறார் என்பதை முதலில் பார்க்கலாம்.

நெறிமுறை விழுமியங்களின் வழிகாட்டுதல்களின் படி செயற்பட வேண்டும். ஏழைகள் மற்றும் நாடு கடத்தப்பட்டவர்கள் மீது கவனம் செலுத்த வேண்டும்" என்று தெரிவித்தார். (இ-7)

# 11 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் பசுமையாகயிருந்தது சகாரா

(நியூயோர்க்)

11 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சகாரா பாலைவனம் 10 மடங்கு பசுமையாக இருநதது என புதிய ஆய்வில் தெரிய வந்துள்ளது. உலகிலேயே மிகப் பெரிய பாலைவனமாக சகாரா திகழ்கிறது. இது ஆபிரிக்கா கண்டத்தில் உள்ள பாலைவனம மிக அதிக அளவு வெப்பம் கொண்டது.

ஆனால்இந்த பாலைவனம 5 ஆயிரம் முதல் 11 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தற்போது இருப்பதை விட 10 மடங்கு பசுமையாகவும், ஈரப்பதமாகவும் இருந்தது.

அந்த காலகட்டத்தில் அங்கு அதிகமான மழை பொழிவு இருந்தது. அப்பகுதி முழுவதும் பசுமையாக இருந்ததால் மக்கள் அதிக அளவில் குடியிருந்தனர். கால்நடைகளின் மேய்ச்சல் பகுதியாகவும் இருந்தது.



இதனால் கால்நடைகளும் பெருமளவில் வளர்க்கப்பட்டன. ஆனால் 8 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சகாரா பாலைவனம் வரட்சி பிடியில் சிக்கியது. 1000 ஆண்டுகள் படிப்படியாக வரண்டு வெப்பம் மிகுந்த பாலைவனமாக மாறியது.

இத்தகவல் புதிய ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது. அமெரிக்காவின் அரிசோனாவில் உள்ள ஜெசிகா டயர்னி பல்கலைக் கழகத்தை சேர்ந்த நிபுணர்கள் கடந்த 25 ஆண்டுகளாக சகாரா பாலைவனம் பகுதியில பெய்த மழை அளவு குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.

அந்த ஆய்வில் இத்தகைய தகவல் தெரிய வந்துள்ளது. பருவநிலை மாற்றம் காரணமாக சகாரா படிப்படியாக பாலைவனமாக மாறி இருக்க லாம் என்று கூறப்பட்டுள்ளது. அகழ்வாராய்ச்சி மூலம் இங்கு மனிதர்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்கள் காணப்படுவதும் அறியப்பட்டுள்ளது. (இ-7)

# போராட்டத்தைக் கைவிடவே மாட்டோம் இளைஞர்கள், மாணவர்கள் திட்டவட்டம்





(சென்னை)

பொலிஸாரின் வேண்டுகோளை ஏற்க மறுத்த இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் போராட்டத்தை கைவிடவே மாட்டோம் என்று திட்டவட்டமாக அறிவித்தனர்.

ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக மெரினா கடற்கரையில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் தங்களது போராட்டத்தை கைவிட்டு கலைந்து செல்லுமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இந்நிலையில், பொலிஸாரின் வேண்டுகோளை ஏற்க மறுத்த இளைஞர்கள் போராட்டத்தை கைவிட மாட்டோம் என்று திட்டவட்டமாக அறிவித்தனர்.

தற்காலிக தீர்வு தங்களுக்கு வேண்டாம் என்றும் நிரந்தரத் தீர்வு தான் வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

மேலும் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து இன்று அறிவிக்கப்படும். அடுத்த அறிவிப்பு வெளியாகும் வரை போராட்டம் தொடரும் என்று அவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மெரினாவில் மட்டுமல்லாமல் மதுரை அலங்காநல்லூர், புதுச்சேரி உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு இடங்களிலும் இதே கருத்து தான் நிலவி வருகிறது. (இ-7)

# கோவை; ஜல்லிக்கட்டு போராட்டக்காரர்கள் வெளியேற்றப்பட்டனர்



(கோவை)

ஜல்லிக்கட்டு போட்டிகளை நடத்த நிரந்தரச் சட்டம் இயற்ற வேண்டும் என கோவை வ.உ.சி. மைதானத்தில் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தவர்களை நேற்றுக் காலை பொலிஸார் வலுக்கட்டாயமாக வெளியேற்றினர்.

ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக கோவை வ.உ.சி. மைதானத்தில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் தங்களது போராட்டத்தை கைவிட்டு கலைந்து செல்லுமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

பொலிஸாரின் வேண்டுகோளை ஏற்க மறுத்த இளைஞர்கள், ஜல்லிக்கட்டு போட்டிகளை நடத்த நிரந்தரச் சட்டம் இயற்றும்வரை போராட்டத்தை கைவிட மாட்டோம். போராட்டம் தொடரும் என்று திட்டவட்டமாக தெரிவித்தனர்.

இந்நிலையில், நேற்றுக் காலை 8 மணியளவில்போராட்டக்காரர்களை நோக்கி முன்னேறிச் சென்ற பொலிஸார், அங்கு போராட்டத்தில் ஈடுபட்டு வந்தவர்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றினர்.

இளைஞர்களை ஆண் பொலிஸாரும், பெண்களை மகளிர் பொலிஸாரும் அழைத்துச் சென்றனர்

மீண்டும் அந்த இடத்துக்குள் போராட்டக்காரர்கள் நுழைந்து விடாதபடி பலத்த பொலிஸ் காவல் போடப்பட்டுள்ளது.

இதேபோல் வேலூர், திண்டுக்கல், கிருஷ்ணகிரி, நாகை, சீர்காழியில் போராடியவர்களையும் பொலிஸார் வெளியேற்றினர்

காஞ்சி நகரில் வணிகர் வீதிப் பகுதியில் நடந்து வந்த போராட்டம் முடிவுக்கு வந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. திருச்சி நீதிமன்றம் அருகே நடைபெற்று வந்த போராட்டம் வாபஸ் பெறப்பட்டது.

கும்பகோணத்தில் நடைபெற்று வந்த போராட்டமும் வாபஸ் பெறப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆந்திரா - தமிழ்நாடு எல்லைப்பகுதியான திருத்தணியில் பொலிஸாரின் கோரிக்கையை ஏற்று போராட்டம் கைவிடப்பட்டது. (இ-7)

# சென்னையில் பல பகுதிகளிலும் பொதுமக்கள் திடீர் சாலை மறியல்



(சென்னை)

ஜல்லிக்கட்டு போராட்டத்துக்கு ஆதரவாக நேற்று சென்னையில் பல பகுதிகளில் பொதுமக்கள் திடீர் சாலை மறியலில் ஈடுபட்டதால், போக்குவரத்து ஸ்தம்பித்துள்ளது.

மெரினா கடற்கரையை விட்டு கலைந்து செல்ல மாட்டோம் என ஜல்லிக்கட்டு ஆதரவாளர்கள் மறுத்து வருவதால் பொலிஸார் அவர்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றி வருகின்றனர்.

தடியடி, கண்ணீர் புகை குண்டு வீச்சு, வானத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு என பொலிஸார் எடுத்து வரும் நடவடிக்கைகள் தொடர்பான செய்திகள் ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களில் வெளியாகிவரும் நிலையில் மெரினாவில் உள்ள ஜல்லிக்கட்டு போராட்டக்காரர்களின் நிலைப்பாட்டுக்கு ஆதரவு தெரிவித்து சென்னைவாசிகளும் நேற்று போராட்டக்களத்தில் குதித்தனர்.

சென்னை அண்ணா சாலை, ஈ.வெ.ரா.நெடுஞ்சாலை, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, பெரம்பூர் நெடுஞ்சாலை உள்ளிட்ட நகரின் பல முக்கிய சாலைகளில் நேற்று பொதுமக்கள் திடீர் சாலை மறியலில் ஈடுபட்டனர்.(இ-7)

# ஜெயலலிதா பிறந்த நாளில் மரம் நடும் பெருந்திட்டம்



மறைந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் 69ஆவது பிறந்த நாளான எதிர்வரும் பெப்ரவரி 24ஆம் திகதியன்று மரம் நடும் பெருந்திட்டம் தொடங்கப்படும் என்று சட்டசபையில் ஆளுநர் வித்யா சாகர் ராவ் தெரிவித்தார். சட்டசபையில் நேற்று வித்யாசாகர் ராவ் உரை நிகழ்த்தினார்.

இதன்போது வர்தா புயல் பாதிப்பு மறுசீரமைப்புப் பணிகளுக்காக 1,972.89 கோடி ரூபாயை தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்கக் கோரியும், நிரந்தரக் கட்டுமானப் பணிகளுக்காக 20,600. 37 கோடி ரூபாயை தமிழ் நாட்டிற்கு வழங்கக் கோரியும், முதலமைச்சர் மத்திய அரசிடம் கோரிக்கை மனு அளித்துள்ளார். இதனை உடனடியாகப் பரிசீலித்து நிதியுதவி வழங்க வேண்டும்

சென்னை மற்றும் அதை அடுத்துள்ள மாவட்டங்களில் அரசு மற்றும் தனியார் நிலங்களிலிருந்த பெரும்பாலான மரங்கள் 'வர்தா' புயலால் வேரோடு சாய்க்கப்பட்டும், பாதிப்பிற்கும் உள்ளாகின. அரசு நிலங்களில் மரங்களை நடுவதற்கும் தனிநபர்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் மரம் நடுவதை ஊக்கப்படுத்துவதற்கும் ஒரு மாபெரும் பசுமைத்திட்டத்தை இந்த அரசு ஆரம்பிக்கவுள்ளது.

மரங்கள் நடுவதை மற்றும் பசுமைப்பரப்பை அதிகரிப்பது போன்றவை தமிழ்நாட்டின் மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் உள்ளம் கவர்ந்த பணி என்பதால் இந்த மரம் நடும் பெருந்திட்டம் அவரின் 69ஆவது பிறந்த நாளான எதிர் வரும் 24ஆம் திகதி அன்று ஆரம்பிக்கப்படும்.

'வர்தா' புயலால் நமது மாநிலம் கடும் காற்றைத் தான் எதிர கொண்டதே தவிர எதிர்பார்த்த அளவு மழையைப் பெறவில்லை. வடகிழக்குப் பருவமழை சராசரி அளவைக் காட்டிலும் 62 சதவீதம் குறைவாகப் பெய்துள்ளதால், மாநிலம் தற்போது கடும் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சியான மழையின்மை மற்றும் தண்ணீர்ப் பற்றாக்குறையின் காரணமாக ஏற்பட்ட கடும் பயிரிழப்பு, இலட்சக்கணக்கான விவசாயிகளின் வாழ்வாதாரத்தை வெகுவாகப் பாதித்துள்ளது.

குடிநீர் மற்றும் கால்நடைகளுக்கான தீவனத்திற்கும் பெரும்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கடந்த 140 ஆண்டுகளில், மாநிலம் கண்டிராத மிக மோசமான வரட்சி இது என்ற அடிப்படையில், இதனை 'கடும் வரட்சி' என்று அறிவித்து, பயிரிழப்பு மற்றும் இதர நிவாரணப் பணிகளுக்கு மாநில அரசு நிதியுதவியை அறிவித்துள்ளது. இந்நிலையில், தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 39,565 கோடி ரூபாய் வழங்க மத்திய அரசை இந்த அரசு கேட்டுக் கொண்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சிங்கக்கொடிக்கு கொடுக்கும் முக்கியத்துவம் நந்திக்கொடிக்கும் வழங்கப்படல் வேண்டும்

## அமைச்சர் மனோகணேசன் தெரிவிப்பு



இலங்கையராக வாழ வேண்டுமாயின் எமது மதம், மொழி என அனைத்து அம்சங்களும் சிங்கள பௌத்தம் சார்ந்ததாக இருக்க வேண்டும் என்ற நிலைப்பாடு மாறி விட்டது. எனவே இன்று சிங்கக் கொடிக்கு கொடுக்கப் படுகின்ற முக்கியத்துவம் நந்திக் கொடிக்கும் வழங்கப்பட வேண்டும் என தேசிய சகவாழ்வு நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு கதிரேசன் வீதி கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் அறநெறி பாடசாலையினை அங்குரார்ப்பணம்செய்து வைக்கும்நிகழ்வு நேற்று முன் தினம் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது நாம் இலங்கையராக சிங்கக் கொடியினை முன்னிலைப்படுத்துவதில் மாத்திரம் திருப்தியடையாமல் நந்திக்கொடியினையும் உள்வாங்கி திருப்பியடைய வேண்டும் அதுவே சமத்துவம். உண்மையான தேசியமும் அதுவேயாகும்.

ஆனால் இன்று சிலருக்கு சிங்கம் மாத்திரமே தேசியமாக உள்ளது. சிங்கம் மட்டும் தேசியம் அல்ல. ஆனால் சிங்கத்தினை தேசியம் என்று கருதி திருப்தியடைந்து விடுவார்கள். சிங்கம் மட்டும் தேசியம் என்று கருதுபவர்கள் சிங்கத்தின் பரல் சரணடைந்துவிட்டனர். அது தேசியமல்ல.

மற்றும் சிலர் நந்தியை மாத்திரம் முதற்கொண்டு செயற்படுகின்றனர். அதுவும் கிடையாது நந்தி மட்டும் தேசியம் என்றால் அதனை இனவாதம் அல்லது தீவிரவாதம் என்றே கருத வேண்டும். எனவே இரண்டையும் சமமாக கருத வேண்டும. ஒரு புறம் நந்தி மறுபுறம் சிங்களம் என்ற கோணத்திலிருந்து நாம் பார்க்க வேண்டும்.

இவை இரண்டும் இருந்தால் மாத்திரமே நாம் இந்த நாட்டில் இந்துவாகவும் தமிழனாகவும் இலங்கையனாகவும் வாழ முடியும். அவற்றில் குழப்பங்களை ஏற்படுத்துவதில் அர்த்தமில்லை. ஆனால் நாம் இலங்கையர் என்பதனால் இந்து என்பதையும் தமிழர் என்பதையும் விட்டுக் கொடுக்கவும் முடியாது.

தமிழ் என்ற காரணத்திற்காக இலங்கையர் என்றதை விடுக்கவும் தேவையில்லை. முன்பு நாம் இலங்கையராக இருக்க வேண்டுமாயின் சிங்களவரக இருக்க வேண்டும், சிங்கள மொழி பேச வேண்டும் என்று நிலைமை இருந்தது. அவ்வாறான நிலைமை இன்று இல்லை.

சிங்களவர் முதல் தர இலங்கையர் என்றும் மற்றையவர் அடுத்தடுத்த தரத்தில் உள்ளவர்கள் என்ற கருத்தினையும் நாம் இன்று தகர்த்துள்ளோம். ஆகவே இன்று தமிழனாகவும் இந்துவாகவும் இருக்கின்ற அதே வேளை நாம் இலங்கையனாகவும் இருக்க வேண்டும்.

இந்த அறிவு சகலருக்கும் இருக்க வேண்டும். இந்த அறிவு அரசாங்கத்திற்கும் உள்ளது. அரசாங்கத்தின் ஜனாதிபதிக்கும் இது தொடர்பில் அறிவுள்ளது. பிரதமருக்கும் அமைச்சரவைக்கும் இந்த அறிவு உள்ளது. துறைசார் அமைச்சருக்கும் உள்ளது. அதனால் சிங்கக்கொடியினை உயர்த்தி தேசியத்தை போற்றினாலும் எமது இனம் மதம் என்ற தனித்துவத்தினை மறந்துவிடக்கூடாது.


தமிழருக்கும் ஈழத்தமிழர, மலையகத் தமிழர் என்று வேறுபாடு உள்ளது. அவை வரலாறு அவையும் இருக்கதான் வேண்டும். அந்த தனித்துவங்கள் உள்வாங்கப்படுவது சிறந்தது. ஆனால் இலங்கையராக இருக்க வேண்டும். இநத ஆட்சி மொழிகள் இன்று எமது நாட்டின் ஆட்சி மொழியாக உள்ளன. பறங்கிய, ஆபிரிக்கர்கள், மலையா எத்தினை சேர்ந்தவர்கள் என 19 இனத்தவர் இலங்கையில் உள்ளனர்.

எனவே சிங்கள பௌத்தம் மட்டுமல்ல இலங்கை 19 மதங்கள், 3 மொழிகளை சேர்ந்தால் தான் அது இலங்கையாக இருக்கும். எனவே சிங்களம், பௌத்தம் மாத்திரம இலங்கையர் என்ற நிலைப்பாட்டினை தூக்கியெறிந்து விட்டோம். இதனை சிங்கள தலைவர் மத்தியிலும் கூட நாம் கூறியுள்ளோம்.

மாறான தமிழர்கள் மத்தியில் பேசிவிட்டு தமிழ் தேசிய வாதத்தினை தூண்டிவிட்டு செயற்பட நாம் தயாராக இல்லை. மக்கள் நிராகரித்தால் அரசியலிலிருந்து செல்லவும் தயாராகவே உள்ளேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# அரச அதிகாரிகள் அமைச்சர்களின் விளையாட்டு பொம்மைகள் அல்ல

## அசோக பீரிஸ் கடும் விசனம்



எமது நாட்டின் அமைச்சர்களிடைய அரச அதிகாரிகள் தொடர்பில் உள்ள மனப்பதிவு, பாடசாலையிலுள்ள ஆசிரியர் மாணவர்களுக்கிடையிலுள்ள தொடர்பைப் போன்றது என எல்லை நிர்ணயக் குழுவின் தலைவர் அசோக பீரிஸ் தெரிவித்தார்.

மஹரகமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் விடுதலை முன்னணியின் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆசிரியர்கள் மாணவர்களை அமரச் சொன்னால், அமர வேண்டும். எழுந்து நிற்குமாறு கூறினால் எழுந்து நிற்க வேண்டும். கையைத்தூக்குமாறு கூறினால் கையைத் தூக்க வேண்டும். இதேபோன்று தான் அரசியல்வாதிகள் அரச அதிகாரிகளுக்கு எருமை, கழுதை என்றெல்லாம் அழைப்பதனை நான் கண்டுள்ளேன். நான் அதனை மாற்றிய ஒரு அரச அதிகாரி எனவும் அவர் சுட்டிக்காட்டினரர்.

நான் எல்லை நிர்ணயக் குழுவின் தலைவராக இருக்கும் போது சம்பந்தப்பட்ட அமைச்சர் கூட்டங்களின் போது எனக்கு பேச இடமளிக்காமல் பேசிக் கொண்டே செல்வார். இதன் போது நான் வழிமறித்து எனது சந்தர்ப்பத்தை கேட்பேன். இதன் போது, அவர் பிரமித்துப் போவார். அரச அதிகாரிகள் அமைச்சர்களின் விளையாட்டு பொம்மைகள் அல்ல எனவும் அவர் தெரிவித்தார். (இ-3)

# 4 வாகனங்கள் மோதி விபத்து 2 பேர் பலி!35 பேர் படுகாயம்







கொழும்பு - கண்டி பிரதான வீதியில் பட்டலிய கஜுகம பிரதேசத்தில் நேற்று அதிகாலை 5.45 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந் துள்ளனர்.

அநுராதபுரம் நோக்கி பயணித்த இ.போ.ச. பேருந்து ஒன்றும் மா ஏற்றி வந்த கொள்கலன் வாகனம் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதோடு, அதனைத் தொடர்ந்து வந்த கார் மற்றும் ஆட்டோ ஒன்றும் குறித்த விபத்தில் சிக்கிக் கொண்டுள்ளன.

இவ்விபத்தில் 35 பேர் காயமடைந்து வத்துபிட்டிவல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக நிட்டம்புவ போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விபத்தில் பெண் ஒருவரும் ஆண் ஒருவரும் உயிரிழந்துள்ளதோடு, அவர்கள் யார் என இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

கெக்கிராவ டிப்போவுக்குரிய இ.போ.ச. பேருந்து , பயணிகளை ஏற்றியவாறு கொழும்பிலிருந்து இருந்து அநுராதபுரம் நோக்கி பயணத்துக் கொண்டிருந்த வேளையில் எதிர்த திசையில் மா ஏற்றி வந்த கன்டைனர் (கொள்கலன்) லொறியுடன் நேருக்கு நேர் மோதியதை அடுத்து, குறித்த பேருந்து புரண்டுள்ளது.

இதன்போது அதன் அருகில் இருந்த லொறியின் தட்டு காரணமாக, பேருந்து வயல் நிலத்தினுள் புரளமால் தடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில பின்னால் வந்த ஆட்டோ பேருந்தின் பின்புறமாக மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதோடு, அதன் சாரதி மற்றும் அதிலிருந்த பெண் ஒருவ ரும் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.


பேருந்துடன் மோதிய கன்டைனர் வீதியின் குறுக்கே புரண்டுள்ளதோடு, அது அவ்வாறு புரளும் நிலை யில், பின்னால் வந்த சிறிய ரக காரின் மீதும் வீழ்ந்துள்ளது. இதனால் காருக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.

கன்டைனரில் சிக்கிய நிலையில் காணப்பட்ட சாரதி மீட்கப்பட்டு, அம்புலன்ஸ் வாகனத்தின் மூலம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதோடு, பேருந்தின் சாரதியும் காயத்திற்குள்ளாகியுள்ளார்.

குறித்த மா லொறி வீதி யின குறுக்கே வீழ்ந்ததால் இரு மணி நேரத்திற்கு போக்குவரத்து தடைப்பட்டிருந்ததோடு, அதிலிருந்த மா மூடைகள் அகற்றப்பட்டு அது, பாதையிலிருந்து அகற்றப்பட்டதைத் தொடர்ந்து போக்குவரத்து மீள ஆரம்பிக்கப்பட்டது. ஆயினும் தேக்கமுற்ற வாகனங்கள் காரணமாக ஏற்பட்ட போக்குவரத்து நெரிசல் தொடர்ந்தும் பல நேரத்திற்கு நீடித்தமை குறிப்பிடத்தக்கது. குறித்த விபத்தில் காயமுற்ற மூவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக வத்துபிட்டிவல வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவிததுள்ளார் என்பதோடு, குறித்த விபத்திற்கான காரணம் தொடர்பில் நிட்டம்புவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-3)

# எக்னெலிகொட காணாமற்போவதற்கு முன் கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்

## சி.ஐ.டிக்கு புதிய தகவல்



ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமற் போனமை தொடர்பில் புதிய தகவல்கள் வெளியாகியுள் ளன. எக்னெலிகொட, கடத்தப் பட்டு கிரித்தலே முகாமுக்கு கொண்டு செல்லப்படுவதற்கு முன்னர் கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாக சி.ஐ. டியினர் கண்டறிந்துள்ளனர்.

கொழும்பின் புற நகர் பத் தரமுல்லையில் வைத்து கடந்த 2010 ஆம் ஆண்டு ஜனவரி 24 ஆம் திகதி கடத்தப்பட்ட அவர், கொழும் பின் இடம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இதன்பின்னரே அவர் மின்னேரியா கிரித்தலே முகா முக்கு கொண்டு செல்லப்பட் டுள்ளார் என சி.ஐ.டியினர் தெரிவித்தனர். (இ-3)

# குற்றவியல் நீதிமன்றம் குறித்த ரோம் பிரகடனத்தில் இலங்கை உடன் கையெழுத்திட வேண்டும்

## ஐ.நா.சிறப்பு அறிக்கையாளர் வலியுறுத்து

(கொழும்பு)

**பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனடியாக இல்லா தொழிக்குமாறும் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம் தொடர்பான ரோம் பிரகடனத்தில் உடன் கையெழுத்திட வேண்டும் என்றும் இலங்கை அரசாங்கத்திடம் ஐநாவின் சிறப்பு அறிக்கையாளர் ஜுவான் மென்டஸ் வலியுறுத்தியுள்ளார்.**



சித்திரவதைகள் மற்றும் ஏனைய கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லத் இழிவு படுத்தும் நடவடிக்கைகள், தண்டனைகள் தொடர்பான ஐ.நா. சிறப்பு அறிக்கையாளரான ஜுவான் மென்டஸ் இலங்கைக்கு மேற்கொண்ட பயணம் தொடர்பான அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

2016 ஏப்ரல் 29ஆம் திகதி தொடக்கம் மே 7ஆம் திகதி வரை இலங்கையில் மேற்கொண்ட பயணத்தின் போது கண்டறியப்பட்ட விடயங்களை உள்ளடக்கியதாக இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை வரும், மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 34 ஆவது அமர்வில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த அறிக்கையில் பயங்கரவாத தடைச்சட்டத்தை இலங்கை உடனடியாக இல்லாமல் ஒழிக்க வேண்டும்.

பயங்கரவாத தடைச்சட்டத்துக்குப் பதிலாக வரையப்படும் புதிய சட்டத்தில், சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்ட பின்னர் சட்டவாளரை சந்திக்க அனுமதிக்க முன்னர் வாக்குமூலம் பெற வழி வகுக்கும் முன்மொழிவும் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும்.

சித்திரவதை குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை செய்து வழக்குத் தொடுப்பதற்கான பணியகம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

குற்றமிழைத்தவர்கள் தப்பித்துக் கொள்ளும் கடந்த கால கலாசாரத்தில் இருந்து விடுபட்டு, இந்தப் பணியகம் சுதந்திரமாகச் செயற்படுவதை சட்டமா அதிபர் பணியகம் உறுதிப்படுத்த வேண்டும்.

தேசிய பாதுகாப்புப் படைகளில் அங்கம் வகிப்பவர்களை விலக்கி, சாட்சிகளுக்கு பாதுகாப்பு அளிக்கும் திட்டம் காத்திரமான வகையில் நடைமுறைப்படுத்த வேண்டும்.

அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தை அங்கீகரிக்கும் ரோம் பிரகடனத்தில் இலங்கை கையெழுத்திட வேண்டும்.

இலங்கையில் சித்திரவதைகள் மற்றும் ஏனைய கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவு படுத்தும் நடவடிக்கைகள், தண்டனைகள் என்பன ஆயுத மோதல்களின் ஒரு மரபுரிமையாகவே இருந்து வந்திருக்கிறது.

அரசு அதிகாரத்துக்கு எதிராக குறிப்பாக, அதன் பாதுகாப்புப் படைகளுக்கு எதிராக குறைந்தபட்ச பாதுகாப்பு உத்தரவாதமற்ற நிலையிலேயே இலங்கை மக்கள் தொடர்ந்து வாழ்ந்து வருகின்றனர்.

தற்போதைய சட்ட வரைமுறை மற்றும் ஆயுதப்படைகள், பொலிஸ்துறை, சட்டமா அதிபர் பணியகம் மற்றும் நீதித்துறை கட்டமைப்புகளில் போதிய மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்படாமையால், சித்திரவதைகள் நீடித்து நிலைத்திருக்கும் ஆபத்து உள்ளது.

சித்திரவதைகளை இல்லாமல் செய்வதற்கும் எல்லா அதிகாரிகளும் அனைத்துலக நியமங்களுக்கு இணங்கிச் செயற்படுவதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் இந்த நிறுவகங்களில் கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புகளை இலங்கை அவசரமாகவும் விரிவான அடிப்படையிலும் மேற்கொள்ள வேண்டும் என்றும் ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர்ஜுவான மென்டஸ் தனது அறிக்கையில் மேலும் வலியுறுத்தியுள்ளார். (இ-3)

# இலங்கை- அமெரிக்க கடற்படைகளுக்கு இடையிலான கூட்டு வலுப்பெற்றுள்ளது

## அமெரிக்கத் தூதுவர் அதுல் தெரிவிப்பு



அமெரிக்கக் கடற்படையின் ஏவுகணை நாசகாரி போர்க்கப்பலான யுஎஸ்எஸ் ஹொப்பரின் கொழும்பு பயணத்தின் மூலம், இலங்கை - அமெரிக்க கடற்படைகளுக்கு இடையிலான கூட்டு மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் தெரிவித்துள்ளார்.

இலங்கை - அமெரிக்க கடற்படைகளுக்கு இடையிலான வலுவான மற்றும் பரஸ்பரம் நன்மையளிக்கும், யுஎஸ்எஸ் ஹொப்பரின் கொழும்பு பயணத்தின் மூலம் மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளது.

கடல்சார் பாதுகாப்பை உறுதிப் படுத்துவதற்கு இலங்கை கடற்படை பங்காளராக இணைந்து கொண்டுள்ளதை அமெரிக்கா மதிக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

யுஎஸ்எஸ் ஹொப்பர் நாசகாரி கொழும்பு துறைமுகத்தில் தரித்து நின்று இலங்கை கடற்படையினருடன்இணைந்து மேற்கொண்டுள்ள பயிற்சிகள் தொடர்பாக டுவிட்டரில் இட்டுள்ள பதிவுகளிலேயே அமெரிக்கத் தூதுவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார். (இ-3)

# ஒரே ஆண்டில் 2 இலட்சம் வாக்காளர்கள் அதிகரிப்பு

இலங்கையில் வாக்காளர்களின் எண்ணிக்கை 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து, 2016இல் 2 இலட்சத்தால் அதிகரித்துள்ளதென தேர்தல்கள் ஆணைக்குழுவின் மேலதிக ஆணையாளர்எம்.எம்.மொஹமட் தெரிவித்தார்.

2016ஆம் ஆண்டில் வாக்காளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்த மாவட்டமாக கம்பஹா மாவட்டம் விளங்குவதாகவும் அங்கு 24 ஆயிரம் வாக்காளர்கள் புதிதாக பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் திருகோணமலை மாவட்டத்திலேயே வாக்காளர்களின் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுகின்றதெனவும் அங்கு மூவாயிரம் வாக்காளர்களே கடந்த வருடத்தில் புதிய வாக்காளர்களாகப் பதிவாகியுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இவ் வாறானதொரு நிலையில் எதிர்வரும் காலங்களில் நடத்தப்படவுள்ள தேர்தல்களின் போது கடந்த வருட வாக்காளர் பட்டியலையே பயன்படுத்தவுள்ளதாக மேலதிக ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## இன்று ஒரு தகவல்

### இல்லத் தவிப்புகள்

தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் தரையில் ஓடிய போது சென்ட்ரல் ரயில் நிலையத்தில் நடந்ததை யாரேனும் பார்த்திருந்தால் அடேயப்பா! இந்த உலகம் எவ்வளவு பாசமானது ! என்று வியந்திருப்பார்கள்.

தங்களது உறவினர்களுக்கு, நண்பர்களுக்கு என்ன ஆயிற்றோ என்ற தவிப்பில் நிலை கொள்ளாமல் தவித்த மக்கள் பரிதாபமாக காட்சி அளித்தார்கள். ரயில் அதிகாரிகளைக் குடையோ குடை என்று குடைந்தார்கள்.

இந்தத் தவிப்பை சற்றும் புரிந்து கொள்ளாமல் வேறு ரயில் பிடித்துச் சாவகாசமாய் வந்து இறங்கியவர்கள் உண்டு. வேறு என்ன செய்யச் சொல்கிறீர்கள் என்கிறீர்களா?

உடனடியாகப் பக்கத்தில் உள்ள ஒரு தந்தி அலுவலகத்திற்கு போய் I am safe என்று தந்தி கொடுத்திருக்க வேண்டும். முடியுமா னால் அந்தத் தந்தியையே சற்று விபரமாகத் தரலாம்.

போன் கிடைத்தால் எப்படியாவது பேசிவிட வேண்டும்.

இதைவிடுங்கள்!

மதியம் சாப்பிடவருகிறேன் என்பார்கள். 3 மணி ஆகியிருக்கும் தகவலே இராது. தாயோ தாரமோ அல்லது வேறு ஜீவன்களோ , என்ன ஏது என்று பதறுமே என்ற தவிப்பே இல்லாமல் , நான் போன இடத்திலேயே சாப்பிட்டேன் என்று சிரித்தபடி 3.30 மணிக்கு நுழைவார்கள்.

26 ஆம் திகதி காலையில் வந்து இறங்குகிறேன் என்பார்கள். வரமாட்டார்கள், வேண்டுமென்று அல்ல, எதிர்பாராத வேலைகள் அல்லது ரிக்கெட் கிடைக்கவில்லை என்று கூட வைத்துக் கொள்வோம்.அதை உடையவர்களுக்குத் தெரிவிக்க வேண்டாமா?

நாம் நல்லாத் தானே இருக்கிறோம் என்றும் நாளையே போய்விடப் போகிறோம் என்றும் சிலர் தங்களுக்குத் தாங்களே சொல்லிக் கொண்டு சமாதானம் அடைகிறார்கள். வீட்டில் இருப்பவர்களுக்குக் கண்ட படி கற்பனை போகும் என்பது இவர் களுக்குத் தெரிய மாட்டேன் என்கின்றது.

போகிற இடத்தில் வேலை எப்படியோ ! சற்று முன் பின் வருவேன் என்று சொல்லிவிட்டுச் சென்றால் என்னவாம்?

சிலர் வடக்கே போவார்கள், வெளிநாடு போவார்கள்.ஒருவாரம் ஒரு மாதம் கழித்து ஜிங்கென்று வந்து இறங்குவார்கள். வீட்டு நிலவரங்கள் என்ன, அலுவலக நிலவரங்கள் என்ன என்ற தவிப்பு இவர்களுக்கு இல்லாமல் போகலாம். மற்றவர்களும் இப்படி இருப்பார்கள் என்று இவர்கள் எண்ணலாமா?

**லேனா தமிழ்வாணன்**

# மைசூர் முதல் '81 போயஸ் கார்டன்' வரை...

# ஜெயலலிதா டயரி குறிப்புக்கள்






## 'மீண்டும் ஜெயலலிதாவாக திரும்பி வருதல்'

தருமபுரி வாச்சாத்தி மலைப்பகுதியில் வாழும் பழங்குடிகள் சொல்வார்கள், "நீங்கள் மட்டும்தான். ஆம், நீங்கள் மட்டும்தான், உங்களுக்கு சரியான கூட்டணி. உங்களுக்கு நீங்கள் மிக உண்மையாக இருங்கள். உங்களை அதிகமர்க நம்புங்கள்" என்பார்கள். ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது தான், 1992ஆம் ஆண்டு வாச்சாத்தி பழங்குடியின மக்கள் மீது வனத்துறையினர், பொலிஸார் இணைந்து வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டனர். ஒருவேளை அந்த பொலிஸ அதிகாரிகள், ஜெயலலிதாவிடம் சொன்னார்களா என்று தெரியவில்லை.... ஜெயலலிதா எப்போதும் தாம் அமைத்த கூட்டணியை, அதன தலைவர்களை நம்பியதைவிட தன்னை நம்பினார். ஆம், தன்னை மட்டுமே நம்பினார். தன்னை நம்பியதுடன் நின்றிருந்தால் பரவாயில்லை. கூட்டணித் தலைவர்களை அவமதித்தார். ஜெயலலிதாவின் இந்த போக்கால், கோபத்தில் இருந்த கூட்டணித் தலைவர்கள், அவரை வீழ்த்துவதற்காக சந்தர்ப்பத்தை தேடிக் கொண்டிருந்தார்கள். அப்படியான சந்தர்ப்பம் மிகவிரைவில் அமைந்தது.



**"ஓ.பன்னீர் செல்வம் ஆகிய நான்..."**

அவர் பயந்தது போன்றே ஒரு தீர்ப்பை செப்டெம்பர் 21, 2001 இல் உச்ச நீதிமன்றம் வழுங்கியது. இதுதான் அந்த தீர்ப்பு. "மே 14, 2001 தமிழக முதல்வராக ஜெயலலிதா பொறுப்பேற்றது இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு எதிரானது. அவர் பொறுப்பேற்றது செல்லாது" என்றது. ஜெயலலிதா உடனடியாக அமைச்சர்கள் மற்றும் மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தை போயஸ் கார்டனில் கூட்டினார். விவாதித்தார்.... இல்லை, இல்லை... அவர் மட்டுமே பேசினார். பின் அங்கிருந்து புறப்பட்டு, தன் வாகனத்தில் ஆளுநர் மாளிகை சென்றார். இப்போது அவர் வாகனத்தில் தேசியக்கொடி இல்லை. அ.தி.மு.க. கொடி மட்டுமே இருந்தது. வாகனத்தை பார்த்தவர்களுக்கு புரிந்து விட்டது. ஆளுநரிடம் சூழ்நிலையை விளக்கினார். அதன்பின், மாலையில் ஆளுநரை அமைச்சர்கள் சந்தித்தார்கள். எம்.ஜி.ஆர். ரசிகனாக பெரியகுளம் பகுதியில் சிறு தேநீர் கடை நடத்தி, பின் அ.தி.மு.கவில் இணைந்து, ஜெயலலிதாவின் நம்பிக்கைக்குரிய மனிதராக மாறி, அமைச்சராக உயர்ந்த ஓ. பன்னீர்செல்வம், இப்போது முதல்வராக உயர்த்தப்பட்டார். விவிலியத்தில் ஒரு வசனம் வரும்... "தன்னை தாழ்த்திக் கொள்பவனே உயர்த்தப்படுவான்" என்று. இது பன்னீர்செல்வத்துக்கு மிகச்சரியாக பொருந்தியது. முதல்வராக உயர்த்தப்பட்ட போதும் அமைதி காத்தார். முதல்வர் நாற்காலியிலும் அசௌகரியமாக அமர்ந்தார். அவருக்கு நன்கு தெரியும்... இதுஎல்லாம் சில காலம்தான் என்று.

"போயஸ் தோட்டத்தில் தான் தலைமைச் செயலகம் செயற்படுகிறது... ஜெயலலிதாவின் அனுமதி பெற்ற பின்பே, அனைத்து கோப்புகளிலும் பன்னீர்செல்வம் கையெழுத்திடுகிறார்..." என்று முணுமுணுக்கப்பட்டது. ஊடகங்கள் எழுதின... இதுகுறித்து பன்னீர்செல்வம் சிறிதும் கவலைப்படவில்லை. அப்போது அவர் கவலையெல்லாம் வேறொன்றின் மீது இருந்தது. ஆம், டான்சி வழக்கு உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. அவர் கவலையெல்லாம்... ஜெயலலிதாவுக்கு சாதகமாக தீர்ப்பு வர வேண்டும் என்பது மட்டும்தான். ஜெயலலிதாவே இந்த அளவுக்கு தீர்ப்பு குறித்து கவலைப்பட்டிருப்பாரா..? என்று தெரியாது. ஆனால், அப்போது தமிழக முதல்வராக இருந்த பன்னீர்செல்வம் கவலைப்பட்டார். எல்லா சாமியையும் வேண்டினார். அவர் வேண்டுதல் வீண் போகவில்லை. ஜெயலலிதாவுக்கு சாதகமாக தீர்ப்பு வந்தது. டான்சி வழக்கிலிருந்து ஜெயலலிதாவும் விடுதலையானார். முதல்வர் பதவியிலிருந்து பன்னீர்செல்வமும் விடுதலையானார்.

**"ஜெயாவாக திரும்பி வருதல்"**

மீண்டும் ஜெயலலிதா முதல்வராக பொறுப்பேற்றார். பழைய பன்னீர்செல்வமாக முன்னாள் முதல்வர் பன்னீரசெல்வம் அமைச்சர் பொறுபேற்க... பழைய ஜெயலலிதாவாகவே திரும்பி வந்தார். ஆம், தீர்ப்பு, சில காலம் முதல்வராக இல்லாதது... இது எதுவும் அவர் ஆளுமையை சிதைக்கவில்லை. அப்படியே திரும்பி வந்தார். மீண்டும் அனைத்து தரப்பு மக்களின் பகையைச் சம்பாதித்துக் கொண்டார். ராணி மேரி கல்லூரியின், ஒருபகுதியை இடித்துவிட்டு புதிய சட்டப்பேரவை கட்டுவேன் என்றது... கோயில்களில் ஆடு கோழி பலியிடத் தடை... கட்டாய மதமாற்ற தடைச் சட்டம், எஸ்மா சட்டத்தின் மூலம் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை டிஸ்மிஸ் செய்தது... பொடா சட்டத்தில் வைகோவை கைது செய்தது என அனைத்து தரப்பு மக்களும், கட்சிகளும் ஓரணியில திரள, இவரே காரணமானார்... ஊடகங்களையும் விட்டு வைக்கவில்லை... எதிரத்து எழுதிய அத்தனை பேர் மீதும அவதூறு வழக்கு போட்டார்.

அனைத்து கட்சிகளும் கரம் கோர்த்தன. தங்களது சந்தர்ப்பத்துக்காக காத்திருந்தது. எதனையும் பொருட்படுத்தாமல் முன்னோக்கி சென்று கொண்டிருந்த ஜெயலலிதாவுக்கு, ஒரு பின்னடைவு காத்திருந்தது. தி.மு.க. பொதுச் செயலாளர் அன்பழகன் தொடர்ந்த வழக்கில், உச்ச நீதிமன்றம், சொத்துக் குவிப்பு வழக்கை தமிழ்நாட்டை விட்டு வெளியே கர்நாடகத்தில் நடத்த உத்தரவிட்டது. தமிழ் நாட்டில் நடந்தால் வழக்கு விசாரணை நியாயமாக நடக்காது... சாட்சிகள் அச்சுறுத்தப்படுவார்கள் என்று தான் இவ்வழக்கை தொடர்ந்திருந்தார் அன்பழகன். இப்படியாக தீர்ப்பு வரும் என்று ஜெயலலிதா எதிர்பார்கககவில்லை.... மீண்டும் ஜெயலலிதா எதிர்பார்க்காதது அல்லது அவருக்கு நடக்கக்கூடாது என்று எல்லாம் நடக்கத் தொடங்கியது.



கருணாநிதி ஒரு மெகா கூட்டணியை அமைத்தார்... காங்கிரஸ், பா.ம.க, ம.தி.மு.க, சி.பி.ஐ, சி.பி.எம் என வலுவான கூட்டணி அது. அதற்கு சில நாட்களுக்கு முன் பத்தொன்பது மாதங்கள் சிறையில் இருந்து விட்டு வெளியே வந்த வைகோவும் தமிழகமெங்கும் நடைப்பயணம் சென்று ஜெயலலிதாவுக்கு எதிராக பிரசாரம் செய்தார்.

கூட்டணி பலம், தேர்தல் பிரசாரம்... இதையெல்லாம் தாண்டி மக்களிடம் சம்பாதித்த அதிருப்தி என எல்லாம் ஜெயலலிதாவுக்கு எதிராக திரும்பியது. அ.தி.மு.க. கூட்டணி 2004ஆம்ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் 40இற்கு 40 தொகுதிகளையும் இழந்து படுதோல்வி அடைந்தது. இது என்றுமே ஜெயலலிதா நினைவுகூர விரும்பாத தோல்வி... ஒரு நேர்காணலில் இதை நினைவுபடுத்தியதற்காகத் தான் ஊடகவியலாளர் கரண் தபாரிடம் கோபப்பட்டார் ஜெயலலிதா. "இது ஒன்றும் மகிழ்ச்சி தரக்கூடிய பேட்டியாக எனக்கு அமையவில்லை." என்றார்.



(தொடரும்)

## 11/2 வருடங்கள் கடந்தும் அரசாங்கம்

# காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் ஒன்றை திறக்கவில்லை

### சிவசக்தி ஆனந்தன் எம்.பி. தெரிவிப்பு



(குருமன்காடு)

வடக்கு, கிழக்கு, தெற்கு என ஜனாதிபதி ஆணைக்குழுவில் 24 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் காணாமல் போகச் செய்யப்பட்டதாக பதிவுகள் செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில் ஒன்றரை வருடங்கள் கடந்தும் காணாமல் போனோர் தொடர்பான ஒரு அலுவலகத்தை திறக்க முடியாத நிலையில் அரசாங்கம் உள்ளது. 7வருட போராட்டங்கள் மூலம் எதுவுமே நிறைவேறாத நிலையில் இந்த சாகும் வரையிலான போராட் டத்தை முன்னெடுத்துள்ளார்கள் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார். காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளினால் சாகும வரையிலான உணவு தவிர்ப்புப் போராட்டம் நேற்று முதல் வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிகையில்,

காணாமல் போனோரின் உறவுகள் காலவரையறையற்ற உணவு தவிர்ப்பு போராட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்கள். இவர்களுக்கு ஆதரவாக வடக்கு, கிழக்கு பகுதிகளில் உள்ள காணாமல் போனவர்களின் உறவுகளும் இந்த போராட்டத்தை முன்னெடுத்துள்ளார்கள். காணாமல் போனவர்களின் உறவுகள் கடந்த 7 வருடங்களாக தமது பிள்ளைகள், உறவுகளை மீட்டுத்தரும்படி வடக்கு, கிழக்கு, தெற்கு என பல போராட்டங்களை நடத்தியிருந்தார்கள். இதற்கு அப்பால் பல் வேறு பட்ட இடங்களில் தமது பிளளைகளை கண்டு பிடித்து தருமாறு பதிவுகளை செய்துள்ளார்கள். ஜனாதிபதி ஆணைக்குழு, பொலிஸ், இராணுவம், மனித உரிமை ஆணைக்குழு, செஞ்சிலுவைச் சங்கம் என ஒவ்வொருவரும் கிட்டத்தட்ட 10இற்கும் மேற்பட்ட இடங்களில் பதிவுகளை மேற்கொண்டுள்ளார்கள்.

வடக்கு, கிழக்கு, தெற்கு என ஜனாதிபதி ஆணைக்குழுவல் 24 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் காணாமல் போகச செய்யப்பட்டதாக பதிவுகள் செய்யப்பட்டுள்ளன. அதிலும் தமிழ் பேசும் மக்கள் என்று பார்த்தால் 19 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் காணாமல் போகச் செய்யப்பட்டுள்ளார்கள். கடந்த ஆட்சிக் காலத்தில் காணாமல் போகச் செய்யப்பட்டவர்கள் தொடர்பில் ஓமந்தை முகாமிலும், செட்டிகுளம் முகாமிலும் பதிவுகள் இருந்தன.

2015 ஆம் ஆண்டுக்கு பின்னர் புதிய அரசாங்கம் வந்துள்ளது. புதிய பிரதமர், புதிய பாதுகாப்பு செயலாளர் வந்து இரண்டு வருடங்கள் ஆகிவிட்டது. இதில் கூட இநத காணாமல் போகச் செய்யப்பட்டவர்கள் இருக்கின்றார்களா, இல்லையா என ஒழுங்கு முறையில் கூற முடியாது இருக்கின்றது. 2015 ஆம் ஆண்டு ஐ.நா.மனித உரிமை பேரவையில் இலங்கை அரசாங்கமும், ஐ.நாவும் இணைந்து ஒரு தீர்மாணம் நிறைவேற்றியிருந்தது. குறிப்பாக போர்க்காலத்தில் காணாமல் போனவர்கள் தொடர்பில் முறையான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும், பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்க வேண்டும், மக்களின் காணிகள் ஒப்படைக்க வேண்டும், இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு கொண்டு வரப்பட வேண்டும் என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இது எதனையுமே இந்த அரசாங்கம் நடைமுறைப்படுத்தவில்லை.

ஒன்றரை வருடங்கள் கடந்தும் காணாமல் போனோர் தொடர்பான ஒரு அலுவலகத்தை திறக்க முடியாத நிலையில் அரசாங்கம் உள்ளது. காணாமல் போனோர் தொடர்பில் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கையைக் கூட ஜனாதிபதியோ, பிரதமரோ, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவே முழுமையாக நடைமுறைப்படுத்த மாட்டோம் எனக் கூறுகின்ற நிலைமை தான் இருக்கிறது. இந்த நிலையில் இந்த மக்கள் ஒரு விரக்தியின் விளிம்பில் தள்ளப்பட்டுள்ளார்கள். 7 வருட போராட்டங்கள் மூலம் எதுவுமே நிறைவேறாத நிலையில் தான் இந்த சாகும் வரையிலான போராட்டத்தை முனனெடுத்துள்ளார்கள்.

ஆட்சி மாற்றத்திற்காக இந்த நல்லாட்சி அரசாங்கத்திற்கும், கடந்த பாராளுமன்ற மற்றும் மாகாணசபைத் தேர்தல்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் வாக்களித்த இம் மக்களது நியாயமான இந்த போராட்டத்திற்கு பதில் வழங்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் இருக்கிறது. குறிப்பாக ஐ.நா மனித உரிமைகள் பேரவையும், இலங்கை அரசாங்கமும் இணைந்து எடுத்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் படி வலியுறுத்த வேண்டிய பாரிய பொறுப்பு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கும் இருக்கிறது. ஆகவே இந்தப் பொறுப்புக்களில் இருந்து நாங்கள் விலக முடியாது. இந்த நல்லாட்சி அரசாங்கத்தையும், தமிழ் தேசியக் கூட்டமைப்பையும் நம்பி வாக்களித்த இம் மக்களுக்கு இந்த அரசாங்கம் வந்து இரண்டு வருடம் கழிந்தும் அவர்கள் இருக்கின்றார்களா, இல்லையா என அரசாங்கத்துடன்பேசிஒரு தீர்வை எடுத்துக் கொடுக்க முடியாத நிலையில் தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இருக்கிறது.

ஆகவே, ஒரு பார தூரமான நிலைமைக்கு இந்த மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு ஏதாவது நெருக்கடிகள், உயிராபத்துக்கள் ஏற்படுமாக இருந்தால் அதற்கான பொறுப்புக்களை அனைவரும் ஏற்க வேண்டியுள்ளது. குறிப்பாக ஜனாதிபதி, பிரதமர், கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் உள்ளிட்ட நாங்கள் அனை வரும பொறுப்பு சொல்ல வேண்டியுள்ளது. இந்த அரசாங்கம் காணாமல் போனவர்கள் இருக்கின்றார்களா, இல்லையா எனக் கூற வேண்டும். மகிந்த காலத்தில் காணாமல் போனவர்கள் இல்லை என்றால் அவர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும. இதற்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்க வேண்டும். நாம் அது தொடர்பில் தொடர்ந்தும் பேசுவோம்என்றார். (2-250)

## (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 967

### தனுசா




### பிரசாந்தி




### சிந்துஜா




### சர்மிளா




### தர்சிகா




### ஹனுசிகா

எல்லாம் தெரியும் என்று நினைப்பவரை விட தெரியாது என்று நினைப்பவரே அதிக விடயங்களை தெரிந்து வைத்துள்ளனர்.

தெரியும் என்பவரின் தேடல் முடிவடைகிறது.

தெரியாது என்பவரின் தேடல் தொடர்ந்து செல்கின்றது...


நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஜல்லிக்கட்டு போராட்டம்

# கலவரமாக மாறியது

## பொலிஸ் நிலையத்துக்கு தீ வைப்பு







(சென்னை)

**சென்னையில் நடந்து வந்த ஜல்லிக்கட்டுக்கு ஆதரவான போராட்டம் நேற்று கலவரமாக மாறியது. வன்முறையின் உச்சக்கட்டமாக ஐஸ்அவுஸ் பொலிஸ் நிலையம் தீ வைத்து எரிக்கப்பட்டது. இதனால் பல்வேறு பகுதிகளில் பரபரப்பும் பதற்றமும் ஏற்பட்டது.**

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கற்களை வீசி தாக்குதல் நடத்தியதால் பல பகுதிகள் போர்க்களமாக மாறியது.

வன்முறையின் உச்சக் கட்டமாக ஐஸ்அவுஸ் பொலிஸ் நிலையம் தீ வைத்து எரிக்கப்பட்டது. முற்பகல் 11.30 மணியளவில் ஐஸ்அவுஸ் பொலிஸ் நிலையம் முன்பு சுமார் 500 பேர் திடீரென திரண்டனர்.

அவர்களை பொலிஸார் கலைந்து செல்லுமாறு அறிவித்தனர். ஆனால் அங்கு திடீரென மேலும் பலர். திரண்டனர்.

அப்போது ஐஸ்அவுஸ் பகுதியில் பொலிஸார் எண்ணிக்கை குறைவாக இருந்தது. உதவிக் கமிஷனர் ஒருவர் தலைமையில் 20 பொலிஸார்தான் அங்கு இருந்தனர். இதனால் போராட்டக்காரர்களை சமாளிக்க இயலவில்லை.

இதை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்ட போராட்டக்காரர்கள் வன்முறையில் ஈடுபட்டனர். தாங்கள் தயாராக கொண்டு வந்திருந்த பெற்றோல் குண்டுகளை பொலிஸ் நிலையம் மீது குறி வைத்து வீசினர்.

இதனால் பொலிஸ் நிலையம்உள்ளே இருந்த பொலிஸார் அங்கிருந்து வெளியேறி ஓடினார்கள். அப்போது ஒருமர்ம கும்பல் ஐஸ்அவுஸ் பொலிஸ் நிலையத்தை திடீரென வெளிப்பக்கமாக இழுத்துப்பூட்டி தாங்கள் வசம் வைத்திருந்த பெற்றோல் குண்டுகளை பொலிஸ் நிலையத்துக்குள் வீசி எறிந்தனர். பெற்றோல் குண்டுகள் வெடித்து சிதறியதால் பொலிஸ் நிலையம் தீப்பிடித்து எரிந்தது.

இதுபற்றி தகவல் அறிந்ததும் உடனடியாக அங்கு தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்தனர். கடற்கரை சாலையில் பாதுகாப்புப் பணியில் இருந்த பொலிஸாரில் 200 இற்கும் மேற்பட்டவர்கள் பெசன்ட் ரோட் வழியாக ஓடி வந்தனர்.

அந்த வீதியின் கடைசி சந்திப்பில் தான் ஐஸ்அவுஸ் பொலிஸ் நிலையம் உள்ளது. பொலிஸார் அதிக அளவில் வந்ததும் வன்முறை கும்பல் கல்வீசியபடி தப்பிச் சென்றது.

அவர்களை பொலிஸார் விரட்டிச் சென்றனர். ஆனால் யாரும் சிக்கவில்லை. வன்முறை செய்த மர்மக் கும்பல் தப்பி ஓடி விட்டது.

வன்முறை கும்பல்வைத்த தீயால் பொலிஸ் நிலையம் எரிந்து நாசமானது . தீ வைப்பில் ஈடுபட்டவர்கள் பொலிஸ் நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த சுமார் 50 மோட்டார் சைக்கிள்களை கீழே தள்ளி பெரிய கற்களை தூக்கிப் போட்டனர். பிறகு மோட்டார்சைக்கிள்களுக்கு தீவைத்தனர். இதில் 50 மோட்டார் சைக்கிள்களும் எரிந்து நாசமானது.

அதுபோன்று பொலிஸ் நிலையத்துக்குள் இருந்த ஆவணங்களும் எரிந்து நாசமானது. இதற்கிடையே தீயணைப்பு வீரர்கள் எவ்வளவோ போராடியும் கூட ஐஸ் அவுஸ் பொலிஸ் நிலையம் முழுமையாக எரிந்து நாசமானது.

தீக்கிரையாக்கப்பட்ட பொலிஸ் நிலையத்தை அந்தப் பகுதி மக்கள் திரண்டு வந்து வேடிக்கை பார்த்தனர். இதனால் கூட்டம் கூடியது. ஆயிரக்கணக்கானோர் திரண்டனர்.

அவர்களை பொலிஸார் எச்சரித்து அப்புறப்படுத்தினர். பொலிஸார் தவிர வேறு யாரும் அங்கு நிற்கக்கூடாது என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இதற்கிடையே பொலிஸ் நிலையம் அருகே உள்ள சாலையில் திடீரென சிலர் கும்பலாக வந்தனர். அவர்களை பொலிஸார் ஓடிச் சென்று விரட்டியடித்தனர்.

இந்தச் சம்பவம் காரணமாக ஐஸ்அவுஸ் மட்டுமன்றி திருவல்லிக்கேணி. மெரீனா கடற்கரைப் பகுதிகளில் பதற்றம் காணப்பட்டது. பொலிஸ் நிலையம் இருக்கும் சாலையில் உள்ள என்.கே.டி. பாடசாலைக்கு உடனடியாக விடுமுறை வழங்கப்பட்டது.

அனைத்து மாணவிகளும் அவசர அவசரமாக தங்கள் வீடுகளுக்கு புறப்பட்டுச் சென்றனர். மேலும் அசம்பாவிதம் ஏற்படாமல் இருக்க இந்தப் பகுதிகளில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். (இ)

## பொலிஸாரின் நடவடிக்கையில் தலையிட உச்சநீதிமன்று மறுப்பு

(சென்னை)

ஜல்லிக்கட்டு போட்டிகளை நடத்த நிரந்தரமான சட்டம் இயற்றப்பட வேண்டும் என சென்னை மெரினா கடற்கரையில் போராடி வரும் மாணவர்கள் மீது நேற்றுக் காலை பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையில் தலையிட முடியாது என சென்னை உயர் நீதிமன்று மறுத்துள்ளது.

சென்னை மெரினா கடற்கரையில் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவான போராட்டம் நேற்று பொலிஸ்-பொதுமக்கள் மோதலாக மாறியதால் தடியடி நடத்தியும், கண்ணீர் புகை குண்டுகளை வீசியும், வானத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியும் போராட்டக்காரர்களை பொலிஸார் கலைத்தனர்.



இதனால். மெரினா கடற்கரை மற்றும் சுற்றுப்புற பகுதிகள் கலவரக் காடாக மாறியுள்ளது.

இந்நிலையில், சென்னை மெரினா கடற்கரையில் போராடி வரும் மாணவர்கள் மீது நேற்றுக் காலை பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கை தொடர்பாக உயர் நீதிமன்று தலையிட வேண்டும் என சட்டத்தரணிகள் சுதா. ஜார்ஜ் வில்லியம்ஸ் ஆகியோர் சென்னை உயர் நீதிமன்று சிறப்பு மனு ஒன்றினை நேற்று தாக்குதல் செய்தனர்.

சென்னை உயர் நீதிமன்று தலைமை நீதிபதி எஸ்.கே.கவுல் மற்றும் நீதிபதி எம்.சுந்தர் ஆகியோர் கொண்ட அமர்வின் முன்னர் இந்த மனுவின் மீது நேற்று விசாரணை நடந்தது.

மாநில அரசின் நிர்வாகம் தொடர்பான விவகாரங்களில் தலையிட முடியாது என தெரிவித்த நீதிபதிகள் இந்த மனுவை தள்ளுபடி செய்வதாக அறிவித்தனர். (இ-3)

# வாகன வருமான வரி அனுமதிப்பத்திரத்தை இலத்திரனியல் மூலம் பெற்றுக்கொள்ளலாம்

## யாழில் நேற்று அங்குரார்ப்பண நிகழ்வு





வடமாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களம் மற்றும் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனமும் இணைந்து "இலத்திரனியல் வாகன வருமான வரி அனுமதிப்பத்திரம் வழங்கும் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்றைய தினம் யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

வடமாகாண போக்குவரத்து அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இலத்திரனியல் வாகன வருமான வரி அனுமதிப்பத்திரம் வழங்கும் செயல்முறை காட்சிப்படுத்தப்பட்டதுடன், வாகன வருமானவரி அனுமதிப்பத்திரத்தை கடனட்டை மூலம் பணம்செலுத்தி புதுப்பித்தல் தொடர்பான செயல்முறை விளக்கமும் அளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இலத்திரனியல் மூல வாகன அனுமதிப்பத்திரம் விருந்தினர்களால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டதுடன் முதல் முறையாக இலத்திரனியல்மூலம்பெறப்பட்ட வாகன வருமான வரி அனுமதிப்பத்திரம் வாகன உரிமையாளருக்கு கையளிக்கப்பட்டது.

www.gov.lk என்ற இணையத்தள முகவரியூடாக சென்று அதிலுள்ள செயன்முறையை பூர்த்தி செய்து தற்காலிக வாகன வருமான வரி அனுமதிப்பத்திரத்தை பெற்ற பின்னர் 14 நாட்களுக்குள் நிரந்தர அனுமதிப்பத்திரத்தை தபால்மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்நிகழ்வில்வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், முதலமைச்சர் அமைச்சின் செயலாளர், யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர், வடமாகாண சபை உறுப்பினர்கள், வட மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்கள உத்தியோகத்தர்கள், இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிலநுட்ப நிறுவனத்தின் அதிகாரிகள், வாகன உரிமையாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-9)

# காணாமற்போனவர்கள் தொடர்பாக கொழும்பில் நிகழ்வுகளுக்கு ஏற்பாடு

(கொழும்பு)·

பலவந்தமாகக் கடத்தப்பட்டு காணாமற்போகச் செய்யப்பட்டோரை கருப்பொருளாகக் கொண்டு "காணாமற்போகச் செய்த அன்புக்குரியவர்களின்பிரவேசம்"(Appearing The Disappeared) எனும்கண்காட்சி மற்றும் "மௌனிக்கப்பட்ட நிழல்கள்" (Silence Shadows) என்னும் கவிதை நூல் வெளியீட்டு விழா என்பன இன்று செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளன.

சர்வதேச மன்னிப்புச் சபையினால் (Amnesty International) ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக்கண்காட்சி காலை 9 மணி முதல் மாலை 6 மணிவரையில் கொழும்பில் உள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

"காணாமற்போகச் செய்த அன்புக்குரியவர்களின் பிரவேசம்" எனும் கண்காட்சியானது, பலவந்தமாகவும் விருப்பமின்றியும் பிரஜைகளைக் காணாமற்போகச் செய்வதானது மிகவும் பாரதூரமான மனித உரிமை மீறல் என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

காணாமற்போகச் செய்யப்படுவது என்பது பல தசாப்தங்களாக இலங்கையில் ஓர் அடையாளமாக மாறியுள்ளது.

அவ்வாறான காணாமற்போச் செய்யும் சம்பவம் ஒன்று இடம்பெறும் போது, அதன் மூலம்அவர்களுடைய குடும்பத்திற்கு ஏற்படக்கூடிய பாதிப்பு மிகவும் கொடூரமானது. தனது அன்புக்குரியவர்கள் தொடர்பாக உண்மையை அறிந்து கொள்வதற்கு பல குடும்பங்கள் இதுவரை செய்வதறியாது காத்திருக்கின்றார்கள்.

இலங்கையில்புரையோடிப் போயுள்ள இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கூடிய கரிசனை தேவையாகவுள்ளது. காணாமற்போகச் செய்த அன்புக்குரியவர்களின் பிரவேசம் என்ற கண்காட்சி இம்முக்கிய விடயம் தொடர்பான கலந்துரையாடலை மேலும் விரிவுபடுத்தும் ஓர் ஆக்கத்திறன் மிக்க நடவடிக்கையாக இது ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. (இ-3)

# ரணிலின் திட்டம் முறியடிக்கப்படும்

## வாசுதேவ தெரிவிப்பு

நாட்டில் பலம் பகிரப்படுவதை விட இதன் மூலம் ரணில் தலைமையிலான தனி நபரது பலத்தினை பெற்றுக்கொள்வதற்கு முனைப்புகள் காணப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

மேலும் இவ்வாறான ஒரு நிலை ஏற்படுமாயின் அதற்கு எதிராக செயற்பட உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜனாதிபதியை அவமதிக்கும் விடயமாகவே அதிர்ஷ்ட இலாபச்சீட்டு விடயத்தில் நிதியமைச்சரின் செயற்பாட்டை கருதுவதாகவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி அதிர்ஷ்ட இலாபச் சீட்டு விலையை குறைக்க ஆலோசனை கூறும்போது நிதியமைச்சர் 30 ரூபாவில் இருந்து20 ஆக குறைக்க முடியாது என தெரிவித்தார். எதிர்காலத்தில் மக்கள் நிலை என்ன நடக்கும் என சந்தேகம் ஏற்படுவதாகவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் கோப் அறிக்கை விவாதத்தினை திசை திருப்பும் வகையிலான ரணிலின் திட்டமே பாலித தேரரின் செய்துள்ள முறைப்பாடு என பகிரங்கமாக பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ சுட்டிக்காட்டியுள்ளார். (இ-3)

# பட்டமளிப்பு விழாவும் சைவ மாநாடும்





அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தின் 56 ஆவது பட்டமளிப்பு விழாவும், சைவ மகாநாடும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நல்லூரில் இடம்பெற்றது.

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் தலைவர் சைவப்புலவர் மு.திருஞான சம்பந்தப்பிள்ளை தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் வழிபாடு மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து விருந்தினர்கள் சகிதம் சைவப் புலவர்கள், இளம் சைவப் புலவர்கள் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன மண்டபம் நோக்கி அழைத்து வரப்பட்டனர்.

இதன்போது கடந்த 2016 ஆமஆண்டில்அகில இலங்கை ரீதியில் இடம்பெற்ற சைவப் புலவர் பரீட்சையில் சித்தி பெற்ற ஆறு பேரும், இளம் சைவப்புலவர் பரீட்சையில் சித்திபெற்ற 23 பேரும் பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்தப் பட்டமளிப்பு விழாவில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மட்டுமன்றி ஏனைய மாகாணங்களைச் சேர்ந்த பலரும் பட்டங்கள் பெற்றுக் கொண்டனர்.

அத்துடன் மூத்த சிவாச்சாரியார்களான இணுவிலூர் சிவஸ்ரீ சி. குமாரராஜக் குருக்கள், கோப்பாயைச் சேரந்த சிவஸ்ரீ சோ.இ. பிராணதர்த்திஹரக் குருக்கள் ஆகியோரும் புரவலர்களான சி.கந்தசாமி, க.சிவபாலன் ஆகியோரும் மூத்த சைவப் புலவர்களான அ.பரசுராமன (திருகோணமலை), ஆ.கனகரத்தினம் (சுழிபுரம்), சி.வேலாயுதம் ஆகியோரும் கடந்த வருடம் யாழ்.பல்கலைக் கழகத்தில் சைவசித்தாந்த முதுகலைமாணிப் பட்டம் பெற்றவர்களான சைவப்புலவர்களான திருமதி - கவிதா கதிரமலை(யாழ்ப்பாணம்), திருமதி-சண்முகவடிவுதில்லைமணி (யாழ்ப்பாணம் ), செல்லையாநவநீதகுமார்(கொழும்பு), திருமதி சரோஜினிதேவி சிவஞானம், திருமதி சிவானந்த சோதி ஞானசூரியம் (மட்டக்களப்பு) ஆகியோரும் கௌரவப்பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரீகத் துறைத் தலைவர் மா.வேதநாயகன், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரீகத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சுகந்தினி முரளிதரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தினரின் சைவநாதம்- 06 மலர் வெளியீட்டு வைபவம் விழாவின் இரண்டாவது அமர்வாக அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் உபதலைவர் சைவப்புலவர் மணி சு.செல்லத்துரை தலைமையில் நடைபெற்றது.

குறித்த மலரைப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.பல்கலைக் கழக இந்து நாகரீகத்துறைத் தலைவர் மா.வேதநாயகன் வெளியிட்டு வைக்க முதற்பிரதியைப் பிரபல தொழிலதிபர் கல்விக் காருண்யன் இ.பே.ச. நாகரத்தினம் பெற்றுக்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வழங்கி வைக்கப்பட்டன. மலர் வெளியீட்டுரையை மலராசிரியர் சைவப்புலவர் கந்த சத்திய தாசன் நிகழ்த்தியதுடன் நயப்புரையை யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரீகத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சுகந்தினி முரளிதரனும் ஆற்றினர். (இ-9)








யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் கால்கோள் விழா அண்மையில் பாடசாலையின் கேட்போர் கூடத்தில் பாடசாலை அதிபர் க. கெங்காதரக்கீர்த்தி தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்களாக யா/ மல்லாகம் விசாலாட்சி வித்தியாலய ஆசிரியர் ஞா.லூக்காஸ், சுன்னாகம் மக்கள் வங்கி முகாமையாளர் ப.பார்த்தீபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# சிறுவர் அரங்கம்


## நேச காகம் அண்ணா!

அந்த கல்யாண சத்திரத்தில் விதவிதமான உணவு பண்டங்கள் வைக்கப்பட்டிருந்தன. எந்த உணவை சுவைக்கலாம் என யோசித்த நேரத்தில், சமையல்காரன் வந்துவிடவே தப்பித்தோம், பிழைத்தோம் என மண்டபத்தை விட்டு வெளியே ஓடி வந்தது எலி.

அந்த நேரத்தில் தெருவோரமாக இருந்த மதில் மீது ஒரு காகம் அமர்ந்திருந்தது. அந்தக் காகம் எலியைக் கண்டுவிட்டது. எலியைக் கண்ட மகிழ்ச்சியில் அந்தக் காகமானது, எலியின் அருகே பறந்து வந்து அதனை விரட்டிப் பிடிக்க முயன்றது. தனது தடித்த அலகினால் எலியைக் கொத்தப்போனது.

காகம் தன்னைத்தாக்க வருவதைக் கண்ட எலி கீச்... கீச்... என்று அலறியபடி பரிதாபமாகக் காகத்தைப் பார்த்தது.

"காகம் அண்ணா! நீங்கள் செய்வது சரிதானா? மண்டபத்தில் உள்ளே வந்த மனிதருக்குப் பயந்து தெருவில் ஓடிவந்தேன். இங்கே தெருவில் நீங்கள் என்னைப் பிடித்துக் கொல்ல நினைக்கிறீர்களே... என் மீது கொஞ்சமாவது கருணை காட்டமாட்டீர்களா?" என்று அன்போடு கேட்டது.



அதனைக் கேட்ட காகம், "எலியே! எனக்கு மிகவும் பசியாக இருக்கிறது. என் பசிக்கு இப்போது உணவு தேவைப்படுகிறது. அதனால் உன்னை இரையாகக் கொள்ள வேண்டுமென்று நினைக்கிறேன். அதனால், அடம்பிடிக்காமல் எனக்கு இரையாகிவிடும்!" என்று கண்டிப்புடன் கூறியது.

"காகம் அண்ணா! உங்கள் பேச்சிலும் ஒரு வித நியாயம் இருப்பதாக உணர்கிறேன். ஆனால், உங்கள் குஞ்சுக்கு இதைப்போல் ஓர் ஆபத்து நேர்ந்து அது வேறு ஏதாவது பறவையிடமோ, விலங்குகளிடமோ சிக்கிக் கொண்டால் அது என்ன பாடு படும். உங்கள் குஞ்சு போன்று என்னை நினைத்து எனக்கு உயிர் பிச்சை கொடுங்களேன்!" என்று பரிவோடு கெஞ்சியது எலி.

எலியின் சாமர்த்தியமான பேச்சினால் காகத்தின் மனது இளகிவிட்டது. சிறிது நேரம் யோசனை செய்த காகம் எலியைப் பார்த்து, "எலியே! உன்னைப் பார்த்த போது எப்படியாவது உன்னை சாப்பிட்டு விட வேண்டும் என்ற எண்ணம்தான் தோன்றியது. "உன் அன்பான வார்த்தைகளைக் கேட்கிற போது அந்த எண்ணம் என் மனதைவிட்டு அகன்றுவிட்டது. நீ உன் சாதுர்யமான பேச்சினால் என் மனதினுள் இருக்கிற பாச உணர்ச்சியினைத் தட்டி எழுப்பிவிட்டாய். இனி மேல் நீ பயமில்லாமல் செல்லலாம்!" என்று கூறியபடி வேறு இரையைத் தேடிப் பறந்து சென்றது.

எலியும் உயிர்பிழைத்த மகிழ்ச்சியில் தன் இருப்பிடத்தை நோக்கி வேகமாக ஓடியது. அன்பான பேச்சினால் எதிரியின் மனதைக் கூட மாற்றிவிடலாம் என்பதை அந்த எலி மிக நன்றாகவே அன்று புரிந்து கொண்டது.

அன்புக்கு இத்தனை பெரிய சக்தியிருப்பதையும், அது தனக்கு ஏற்பட்ட அனுபவத்தின் மூலமாக அறிந்து கொண்டது. தானும் பிறரிடம் அன்போடு இருக்க வேண்டும் என்று அன்று முதல் அது உறுதி பூண்டது.

## 01.2017 24 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 41 - கலிகுலா படுகொலை செய்யப்பட்டான். அவனது மாமன் குளோடியஸ் முடி சூடினான்.
- 1679 - இங்கிலாந்தின் இரண்டாம் சார்ல்ஸ் நாடாளுமன்றத்தைக் கலைத்தான்.
- 1857 - தெற்காசியாவின் முதலாவது முழுமையான பல்கலைக்கழகம் கல்கத்தா பல்கலைக்கழகம் திறக்கப்பட்டது.
- 1887 - அபிசீனியப் படைகள் டொகாலி என்ற இடத்தில் இத்தாலியர்களைத் தோற்கடித்தனர்.
- 1897 - சுவாமி விவேகானந்தர் சிக்காகோவிலிருந்து நாடு திரும்பும் வழியில் யாழ்ப்பாணம் வருகை தந்தார். யாழ் இந்துக் கல்லூரியில் பிரமாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது.
- 1908 - பேடன் பவல் சாரணிய இயக்கத்தை ஆரம்பித்தார்.
- 1918 - கிரெகோரியின் நாட்காட்டி ரஷ்யாவில் பெப்ரவரி 14 முதல் அறிமுகப்படுத்தப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டது.
- 1924 - ரஷ்யாவின் பெட்ரோகிராட் நகரம் லெனின் கிராட் எனப் பெயர் மாற்றப்பட்டது.
- 1927 - ஆல்பிரட் ஹிட்ச்கொக் தனது த பிளெஷர் கார்டன் என்ற தனது முதலாவது திரைப் படத்தை வெளியிட்டார்.
- 1939 - சிலியில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 30000 பேர் கொல்லப்பட்டனர்
- 1943 - இரண்டாம் உலகப் போர்: பிராங்க்ளின் ரூஸ்வெல்ட், வின்ஸ்டன் சேர்ச்சில் ஆகியோர் தமது கசபிளாங்கா உச்சி மாநாட்டை முடித்துக் கொண்டனர்.
- 1966 - ஏர் இந்தியா விமானம் ஒன்று பிரான்சுக்கும் இத்தாலிக்கும் இடையில் வீழ்ந்ததில் 117 பேர் கொல்லப்பட்டனர்.
- 1972 - இரண்டாம் உலகப் போரில் காணாமல் போன ஜப்பானிய படைவீரனான சொயிச்சி யாக்கோய் என்பவன் குவாம் காடு ஒன்றில் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டான்.
- 1978 - கொஸ்மொஸ் 954 என்ற சோவியத் செய்மதி பூமியின் வளிமண்டலத்துள் எரிந்து அதன் பகுதிகள் கனடாவின் வடமேற்குப் பிரதேசத்தில் வீழ்ந்தன.
- 1984 - முதலாவது ஆப்பிள் மாக்கின்டொஷ் கணினி விற்பனைக்கு வந்தது.
- 1986 - வொயேஜர் 2 விண்கலம் யுரேனசின் 81,500 கிமீ தூரத்துக்குள் வந்தது.
- 1993 - துருக்கிய ஊடகவியலாளரும் எழுத்தாளருமான ஊகுர் மும்க்கு அங்காராவில் கார்க் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டார்.
- 1996 - மாஸ்கோவுக்கு உளவு பார்த்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட நிலையில் போலந்துப் பிரதமர் ஜோசப் அலெக்ஸ்கி தனது பதவியைத் துறந்தார்.
- 2006 - இலங்கை ஊடகவியலாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜன் திருகோணமலையில் ஆளுநர் செயலகத்திற்கு அருகாமையில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 2007 - சூடானிலிருந்து 103 பயணிகளுடன் சென்ற விமானம் நடு வானில் கடத்தப்பட்டது.
- 2009 - இலங்கை ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட அரசுத்தலைவர் தேர்தலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் கொழும்பில் காணாமல் போனார்.

### பிறப்புகள்

- 1924 - சி. பி. முத்தம்மா, இந்தியப் பெண் சாதனையாளர். (இ. 2009)
- 1941 - தான் செட்சுமன், வேதியியலுக்கான நோபல் பரிசு பெற்ற இசுரேலியர்.
- 1970 - நீல் ஜான்சன், சிம்பாப்வே துடுப்பாட்டக்காரர்.
- 1987 - லூயிசு சுவாரெசு, உருகுவாய் கால்பந்தாட்ட வீரர்.

### இறப்புகள்

- 817 - நான்காம் ஸ்தேவான் (திருத்தந்தை)
- 1965 - வின்ஸ்டன் சர்ச்சில், ஐக்கிய இராச்சியத்தின் பிரதமர், இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றவர். (பி. 1874)
- 1966 - ஓமி பாபா, இந்திய இயற்பியலாளர். (பி.1909)
- 2006 - சுப்பிரமணியம் சுகிர்தராஜன், இலங்கை ஊடகவியலாளர். (பி. 1970)
- 2011 - பீம்சென் ஜோஷி, இந்திய பாடகர். (பி. 1922)
- 2012 ஸ்ரீ சுகுமார் அழீக்கோடு, இந்திய எழுத்தாளர். (பி. 1926)
- 2015 - வி. எஸ். ராகவன், தமிழ்த் திரைப்பட, நாடக நடிகர். (பி. 1925)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 50 | 50 | 70 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 95 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 300 | 200 | 200 | 250 | 250 | 300 |
| தக்காளி | 80 | 100 | 120 | 80 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 60 | 70 | 60 | 70 |
| கோவா | 30 | 40 | 20 | 30 | 40 | 30 |
| கரட் | 80 | 40 | 60 | 60 | 120 | 50 |
| பூசணி | 60 | 40 | 35 | 50 | 60 | 60 |
| புடோல் | 60 | 40 | 50 | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 60 | 40 | 60 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 120 | 140 | 80 | 100 | 100 | 70 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 80 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 100 | 200 | 70 | 200 | 200 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 70 | 90 | 120 | 100 |
| கருணைக்கிழங்கு | 60 | 100 | 50 | 50 | 80 | 50 |
| பயற்றங்காய் | 120 | 100 | 80 | 120 | 120 | 60 |
| லீக்ஸ் | 80 | 100 | 60 | 120 | 100 | 80 |
| பீற்றூட் | 80 | 100 | 50 | 80 | 80 | 80 |
| கறிமிளகாய் | 180 | 100 | 170 | 180 | 240 | 160 |
| முருங்கைக்காய் | 700 | 800 | 500 | 600 | 600 | 600 |
| போஞ்சி | 80 | 100 | 70 | 80 | 80 | 80 |
| கத்தரிதம்புள்ள | 80 | 20 | 20 | – | 60 | 70 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 20 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 200 | 100 | 150 | 200 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 55 | 50 | 50 | 65 | 50-60 | 40 |
| இராசவள்ளி | 200 | 100 | 150 | 180 | 200 | 180 |
| வெங்காயப்பூ | 100 | 100 | 200 | 140 | 160 | 200 |
| முள்ளங்கி | 50 | 100 | 60 | 60 | 60 | 70 |
| பொன்னாங்காணி | 35 | 40 | 30 | 30 | 40 | 20 |
| வல்லாரை | 10 | 20 | 20 | 20 | 30 | 20 |
| ஈரப்பலா | 60 | 100 | 50 | 60 | 100 | 60 |

வாக்குறுதி கொடுப்பவன் அதற்குக் கடனாளி ஆகிறான்.

– ஃபிராங்ளின்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வடக்கு மாகாண அரசின் நிர்வாகம் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்

வடக்கு மாகாண சபையின் நிர்வாக ஒழுங்குகள் மிகவும் மோசமாகி வருவதை மக்கள் உணரத் தலைப்பட்டுள்ளனர். ஒவ்வொருவரும் தத்தம் போக்கில் செல்வதை உணர முடிகின்றது.

நிர்வாகக் கட்டமைப்புக்களில் செல்வாக்குக் கலாசாரம் புரையோடியிருப்பதை அவதானிக்கலாம்.

இவற்றைத் தனியொரு முதலமைச்சரால் நிவர்த்தி செய்ய இயலாதென்பது மறுதலிக்க முடியாத உண்மை. எனவே வடக்கு மாகாண அரசு இது விடயத்தில் அதீத கவனம் செலுத்த வேண்டும்.

பொதுவில் தேவையற்ற விடயங்கள் மீது அதிக நேரத்தைச் செலவிட்டு மாகாண சபை அமர்வுகளின் பிரயோசனம் வீணடிக்கப்படுகிறது. ஒவ்வொரு உறுப்பினர்களும் தமக்கான கடமையை உணர்ந்து செயற்பட வேண்டும்.

நமக்கென்ன என்ற போக்கில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் செயற்படுவார்களாயின் எங்களின் எதிர்காலம் என்பது அதள பாதாளத்தில் விழுந்து விடும்.

வடக்கு மாகாண முதலமைச்சரின் அலுவலகத்துக்கு முன்பாக ஒவ்வொரு நாளும் ஆர்ப்பாட்டம் நடக்குமளவில் நிலைமை மாறியுள்ளது.

ஆர்ப்பாட்டம் செய்பவர்களின் பிரச்சினைக்கு சரியான தீர்வு பெற்று கொடுக்கப்படவில்லை.

கூடவே வடக்கு மாகாணத்தின் அமைச்சுக்களின் செயற்பாடுகளைப் பார்க்கும் போது அமைச்சர்களும் அதன் செயலாளர்களும் தன்னியக்கச் செய்மதிகள் போல இயங்குகின்றனர்.

அதிலும் குறிப்பாக வடக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயற்பாடுகளைப் பார்க்கும் போது சரியான நிர்வாக ஒழுங்குகள் இல்லை என்பது தெரிகிறது.

கூடவே முதலமைச்சரின் நிர்வாகப் பணிகளைக் கையாள்பவர்கள் முதலமைச்சரைத் தவறாக வழிப்படுத்துகின்றனர் என்ற கருத்தும் முன்வைக்கப்படுகின்றது. இவற்றில் உண்மைகள் உண்டு என்பதை அடியோடு மறுத்துவிடவும் முடியாதுள்ளது.

வடக்கு மாகாண அரசு என்பது தமிழ் மக்களின் இதயத் துடிப்பு போன்றது. நமக்குக் கிடைத்த வடக்கு மாகாண அரசை நாம் செம்மையாக வழிப்படுத்தத் தவறுவோமாயின் அது ஒட்டுமொத்தத் தமிழ் மக்களினதும் நிர்வாகத் திறனுக்கு மிகப்பெரும் இழுக்கு என்பதுடன் தமிழர்களுக்கு நிர்வாகம் நடத்தத் தெரியாது என்றாகிவிடும்.

உண்மையில் ஒரு காலத்தில் இலங்கையின் நிர்வாகத்தை தமிழர்களே சிறப்பாக நடத்தினர். ஆனால் இன்று தமிழர்கள் தங்களுக்குக் கிடைத்த அரசின் நிர்வாகத்தைச் செம்மையாக நகர்த்த முடியாதவர்களாக இருக்கின்றனர்.

உலகம் போற்றக்கூடிய முதலமைச்சரைத் தமிழ் மக்கள் கிடைக்கப் பெற்றுள்ளனர். ஆனால் முதலமைச்சருக்கு நிர்வாகப் பணிகள் செய்கின்றவர்கள் செல்வாக்கை பிரயோகிக்கின்றனர் என்றும் முதலமைச்சரை திசை திருப்பப் பார்க்கின்றனர் என்றும் பரவலாகப் பேசப்படுவது குறித்து முதலமைச்சர் கவனம் செலுத்த வேண்டும்.

இல்லையேல் நம்பிக்கெட்ட கதையாக நிலைமை முடிவதுடன் வடக்கு மாகாண அரசு எதனையும் செய்யவில்லையே என்ற நீங்காப் பழியையும் சுமக்க வேண்டி வரும்.

ஆகவே வடக்கு மாகாண அரசு விழித்துக் கொண்டு ஒட்டுமொத்த நிர்வாகத்தையும் செம்மைப்படுத்தி எம் இனத்தின் பெயரைக் காப்பாற்றுவது அவசர தேவையாகும்.

# அம்பாந்தோட்டை மக்களிடம் ராஜபக்ஷவினரின் எதிர்காலம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உட்பட அவர் தலைமையிலான குழுவினர் அதிகாரம் பறிபோன வெறியில் செயற்படுகின்றனரோ என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சி. அலவத்துவல தெரிவித்துள்ளார்.

குருநாகலில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றிய அவர்,

அரசாங்கத்தின் அபிவிருத்தி செயற்பாடுகளால், கூட்டு எதிர்க்கட்சியின் அரசியல் எதிர்காலம் சூனியமாகி விடும் என்ற காரணத்தினால், அந்த குழுவினர் இப்படி செயற்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

மக்களை வீதியில் இறக்க போவதாக கூறும் முன்னாள் ஜனாதிபதி கடந்த ஆட்சிக்காலத்தில் நியாயமான கோரிக்கைக்காக வீதியில் இறங்கிய மக்களுக்கு தோட்டாக்களால் பதிலளித்ததை மக்கள் இன்னும் மறக்கவில்லை.

பொது மக்கள் பயன்படுத்திய வாக்குகளினாலேயே மகிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்தார் என்பதை மறந்து விடக் கூடாது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை அண்மித்த பிரதேசங்களில் அபிவிருத்தி ஏற்பட்டால், ராஜபக்ஷவினர் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இருந்து நாடாளுமன்றத்திற்கு செல்வது கனவாகி போகும்.

இதனால், மக்களை தூண்டி சூழ்ச்சிகளையும் ஏனைய அவதூறுகளையும் ஏற்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபடுவது முன்னாள் ஜனாதிபதி ஒருவருக்கு உகந்த செயல் அல்ல.

அரசியல் கொள்கை எதுவாக இருந்தாலும் தமது மாவட்டத்திற்கும் நாட்டுக்கும் முன்னேற்றம் ஏற்படுமாயின் அதற்கு உதவ வேண்டியது அரசியல்வாதிகளின் கடமை.

எனினும் அம்பாந்தோட்டை மக்கள் பொருளாதாரம் மற்றும் கல்வி ரீதியில் முன்னேறினால், தமது குடும்பத்தின் அரசியல் எதிர்காலம் இருளாகி போகும் என்பதை அறிந்த ராஜபக்ஷவினர், அம்பாந்தோட்டை மக்களின் வாழ்க்கையை இருளில் தள்ள முயற்சித்து வருகின்றனர் எனவும் அலவத்துவல மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)

## தே.அ. அட்டை கண்டெடுப்பு

கொட்டோலை துர்க்காபுரத் தைச் சேர்ந்த (தெல்லிப்பழை) கார்த்திகேசு தவகுமாரன் என்பவருடைய 512703941V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் வலம்புரி பத்திரிகைக் காரியாலயத்தில் அலுவலக நேரத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். (இ-3)

## கூட்டு எதிரணியில் முஸ்லிம் அமைச்சர்

கூட்டு எதிரணி எதிர்வரும் 27 ஆம் திகதி மாலை 3 மணிக்கு நுகேகொடையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் ஏற்பாடு செய்துள்ள கூட்டத்தில் தற்போது அரசாங்கத்தில் பதவி வகிக்கும் முஸ்லிம் அமைச்சர் ஒருவர் மேடையேறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சரவை அந்தஸ்துள்ள முஸ்லிம் அமைச்சர் ஒருவர் அரசாங்கத்திலிருந்தும் விலகி மகிந்த ராஜபக்ஷவின் அணியில் இணைந்து கொள்வதற்கு பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருவதாக முஸ்லிம் முற்போக்கு முன்னணியின் தலைவரும் குருநாகல் மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் குருநாகல் மாவட்ட அமைப்பாளரும் குருநாகல் மாநகர சபை உறுப்பினருமான அப்துல் சத்தார் தெரிவித்தார்.

குறித்த முஸ்லிம் அமைச்சர் மகிந்த ராஜபக்ஷவின் அணியில் இணைந்து கொள்வது உறுதியென்றும் தற்போது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார். நல்லாட்சி அரசாங்கத்தில் முஸ்லிம்கள் பல சவால்களை எதிர்நோக்கியிருப்பதாகவும் முஸ்லிம்களுக்கு இந்த அரசாங்கத்தில விமோசனம் கிடைக்காது என்ற அடிப்படையில் அந்த அமைச்சர் அரசிலிருந்தும் விலகவுள்ளதாகவும் அப்துல் சத்தார் தெரிவித்தார். (இ-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று செவ்வாய்க்கிழமைகாலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை யாழ். பிரதேசத்தில சக்களாவத்தை, இரும்புமதவடி, மாலுசந்தி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் தாண்டிக் குளத்திலிருந்து சின்ன வலயன் கட்டு வரை, மறக்கம்பளையிலிருந்து மணிபுரம் வரை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் பறயனாலங்குளத்திலிருந்து தலைமன்னார் வரை, வங்காலை கடற்படை முகாம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம், கமலாம்பிகை அரிசி ஆலை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், கீரி ஜஸ் தொழிற்சாலை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், ஆவேமரியா ஜஸ் தொழிற்சாலை, மன்னார் வைத்தியசாலை, விசேட அதிரடிப்படை முகாம், வங்காலைப்பாடு ஜஸ் தொழிற்சாலை, எருக்குப்பிட்டி பம் கவுஸ், மீன்பிடி சமாசம், அந்தோனிப்பிள்ளை ஜஸ் தொழிற்சாலை, கூல்மென் ஜஸ் தொழிற்சாலை, தலை மன்னார் கடற்படை முகாம், சீனத் துறைமுகம் ஆகிய பிரதேசங்களிலும் மின்தடைப்படும். (இ-9)

## சாஸ்திரங்கள்

✦ இறந்தவர்களுக்கு திதி, திவசம் கொடுக்கும் நாட்களில் சூரிய உதயத்திற்கு முன்னரே பல் துலக்கிவிட வேண்டும். சூரியன் உதித்த பின் பல் துலக்குபவன் செய்கின்ற திதி, திவச காரியங்களில் எவ்வித பிரயோசனமும் இருக்காது. இதனால் பித்ருக்கள் துக்கமே அடைவர்.

-பத்மபுராணம்

✦ வைகாசி மாதத்தில் தினமும் ஒருவேளை மட்டும் போஜனம் செய்து பூஜிப்பவர்கள் ஆணாகட்டும் பெண்ணாகட்டும் தம் குலத்தோரில் சிறந்தவராவார்.

-பீஷ்மர்

✦ அரசங்குச்சி, நெல்லிக்குச்சி, வில்வக்குச்சி முதலானவற்றைப் பல் துலக்க உபயோகிக்கக் கூடாது. இந்திர விருட்சம், தேவ விருட்சம் முதலானவற்றின் குச்சிகளையும் உபயோகிக்கக்கூடாது. இந்தக் குச்சிகளைப் பல்துலக்க உபயோகிப்பதால் அன்றைய நாள் முழுவதும் வியர்த்தமாக (பயனின்மை) ஆகிவிடும்.

-பத்மபுராணம்

✦ பூமாலைகளை ஒரு ஆணியிலோ, கயிற்றிலோ, தொங்கவிடுவது குற்றமாகும். (பூக்கடையிலும், கல்யாண மண்டபங்களிலும் இவ்வாறு தொங்க விடப்படுவதைக் காணலாம்) பூமாலை உங்கள் தெய்வ விக்ரகத்துக்குச் சமமானதாகும். ஆகவே அதை தரையில் சுத்தமான இடத்தில் படுக்க வைக்கவும்.

-ஸ்ரீகாரணம்

✦ வீட்டுக்கு வந்த விருந்தினர்களிடம் உங்கள் ஜாதி என்ன? என்று கேட்பது கூடாது. அவர்களிடம் பொய் வார்த்தை சொல்லக்கூடாது.

-ஸ்ரீகிருஷ்ண பகவான்

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்




❖ பெரும் பணிகள் யாவும் பலத்த இடையூறுகள் வாயிலாகவே கைகூடுகின்றன. ஆண்மையோடு முயலுங்கள். பெண்ணாசை, பொன்னாசை இவற்றிற்கு வசப்பட்ட அற்பர்களைப் பொருட்படுத்த வேண்டாம்.


❖ நண்பா ஏன் அழுகிறாய்? உனக்குள் எல்லாச் சக்தியும் உள்ளது. பலசாலியே உனது எல்லாம் வல்ல இயல்பை வர வழை.மூவுலகும் உனது காலடியில் அமரும். வெல்வது ஆன்மா ஒன்றே. சடமல்ல. உடலக்ளோடு தம்மை ஒன்று படுத்திக் கொள்ளும் மூடர்களே பலவீனர்களே. பலவீனர்கள். நாங்கள் பலவீனர்கள் என்று இரக்கமெழக் கதறுவார்கள்.

❖ நாடு வேண்டுவது துணிச்சலும் விஞ்ஞான அறிவும் மிக்க தீரமும் பேராற்றலும் அளவில்லா ஊக்கமுமே. பேடித்தனம் உதவாது. சிங்கத்தின் தீரமுள்ள செயல் வீரனையே திருமகள் நாடுவாள். பின்னால் பார்க்கவேண்டியதே இல்லை. முன் செல்க! எல்லையில்லா வலிமையும் எல் லையில்லாத ஊக்கமும் எல்லையில்லா தீரமும் எல் லையில்லாத பொறுமையும் நமக்கு வேண்டும். அப்போது தான் பெரும் பணிகளை ஆற்ற இயலும்.

# இமையாணன் மத்தி சொக்கர்லீக் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டம்






. இமையாணன்மத்திசொக்கர் லீக் வெற்றி கிண்ண உதைபந்தாட்டப்போட்டியில் (22.01.2017) நடைபெற்ற முதல் போட்டியில் ஏலியன்ஸ் வோய்ஸ் பாயும் புலிக்கான போட்டியில் .02:01 என்ற அடிப்படையில் ஏலியன்ஸ் போய்ஸ் வெற்றி பெற்றது.

இதில் பாயும் புலி சார்பாக இந்துகான் ஒரு கோலை போட பதில் அதிரடியாக ஏலியன்ஸ் போய்ஸ் சார்பாக சதுர்சன், கலையமுதன் ஒவ்வொரு கோல்களை பதிவு செய்தார்கள்.

இதில் ஆட்டநாயகனாக கலையமுதன் தெரிவானார்.

நடைபெற்ற இரண்டாவது போட்டியில் ரெட் கிங்ஸ் அணியை எதிர்த்து விளையாடிய பிளாக்ஹெறாக்ஸ் அணியினர் 04:00 அடிப்படையில் வெற்றி பெற்றது.

இதில் செந்தாளன், சுலக்சன், நிறுபன்,சித்து தலா ஒவ்வொரு கோலைப்போட்டார்கள்.


ஆட்டநாயகனாக நிறுபன் தெரிவானார்.

தொடர்ந்து நடைபெற்ற மூன்றாவது போட்டியில்இமையூர் லயன்ஸ் அணியை எதிர்த்து விளையாடிய அயன் ஸ்ரார் 01:00 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது. இதில் அயன் ஸ்ரார் அணி சார்பாக சருயன் ஒரு கோலை போட்டார். இதில் ஆட்டநாயகனாக திவாகர் தெரிவானார். (க)




யாழ்.பிரதேச செயலகத்துக்குட்பட்ட கழகங்களுக்கான இடையில் நடைபெற்ற வலைப்பந்தாட்ட போட்டியில் கொட்டடி K.C.C விளையாட்டு கழகம் சம்பியனானது.வெற்றிபெற்ற அவ் அணியினரை படத்தில் காணலாம்.

## வதிரி டயமன்ஸ் அணியை வீழ்த்தி உடுப்பிட்டி சிவகுமரன் சம்பியன்

கரவெட்டி பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்கள் பங்குபற்றும் பெண்களுக்கான கரப்பந்தாட்ட தொடரின் (22.01.2017) அன்று நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் மாலுசந்தி மைக்கல் அணியை வீழ்த்தியது வதிரி டயமன்ஸ் அணி. தொடர்ந்து நடைபெற்ற இறுதிப்போட்டியில் வதிரி டயமன்ஸ் அணியை வீழ்த்தி உடுப்பிட்டி சிவகுமரன் அணி சம்பியனாகியது. (க)

## குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக யாழ்.மாவட்ட ரீதியிலான உதைபந்தாட்டம்

## யங்ஹென்றீஸ் வெற்றி

குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியில் நடத்திய அணிக்கு 9 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுத்தொடரின் (22.01.2017) நடைபெற்ற இறுதி போட்டியில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்தை எதிர்கொண்ட இளவாலை யங்ஹென்றீஸ் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியுள்ளது.

போட்டி தொடங்கிய முதல் நிமிடத்தில் அதிரடியாக மதுஷன் முதல் கோலினை ஹென்றிஸ் அணிக்காக போட்டு முன்னிலைப் படுத்தினார். இதற்கு பதிலடியாக 13வது நிமிடத்தில் றோயல் அணி கோல்போட்டு அசத்தியது.

அணியின் வெற்றிக்கோலினை இருஅணியினரும் போட முற்பட்ட போதும் பயனளிக்கவில்லை. ஆட்ட நேர முடிவில் 1:1 என ஆட்டம் சமநிலையாக வெற்றியாளரை தீர்மானிக்கும் சமநிலை உதை முடிவில் ஹென்றிஸ் அணி 6:5 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மேலும் ஹென்றிஸ் அணி அராலி மாவத்தை வி.க பொங்கல் தினத்தை முன்னிட்டு வலிகாமம் உதைபந்தாட்ட லீக் அணிகளுக்கிடையில் நடத்திய உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் சென்நியூஸ்ரார் அணியை 2:1 எனும் கோல்கணக்கில் வீழ்த்தி இவ்வருடத்தின் முதல் கிண்ணத்தைக் கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது. (க)




யாழ்பிரதேச செயலக கழகங்களுக்கடையிலான பெண்களுக்கான எல்லே போட்டியில் நாவாந்துறை புனித நீக்கிலார் அணி முதலாமிடத்தை பெற்றுக கொண்டது.வெற்றி பெற்ற அவ் அணியினரை படத்தில் காணலாம்.

# கசிப்பு உற்பத்தி தடுப்பு சந்தேக நபர் கைது



(சாவகச்சேரி)

வரணி வடக்கு கும்பிட்டான் குளப்பகுதி பற்றைக்காட்டில் இருந்து தண்ணீர் கலக்காத 24 லீற்றர் ஸ்பிறிட் உடன் அதனைக்கொண்டு வந்த சந்தேக நபர் ஒருவரையும் கொடிகாமம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

அப்பகுதியில் கசிப்பு உற்பத்தி செய்யப்படுகிறது என பொதுமக்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலை அடுத்தே குறித்த பகுதியில் இரகசிய பொலிஸார் மறைந்திருந்து சந்தேக நபர் ஒருவரை கைது செய்துள்ளனர்.

அவரிடம் மேற்கொண்ட விசாரணையை தொடர்ந்து குறித்த பற்றைக்காட்டுக்குள் இருந்து கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தும் உபகரணங்களையும் கைப்பற்றியுள்ளனர்.

அங்கு கைபபற்றப்பட்ட ஸ்பிறிட்டை தண்ணீரோடு கலந்து சுமார் 90 லீற்றர் வரையான கசிப்பை உற்பத்தி செய்ய முடியுமென பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்ட நிலையில் பொலிஸ் பிணையில் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் தினங்களில் பிரஸ்தாப நபர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார் எனவும் கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.(செ-89)

## ஜெனிவாக் கூட்டத் ...

நியமனம் வழங்கும் நிகழ்வு கடந்த மே மாதம் 27ஆம் திகதி நீதி அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ தலைமையில் யாழ் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ் மாவட்டத்தில் அமைக்கப்பட்ட விசேட மத்தியஸ்த சபையில் (காணி) 27 மத்தியஸ்தர்களுக்கும் கிளிநொச்சி மாவட்ட மத்தியஸ்த சபையில் (காணி) 17 மத்தியஸ்தர்களுக்கும் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

குறித்த மத்தியஸ்த சபையானது வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களிலும் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு மாவடடங்களிலும் மத்திய மாகாணத்தில் அநுராதபுரத்திலும் நீதி அமைச்சின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் குறித்த நியமனம் வழங்கப்பட்ட நாளில் இருந்து இந்த மத்தியஸ்தர்களுக்கான 3 நாட்கள் பயிற்சிப்பட்டறை நடைபெறும் என்றும் அதன் பின்னர் வடகிழக்கில் உள்ள காணி பிணக்குகள் தொடர்பாக பிரச்சினைக்கு தீர்வுகள் இணக்கங்கள் என்பன இவர்களால் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டது. இவ் விடயம் ஜெனிவா கூட்டத்தொடரிலும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் கடந்த வருடம் மே மாதம் நியமனம் வழங்கப்பட்டு 3 நாள் பயிற்சிப்பட்டறையின் பின்னர் குறித்த மத்தியஸ்தர் சபையால் காணி தொடர்பான பிணக்கு நடவடிக்கைகள் எவையும் மேற்கொளளப்படவும் இல்லை அதற்கான அதிகாரங்கள் ஏற்பாடுகள் எவையும் குறித்த மத்தியஸ்தர்களுக்கு வழங்கப்பட்டதாகவும் தெரியவில்லை.

இந்த நிலையில் நேற்றைய தினம் யாழ் மாவட்டச் செயலகத்தில் குறித்த மத்தியஸ்தர்களுக்கான 3 நாட்கள் பயிற்சிப்பட்டறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப் பயிற்சிப் பட்டறையானது எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள ஜெனிவா கூட்டத்தொடரை இலக்கு வைத்து ஒரு கண்துடைப்புக்காக இடம்பெறுகிறதா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

அத்துடன் இனிமேற்கொண்டு தொடர்ச்சியாக இச் சபை இயங்குமா? மக்களுக்கு நன்மை பயக்குமா? என்ற சந்தேகமும் சமூக ஆர்வலர்கள் மத்தியில் எழுந்துள்ளது. (செ-9)

## எதிர்ப்புக்கள் ஏற்படு ...

த்தால் அப்பகுதியில் குடியமர்த்தப்பட்டார்கள்.

அதனை தொடர்ந்து குறித்த பிரதேசத்தில் உள்ள மேலதிக காணிகளில் காணிகள் அற்ற மேலும் சில குடும்பங்கள் குடியேற்றப்பட்டு தற்போது அப்பகுதியில் 200 தமிழ்க் குடும்பங்களும் 53 சிங்கள குடும்பங்களும் வசித்து வருகின்றன.

இந்த நிலையில் வீடமைப்பு அதிகார சபையால் இந்த வருடம் 200 தமிழ் குடும்பங்களுக்கும் 50 சிங்களக் குடும்பங்களுக்கும் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதுடன் 5 லட்சம் ரூபாய் பெறுமதியிலான வீட்டு திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 31ஆம் திகதி குறித்த வீட்டுத் திட்டத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு தேசிய வீடமைப்பு அதிகாரசபை அமைச்சர் தலைமையில் நடைபெறவுள்ள நிலையில் அப்பகுதியில் சிங்கள மக்களுக்கு காணிகளை வழங்குவதற்கு அனுமதிக்க முடியாது என்றும் தமிழ் மக்கள் காணியற்று இருக்கும் போது அத்துமீறி குடியேறியுள்ள சிங்கள மக்களுக்கு காணிகள் வழங்கப்படக்கூடாது இச் செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என கடந்த வாரம் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் வட மாகாண சபை உறுப்பினர்கள் சிலர் சுட்டிக்காட்டி எதிர்ப்பு தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் தேசிய வீடமைப்பு அதிகார சபையால் 5 லட்சம் பெறுமதியிலான வீட்டுத் திட்டம் யாழ் மாவட்டத்தை சேர்ந்த 434 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது.

# அரசியல் போதும்!

## ஹெகலிய

இருபது வருடங்களுக்கு மேலாக அரசியலில் ஈடுபட்டது போதும் என நினைப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

கொழும்பு பத்தரமுல்லையில் உள்ள கூட்டு எதிர்க்கட்சியின் பிரதான அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

எனினும் தற்போதைய அரசாங்கத்தின் கெடுதியான செயற்பாடுகள் காரணமாக அரசியலில் இருந்து விலக முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. கடந்த அரசாங்கத்தின் காலத்தில் வேலைவாய்ப்புகளை வழங்கவில்லை, முகத்தை பார்த்து சிரிக்கவில்லை, கிளை கூட்டங்களில் கலந்து கொள்ளவில்லை என மக்கள் தற்போதும் என் மீது குற்றம் சுமத்துகின்றனர்.

நாடாளுமன்றத்தில் தலைமைகளை மாற்றும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அது பற்றி கூற முடியாத விடயங்கள் உள்ளன எனவும் ஹெகலிய ரம்புக்வெல குறிப்பிட்டுள்ளார். (செ-11)

அதற்கான அத்திபாரம் வெட்டும் பணிகள் கடந்த 10 நாட்களாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆனால் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் குறித்த விடயம் தொடர்பாக எதிர்ப்பு வெளியிடப்பட்ட காரணத்தாலும் தொடர்சியாக எதிர்ப்புக்கள் வெளிக்கொண்டு வரப்படுமிடத்து குறித்த வீட்டுத் திட்டத்தை தேசிய வீடமைப்பு அதிகார சபை முற்றுமுழுதாக நிறுத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக தெரியவருகிறது.

இதேவேளை நாவற்குழி பகுதியில் உள்ள தமிழ் மக்கள் கருத்து தெரிவிக்கையில், நாம் 7 வருடங்களுக்கு முன்னர் வீதிகளில் வாழ்ந்து வந்தோம். எமக்கான காணிகள் வீடுகள் எவையும் இல்லை. எம்மை யாரும் கண்டு கொள்ளவும் இல்லை. அதன் பின்னர் இப் பகுதியில் வந்து குடியமர்ந்தோம். யாரும் எந்தவிதமான உதவிகளும் எமக்கு செய்யவில்லை. தற்போது வீட்டுத்திட்டம் தருவதாக கூறி எமது குடிசைகளை அகற்றுமாறும் அத்திபாரங்களை வெட்டுமாறும் தெரிவித்துள்ளனர்.

மிகவும் நம்பிக்கையுடன் இதை எதிர்பார்த்துள்ளோம். ஒவ்வொரு இயற்கை அனர்த்தத்தின் போதும் ஒருவர் கூட எமக்கு உதவுவதில்லை பல கஷ்டங்களை அனுபவித்து வருகிறோம் என தெரிவித்தனர்.

சிங்கள மக்கள் கருத்து தெரிவிக்கையில், நாம் பிறந்து வளர்ந்த பூமி இது. இடையில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக நாம் இந்த இடத்தை விட்டு சென்றோம். நாம் யாருடனும் சண்டை போடவில்லை தமிழ் மக்களும் எம்முடன் பிரிவினை காட்டவில்லை. எமது பிள்ளைகள் ஆங்காங்கே வேறு இடங்களில் வசித்து வருகின்றனர். யுத்தம் முடிந்து விட்டதாகவும் யாழ்பபாணத்தில் சமாதானம் ஏற்பட்டு விட்டதாகவும் கூறிய காரணத்தால் நாம் மீள்குடியமர்வதற்கு வந்தோம். இங்கு எமக்கான வசதிகள் உதவிகள் எவையும் செய்து தரப்படவில்லை.

இங்கிருந்து சென்ற போதும் வறியவர்களாக இருந்தோம். இங்கு வந்தும் மிகவும் வறிய நிலையில் வாழ்கிறோம். இருப்பினும் தற்போது வீட்டுத்திட்டம் தருவதாக தெரிவித்துள்ளனர். அதிலும் நாம் ஏமாற்றப்பட்டால் இங்கே இறந்து போவோம் இனியும் இந்த இடத்தை விட்டு செல்ல மாட்டோம் என தெரிவித்தனர். (செ-9)

## கிணற்றில் வீழ்ந்த ...

சின்னையா மார்க்கண்டம் (வயது 85) என்ற முதியவரே உயிரிழந்தவராவார்.

சடலமானது பிரேதப் பரிசோதனைக்காக நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் யாழ் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக் கப்பட்டு பிரேதப்பரிசோதனையின் பின்னர் நேற்று மாலை 4.00 மணியளவில் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (செ - 30)

## ஜல்லிக்கட்டை ...

செய்தார்.

ஜல்லிக்கட்டுக்கு கடந்த 2 ஆண்டுகளாக இந்திய உச்ச நீதிமன்றம் தடை விதித்தது. இந்த ஆண்டு பொங்கல் பண்டிகையையொட்டி ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெறாததால் கல்லூரி மாணவர்களும் இளைஞர்களும் வெகுண்டு எழுந்து போராட்டம் நடத்தினர்.

இதனால், அதை தொடர்ந்து தமிழக அரசு கடந்த 21ஆம் திகதி சனிக்கிழமை அவசர சட்டம் பிறப்பித்தது.

இந்த அவசர சட்டத்தை நிரந்தர சட்டமாக்க அதன் சட்ட வடிவு சட்டசபையில் தாக்கல் செய்து நிறைவேற்றப்பட வேண்டும்.

அதற்கான சிறப்பு கூட்டம் நேற்று மாலை 5 மணியளவில் தொடங்கியது. விலங்குகள் வதைத் தடுப்பு சட்ட திருத்த முன் வடிவினை முதலமைச்சர் ஓ. பன்னீர் செல்வம் தாக்கல் செய்து மசோதா குறித்து பேசினார்.

இந்த சட்ட முன் வரைவை, சட்டசபை எதிர்க்க்ட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் மற்றும் சட்டசபை காங்கிரஸ் தலைவர் ராமசாமி ஆகியோர் வரவேற்றுப் பேசினர்.

உறுப்பினர்களின் விவாதத்துக்கு பின்னர் குரல் வாக்கெடுப்பு மூலமாக புதிய சட்ட முன்வரைவு ஒருமனதாக நிறைவேறியதாக சபாநாயகர் தனபால் அறிவித்தார்.

இதையடுத்து சென்னை மெரினா கடற்கரையில் நடத்தி வந்த போராட்டத்தை இளைஞர்கள் வாபஸ் பெற்றதுடன் கடற்கரையில் இருந்து இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் கலைந்து சென்றனர்.

நீதியரசர் ஹரி பரந்தாமன் ஜல்லிக்கட்டு நிரந்தர சட்டம் பற்றி மாணவர்கள் மத்தியில் விளக்கிக் கூறியதை அடுத்து மாணவர்கள் மெரினா போராட்டத்தை வா்பஸ் பெற்றுக் கொள்வதாக அறிவித்தனா்.

இது தொடர்பாக இயக்குநர் கௌதமன் நேற்று தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது.

"ஜல்லிக்கட்டுக்கு நிரந்தர தீர்வு காண வலியுறுத்தி மாணவர்கள் நடத்திய போராட்டம் முழுவெற்றி பெற்றுள்ளது. ஜல்லிக்கட்டு சட்டத்தை முழு மகிழ்வோடு ஏற்கிறோம். ஜல்லிக்கட்டு சட்டம் நிறைவேற்றப்பட்டதை அடுத்து போராட்டத்தை உடனடியாக கைவிடுகிறோம்" என்றார்.

முன்னதாக, தமிழகம் முழுவதும் கடந்த ஒரு வாரமாக ஜல்லிக்கட்டு கோரியும், பீட்டா அமைப்புக்கு தடை கோரியும் அறவழியில் பலரும் போராட்டத்தில் ஈடுபட்டு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

*(மேலும் செய்திகள் உள்ளே)* (செ-11)

## காலம் கடத்துவதற் ...

அண்மையில் பிரித்தானியாவுக்கு விஜயம் செய்திருந்த வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அமைப்பது குறித்து கருத்துத் தெரிவித்திருந்த போதும் போர்க்குற்ற விசாரணை பொறிமுறை குறித்து எதனையும் தெரிவிக்கவில்லை.

இதுகுறித்து அதிருப்தி வெளியிட்டுள்ள சிவில் சமூக அமைப்புக்கள், இதன்மூலம் போர்க்குற்ற விசாரணை பொறிமுறை நிறுவப்பட்டதன் பின்னரே உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு நிறுவப்பட வேண்டுமென்ற தமது கோரிக்கை, அரசாங்கத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளதென சுட்டிக்காட்டியுள்ளன.

அத்தோடு, ஐ.நா தீர்மானத்துக்கமைவாக போர்க்குற்ற விசாரணையை விரைவாக அமுல்படுத்த வேண்டுமெனவும் சர்வதேச நீதிபதிகளைக் கொண்ட கலப்பு நீதிமன்ற முறை ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும் சிவில் சமூக அமைப்புகள் தமது பரிந்துரைகளில் குறிப்பிட்டிருந்தன.

இதனை அரசாங்கம் பரிசீலிக்க தயார் என்கின்ற உறுதிமொழியுடன் மட்டுமே மட்டுப்படுத்தியுள்ளதாக விசனம் வெளியிட்டுள்ள சிவில் சமூக அமைப்புக்கள் மேற்படி செயற்பாடுகள் காலத்தை வீணடிப்புச் செய்வதாகவும் குறை கூறியுள்ளன. (செ-9)

# 3616 பேருக்கு டெங்கு பாதிப்பு




நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 3616 டெங்கு நோயாளர்கள் நாடளாவிய ரீதியில் இனங் காணபபட்டுள்ளதுடன் 11 பேர் மரணமடைந்துள்ளனர்.

மேல், தென் மற்றும் வட மாகாணங்களிலேயே அதிகமான டெங்கு நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர்.

மேலும் தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தை இன்று தொடக்கம் பிரகடனப்படுத்த சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு விசேட செய்தியாளர் சந்திப்பொன்றை அண்மையில் நடத்தியது.

இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவக்கும் போதே தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் இணைப்பாளர் வைத்தியர் ஹசித பெரேரா மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (செ-11)

## 53 மாணவர்கள் ...

நயினாதீவு நாகபூஷணி வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 53 பாடசாலை மாணவர்கள் பற் சிகிச்சை மேற்கொள்வதற்காக நேற்றைய தினம் காலை 8.45 மணியளவில் நயினாதீவில் இருந்து படகில் (லோஞ்) வேலணை வைத்தியசாலை நோக்கி பிரயாணம் மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது படகு நடுக்கடலில் இயந்திர கோளாறு காரணமாக பழுதாகியுள்ளது.

இதனை உடனடியாக சீர்செய்ய முடியாததன் காரணமாக சுமார் இரண்டு மணி நேரமாக நடுக்கடலில் 53 பாடசாலை மாணவர்களும் தத்தளிக்க வேண்டிய அச்ச நிலை ஏற்பட்டுள்ளது.

நயினாதீவில் வைத்தியசாலை இருந்தும் நிரந்தரமாக ஒரு வைத்தியர் இல்லாத காரணத்தால் இவ்வாறான இடர் நிலைமைக்கு மேற்படி மாணவர்கள் முகம் கொடுக்க வேண்டியுள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எனவே இது தொடர்பில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (செ-11)

# பொன்சேகாவிடம்...

இராணுவத் தளபதியாக இருந்த காலகட்டத்தில், லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்தப் படுகொலையில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு தொடர்புகள் இருப்பதாக தகவல்கள் வெளியான நிலையில், பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகாவிடம், கடந்த வெள்ளிக்கிழமை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் ஐந்து மணி நேரம் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

இந்த விசாரணைகளின் போது, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரின் நேரடி உத்தரவுகளைப் பெற்று, நீதிக்குப் புறம்பான செயல்களை மேற்கொள்ளும் தனியான குழுவொன்று இராணுவத்தில் இயங்கியது என்பதை, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஒப்புக் கொண்டுள்ளார்.

இந்த நடவடிக்கைகள் மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரண மூலமாகவே மேற்கொள்ளப்பட்டன என்றும் அவர் தெரிவித்தார்.

இதுபற்றி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கடந்த வெள்ளிக்கிழமை இரவு தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் வெளிப்படுத்தினார்.

முன்னாள் ஜனாதிபதியும் முன்னாள் பாதுகாப்புச் செயலருமே, லசந்த விக்கிரமதுங்க படுகொலைக்கு பொறுப்புக்கூற வேண்டும். போர் தொடர்பாக எமக்குள் கருத்து வேறுபாடு இருந்தாலும் லசந்த விக்கிரமதுங்கவுக்கும் எனக்கும் இடையில் குரோதம் இருக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், லசந்த விக்கிரமதுங்க படுகொலை தொடர்பான மேலதிக தகவல்களை பெறுவதற்காக, பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகாவிடம் இன்று மீண்டும் விசாரணைகள் நடத்தப்படவுள்ளது. (இ-3)

# ஜனாதிபதி முன்...

திரிபால சிறிசேன முன்வந்தால் அதற்கு ஒத்துழைப்பு வழங்கத்தயார் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் முக்கிய பங்காளிக் கட்சியான பிவித்துரு ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் உளவுத்துறையான சீ.ஐ.ஏ மற்றும் இந்திய உளவுப்பிரிவான றோ ஆகியோரே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் இணைத்திருப்பதாகவும், இந்தப் பிடியிலிருந்து மீண்டுவருவதானது ஜனாதிபதிக்கு மிகவும் சவாலான விடயம் எனவும் அக கட்சியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் பங்காளிக் கட்சியான பிவித்துரு ஹெல உறுமயவின் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்றைய தினம் நடைபெற்றது.

இதன்போது உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில, தேர்தலொன்று நெருங்கும்போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர்களுக்கு மகிந்த ராஜபக்ஷ நினைவுக்கு வருவார். ஏதாவது காரணத்தைக் கூறி அவரை தமது மேடையில் வரவழைக்காவிட்டால் வேட்பாளர்கள் படுதோல்வியை எதிர்கொள்வார்கள். ஜனாதிபதி மைததிரிபால சிறிசேன சுதந்திரக் கட்சியின் தலைவராக இருக்கும்வரை அக்கட்சியில் இணைந்து தேர்தலுக்கு களமிறங்குவதில்லை என்பதை ஏற்கெனவே நாங்கள் கூறியிருக்கின்றோம். உள்ளூராட்சி சபைத் தேர்தலை நாங்கள் இணைந்து எதிர்கொண்டால் வெற்றி நிச்சயம். இத்தேர்தலை கூட்டணியாக எதிர்கொள்ளாவிட்டால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தேசத்துரோக செயற்பாடுகள் குறித்து ஜனாதிபதிக்கு அதிருப்தி காணப்பட்டால் புதிய கூட்டணி ஒன்றை உருவாக்கலாம். எனினும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு வருவார் என்பது கனவிலும் நினைக்கமுடியாது. அது உயிருக்கு ஆபத்து ஏற்படும் தீர்மானமாகி விடும். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை அமெரிக்காவின் சி.ஐ.ஏ மற்றும் இந்தியாவின் றோ ஆகிய உளவுப் பிரிவுகளே ஒரே குவளையில் இட்டு கொங்கரீட் இட்டிருக்கின்றன. தலையைக் காப்பாற்றிக் கொள்வதற்கு இருவரும சண்டைபிடித்தாலும்கூட அவர்கள் கொங்கிரீட்டில் சிக்கியுள்ள படியினால், அதிலிருந்து மீண்டுவர முடியாது. எவ்வாறாயினும் அந்த துணிகரமான தீர்மானத்தை ஜனாதிபதி எடுப்பாராகில் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு நாங்கள் ஒத்துழைப்பை வழங்க தயாராகவே இருக்கின்றோம் என்றார். (செ-11)

# வடமராட்சி...

வடமராட்சியில் இருந்து முகவர் ஊடாக சுவிஸ் நாட்டிற்கு சென்ற தமிழ் இளைஞர் ஒருவர் மேற்கு ஆபிரிக்காவில் வைத்து அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

கரவெட்டி மத்தியைச் சேர்ந்த மனோகரன் இரவிச்சந்திரன் (வயது 22) என்ற விசேட தேவையுடைய இளைஞன் கடந்த 2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5ஆம் திகதியன்று 16 இலட்சம் ரூபாவினை முகவர் ஒருவரிற்கு வழங்கி இலங்கை விமான நிலையத்தில் இருந்து ஆபிரிக்காவுக்கு சென்றுள்ளார்.

அங்கு சிராலியோன் எனுமிடத்தில் தங்கி நின்ற நிலையில் சுவிஸ் நாட்டிற்கு அனுப்புவதாக தெரிவித்த முகவர் இழுத்தடிப்பு செய்து வந்த நிலையில் மேற்படி இளைஞர் முகவருடன் முரண்பட்டதாக கூறப்படுகின்றது.

இதனையடுத்து முகவர் அவ் இளைஞரை தாக்கிய நிலையில் அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டி ருந்த தாக இங்குள்ள உறவினர்களிற்கு தகவல் வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் அவர் மரணமடைந்துள்ளதாக நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை அங்கிருந்து தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் உறவினர்களினால் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று நேற்று திங்கட்கிழமை பதிவு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு வத்தளையைச் சேர்ந்த முகவரொருவர் மற்றும் கொக்குவிலை சேர்ந்த மற்றொரு முகவரூடாகவே பிரஸ்தாப இளைஞன் வெளிநாட்டிற்கு அனுப்பப்பட்டுள்ளதாக உறவினர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

மேலும் உயிரிழந்த இளைஞனின் சடலத்தை இலங்கைக்கு அனுப்புவதாயின் பதினைந்து இலட்சம் ரூபாய் பணத்தினை அனுப்பி வைக்குமாறு அங்கிருந்து கோரப்பட்டிருக்கிறது.

இதேவேளை இலங்கையில் இருந்து சென்ற பல இளைஞர்கள் ஆபிரிக்காவில் நிர்க்கதியான நிலையில் இருப்பதாகவும் அங்கிருந்து தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-60)

# பிள்ளை...

ள்ளது.

மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் சந்தேக நபர்களை நேற்று முன்னிலைப்படுத்திய போதே, மேலதிக நீதவான் எம்.முகைடீன், எதிர்வரும் 06ஆம் திகதி வரை சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சித் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான பிரதீப் மாஸ்டர் என அழைக்கப்படும் எட்வின் சில்வா கிருஸ்ணானந்தராஜா, கஜன் மாமா எனப்படும் கனகநாயகம் மற்றும் இராணுவப் புலனாய்வு உத்தியோகஸ்தர் எம்.கலீல் ஆகியோருக்கே எதிர்வரும் 06ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், 2005ஆம் ஆண்டு மட்டக்களப்பு புனித மரியாள் இணைப் பேராலயத்தில் நடைபெற்ற நத்தார் நள்ளிரவு ஆராதனையில் கலந்து கொண்டிருந்த போது சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் சந்தேக நபரான சிவநேசதுரை சந்திரகாந்தன் உட்பட 04 பேர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு வருகின்றனர்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் சந்தேகநபரான சிவநேசதுரை சந்திரகாந்தன் கடந்த 2015ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் திகதி கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-11)


## அறை வாடகைக்கு தேவை

யாழ்.நகரில் தனியார் நிறுவனமொன்றில் பணிபுரியும் பெண் ஒருவருக்கு யாழ்.நகரப்பகுதியில் அறை வாடகைக்கு தேவை.

தொடர்பு: 076 826 8208 (C-7332)

## விற்பனைக்கு

பாவித்த ஓடுகள் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு. 0776354574 (7598)

## மரண அறிவித்தல்

### பேரம்பலம் கணேசலிங்கம்

யாழ்ப்பாணம், கொழும்பு, E.S.P கம்பனி உரிமையாளர் பேரம்பலம் கணேசலிங்கம் நேற்றிரவு காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர் (சி-7339)

## கோல்டன் ஸ்ரார் ரெஸ்ரோரன்ட்

(ஆரியகுளம் சந்தி அருகாமை, யாழ்ப்பாணம்)

சுவை உலகின் "Superstar" வழங்கும்

■சிக்கன் பிறைட் ரைஸ் +200ml சோடா (கப்)
~~340/-~~ →240/-
காலை 10.00 மணிமுதல் 2.00 மணிவரை

■சிக்கன் நூடில்ஸ் +200ml சோடா (கப்)
~~340/-~~ →240/-
மாலை 5.00 மணிமுதல் 8.00 மணிவரை

(இன்று முதல் இருவாரங்களுக்கு... திங்கள், செவ், புதன், வியாழன் மட்டும்) (சி-7338)






## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

## கனடாவில் உயர்கல்வி

A/L சித்திபெற்றி விட்டீர்களா? குறைந்தளவு கட்டணத்துடன் கனடாவில் (வெளிநாட்டில்) படிக்க, உழைக்க, நிரந்தரமாக குடியேற ஆசையா? இன்றே, இப்பொழுதே தெளிவாக திட்டமிடுங்கள் காலத்தினை, பணத்தினை விரையமாக்காது உடனடியாக எம்மை நாடுங்கள். எம்மிடம் வருபவருக்கு பிரத்தியேகமான தனித்துவமான வழிகாட்டல்கள், ஆலோசனைகள் மற்றும் அனுமதிகளும் வழங்கப்படும்.

சர்வதேச அங்கீகாரம் பெற்ற உயர் கல்வி, குடியேற்ற ஆலோசகர்கள்

V4 EDUCATIONAL CONSULTANCY

49A சப்பல்லேன், யாழ்ப்பாணம். (யாழ் பொது நூலகம் முன்னால்)

0768226236 (சி-7337)

## வீடு வாடகைக்கு

பலாலி வீதி ஊரெழு பிள்ளையார் கோவிலடியில் தனி வீடு வாடகைக்கு உண்டு. (7593)

தொடர்பு: 077 729 5428

## FREE HOME DELIVERY

யாழ்.நகரம், நல்லூர், திருநெல்வேலி, கொக்குவில் பிரதேசங்களில் உள்ள வீடுகளுக்கு, நிறுவனங்களுக்கு 20 லீற்றர் குடிநீர் குறைந்த விலையில் வீட்டிற்கு கொண்டு வந்து தரப்படும்.

T.P: 077 338 4838, 077 634 7258 (7534)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.01.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.